# உதயன்



www.onlineuthayan.com

48 பக்கங்கள் சுடர் 28 கதிர் 036 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை (01/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# தமிழர் பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வு

## 13 இற்குப் 13 இல் புத்துயிர் என்கிறார் ராஜித



கொழும்பு, ஜனவரி 1

''மலர்ந்திருக்கும் 2013ஆம் ஆண்டில் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கமைய தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நிலையான தீர்வு எட்டப்படும். அதற்குத் தேவையான அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுவருகின்றோம்.''

இவ்வாறு மீன்பிடித் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நம்பிக்கை தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் பரிந்துரையின் பிரகாரமும், இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கமையவும் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனடிப்படையில் இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற ஆரம்பக்கட்ட பேச்சில் அரசின் சார்பாக அமைச்சர்

பார்க்க பக்கம் 4

2013

வாசகர்கள்
விளம்பரதாரர்கள்
அபிமானிகள்
அனைவருக்கும்

உதயனின்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

## மருத்துவர் சிவசங்கர் இன்று நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம், ஜன.1

மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர் இ.சிவசங்கர் இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றும் மருத்துவர் சிவசங்கர் கொக்காவில் இராணுவ முகாமுக்குச் சென்ற வேளையில் அவரைத் தடுத்து வைத்த படையினர் பின்னர் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பார்க்க பக்கம் 4

## புறோட்பான்ட் கட்டணம் இன்றுமுதல் குறைப்பு

கொழும்பு, ஜன.1

இணைய மற்றும் புறோட்பான்ட் சேவைகளுக்கான கட்டணக் குறைப்பு இன்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இணைய மற்றும் புறோட்

பார்க்க பக்கம் 4

## பரந்தன் சந்தியில் இளைஞரை நையப் புடைத்த பொலிஸார்

### மறித்த இடத்தில் நிற்கவில்லையாம்

கிளிநொச்சி, ஜன. 1

கிளிநொச்சி, பரந்தன் சந்தியில் வீதிப்போக்குவரத்துக் கடமையில் இருந்த பொலிஸார் இரண்டு இளைஞர்களை நையப் புடைத்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த விஜயகுமார் விமலரூபன் (வயது 26), ஆனந்தமூர்த்தி லோகேஸ்வரன் (வயது 24) ஆகிய இருவரும் உட்காயங்களுக்கு இலக்காகிக் கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது;

நேற்று மாலை 4.45 மணியளவில் வேலை முடிந்து இரு இளைஞர்களும் மோட்டார் சைக்கி

பார்க்க பக்கம் 4

## சமத்துவத்துக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

### புதுவருட வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு, ஜன.1

பிறக்கவிருக்கின்ற புத்தாண்டில் எமது தாய்நாடு ஜனநாயகம், மக்கள் மத்தியிலான சமத்துவம் மற்றும் அபிவிருத்தி முதலான அம்சங்களில் முன்னேற்றத்தைக் காணுவதற்கான இலக்குகளை அடைய அனைத்து சமூகத்தின

பார்க்க பக்கம் 4

## அனைவருக்கும் சமவுரிமை; புத்தாண்டில் கிட்ட வேண்டும்

### வாழ்த்துச் செய்தியில் ரணில்



கொழும்பு, ஜன.1

மக்களின் வாழ்க்கை முறையும் அவர்களின் எதிர்காலமும் பற்றிய பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள ஒரு காலகட்டத்திலேயே நாம் 2013 ஆம் ஆண்டை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கின்றோம்.

பார்க்க பக்கம் 4

## இலங்கையில் சிறுவர் போராளிகள் இல்லை

### ஒப்புக் கொண்டது ஐ.நா.

கொழும்பு, ஜன.1

இலங்கையில் சிறுவர் போராளிகள் இல்லை என்பதை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இலங்கையில் சிறுவர் போராளிகள் தொடர்பாக அண்மையில் விசாரணை நடத்தியிருந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கலாநிதி ராதிகா குமாரசுவாமி தலைமையிலான குழுவொன்று இந்த விசாரணையை மேற்கொண்டிருந்தது.

இந்த விசாரணைகளுக்காக ஐ.நா. பிரதிநிதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது இலங்கையில் சிறுவர்போராளிகள் இல்லை என்பதை அரசு உறுதிசெய்துள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த விசாரணைக் குழு சமர்ப்பித்த அறிக்கையை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்றுக்

பார்க்க பக்கம் 4

## புத்தாண்டு அதிரடிப் பரிசு எரிவாயு விலை அதிகரிப்பு



கொழும்பு, ஜன.1

பொருளாதாரச் சுமையால் பிறக்கின்ற புதுவருடத்தை இன்முகத்தோடு வரவேற்க முடியாமல் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்ற நிலையில், புதுவருடப் பரிசாக வருட ஆரம்பத்திலேயே சமையல் எரிவாயுவின்

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழக ஆரம்பம் குறித்து பொங்கலின் பின்னரே முடிவு

யாழ்ப்பாணம், ஜன.1

யாழ்.பல்கலைக்கழகத்தை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பில் தைப்பொங்கலுக்குப் பின்னரே முடிவு எடுக்கப்படும் எனப் பல்கலைக்கழகக் கலைப்பீட வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான பவானந்தன்,

பார்க்க பக்கம் 4

## கைகலப்பில் ஈடுபட்டால் இனி சட்ட நடவடிக்கை

### தனியார் பஸ் சாரதிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.1

தனியார் பஸ் சங்கத்தினர் எதிர்காலத்தில் முரண்படுவார்களாயின், கைகலப்பில் ஈடுபடுவார்களாயின் பொலிஸார் மூலமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளதாக

பார்க்க பக்கம் 4


CELEBRATING THE SUCCESS OF FIRST YEAR.

வாடிக்கையாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

புத்தாண்டை முன்னிட்டு எமது நிறுவனத்தில் மேற்கொள்ளும் அனைத்து புதிய பதிவுகளுக்கும் ரூபா.100,000.00 வெல்லும் ஓர் அரிய வாய்ப்பு.

*(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

15.01.2013க்கு முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்: 021-2219230

E-TRANSITION (PVT) LTD.

No:166/3, Navalar road, Jaffna. TP:021-2219230

info@etransition.net | www.etransition.net

எமது வலையமைப்பு

முள்ளியவளை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், நெல்லியடி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்பு நிலைக்கு மன்னார்

மன்னார், ஜன.01

கடந்த சில தினங்களாக வெள்ளப்பாதிப்புக்கு உள்ளாகியிருந்த மன்னார் மாவட்டம் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பெய்துவந்த மழை மல்வத்து ஓயாவின் நீர் என்பன குடிமனைக்குள் புகுந்ததினால் பெருமளவிலான குடும்பங்கள் இடம்பெயர்ந்ததுடன் மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது மன்னார் மாவட்டத்தில் சுமார் 35 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 757 பேர் தங்கியுள்ளனர். எஞ்சிய மக்கள் தங்களின் விருப்பப்படி சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக சீரான காலநிலை காணப்படுவதால் இருப்பிடம் திரும்பியவர்களுடைய வீடுகளைத் துப்புரவு செய்யும் பணிகளிலும் கிணறுகளைச் சுத்தம் செய்து குளோரின் இடும் பணிகளிலும் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு ஈடுபட்டு வருவதாக இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எம். ஏ.சி.முகமட் றியாஸ் தெரிவித்தார்.

இதேவேளை வெள்ள அனர்த்தத்தின் போது மக்களை மீட்பதற்கு உதவிபுரிந்த மன்னார் மாவட்ட அரச அதிபர் அரச திணைக்கள அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் தமது சீரான சேவைகளை வழங்கியமையால்தான் மக்களை பெரும் இழப்புகளிலிருந்து பாதுகாக்க முடிந்தது என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்தைத் தவிர ஏனைய பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவை சீராக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-400)

# நிறைவேற்று, நீதி, சட்டவாக்கம் துறைகளிடையே ஒற்றுமை அவசியம்

### முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.1

நிறைவேற்று, நீதித்துறை, சட்டவாக்கம், ஆகியன புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக செயற்படுதல் அவசியமாகும். இதில் ஏதேனுமொரு துறை மற்றைய துறைகளை மிதித்துக்கொண்டு மேலெழ முடியாது என்று சிரேஷ்ட அமைச்சரும், முன்னாள் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரண பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிறைவேற்று, நீதித்துறை, சட்டவாக்கம் ஆகிய மிக முக்கிய மூன்று துறைகளுக்கிடையில்ஏற்பட்டுள்ளபிரச்சினைகள் தொடர்பில் இதன்போது அமைச்சர்வெளிப்படையான முறையில் கருத்து வெளியிட்டார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியவை வருமாறு:-

நிறைவேற்று. நீதித்துறை, சட்டவாக்கம் ஆகியவற்றுக்கிடையில் மக்களுக்கு விளங்கும் வகையில் வெளிப்படையாகவே பிரச்சினைகள் கிளம்பியுள்ளன. நீதித்துறை மீது மக்களுக்குள்ள நம்பிக்கை குறைவடைந்துவருவதாக எமக்கு விளங்குகின்றது. மக்கள் மேற்படி நிறுவனத்தை வெறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் விடுபடவேண்டும் என்பதுடன், நாம் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.தாம் சரியென உரத்தக்குரலில் கூறுவதில் பயனேதுமில்லை. எவருடன் இருந்தாலும் சரி, சகோதரத்துவத்துடன் கடமையாற்ற கற்றுக்கொள்ள வேண்டும். மூன்று துறைகள் குறித்து நான் குறிப்பிட்டேன். அந்த மூன்று நிறுவனங்களும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். மாறாக ஒரு நிறுவனத்தை கீழே தள்ளிவிட்டு மற்றுமொரு துறை மீளெழ முடியாது - என்றும் அவர் தெரிவித்தார். (த-சி)

## அரச நாள்காட்டியில் பௌர்ணமிக்கு விடுமுறை இல்லை: கிளம்புகிறது எதிர்ப்பு

கொழும்பு, ஜன.1

2013ஆம் ஆண்டுக்கான அரச நாள்காட்டியில் பௌர்ணமி தினங்கள் வர்த்தக விடுமுறையாக அறிவிக்கப் படாததற்கு எதிராகப் பல பௌத்த அமைப்புகள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மேற்படி அமைப்புகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன என அறியமுடிகின்றது.

அதேவேளை, பௌர்ணமி தினம் வர்த்தக விடுமுறையாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் நாட்காட்டி அச்சிடும்போது ஏற்பட்ட கோளாறினால் மேற்படி தவறு ஏற்பட்டிருக்கலாம் என தான் நம்புகிறார் என்று பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன இதுதொடர்பில் கருத்து வெளியிடும்போது குறிப்பிட்டார்.

ஆனால், அச்சின்போது பிழைகள் ஏற்படவில்லை என்று அரச அச்சகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஜோன்செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## மின் தாக்கி இளைஞர் சாவு

மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மத்தி சுழிபுரத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவசந்தகுமார் தனுராஜே (வயது -18) இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கரப்பந்தாட்ட மைதானத்துக்கு மின்விளக்கைப் பொருத்தி மின்வயரை வீட்டு மின் இணைப்பில் பொருத்த முற்பட்டபோதே அவர் மின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## ஜி.சீ.ஈ. வினாத்தாள் கசிவு : சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பு

கொழும்பு, ஜன். 1

ஜி.சீ.ஈ. சாதாரணதர கேள்விப்பத்திரங்கள் வெளியானமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒரு விஞ்ஞான ஆசிரியர் உட்பட ஐந்து சந்தேக நபர்களுக்கும் கடுவெல நீதிமன்ற நீதிவானால் பிணை மறுக்கப்பட்டது. இவர்கள் ஏற்கனவே விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள். இவர்களுடன் இன்னுமொரு சந்தேக நபர் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட இருந்தார்.

பகிரங்கமாக நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி ஜயரட்ண கருத்துத் தெரிவித்ததாவது:-

பரீட்சைத் திணைக்களத்தினால் ஒருவர் பணிக்கு அமர்த்தப்படும்போது அந்தப் பணியின் இரகசியத் தன்மையை அவர் பாதுகாக்க வேண்டும். இவர்களுக்குப் பிணை வழங்கப்படுமானால் குறித்த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைப்பதாகும். அத்துடன் இது ஒரு முன்னுதாரணமும் ஆகிவிடும். ஐந்து சந்தேக நபர்களையும் ஜனவரி 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்ககுமாறு உத்தரவிட்ட நீதிவான், சகல சந்தேக நபர்களிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறும் கட்டளையிட்டார். (ப)

## நம்பிக்கையுடன் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முன்வருவோம்

### அமைச்சர் டக்ளஸ் புத்தாண்டுச் செய்தி

பிறக்கின்ற புத்தாண்டின் புது மலர்வில் நாம் செல்லும் பயணம் வெல்லும் என்ற நம்பிக்கை எமது மக்களின் மனங்கள் தோறும் வலிமை பெறவேண்டும்.

துயரங்களும் அவலங்களும் நிரந்தரமானவையல்ல. அவை யாவும் தூர விலகி, காணவேண்டிய உரிமை விரைவில் கிடைக்கும் என்றும் காணாமல் போயிருந்து மறுபடி மலர்ந்துள்ள மகிழ்ச்சி இங்கு நீடித்து நிலவும் என்றும் எமது மக்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள முன்வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த கால அழிவுகளில் இருந்து மீண்டெழுந்த எமது மக்களும், தேசமும் இனி வரும் துயரங்கள் எவையாயினும் அவற்றில் இருந்து மீள்வது மிக சுலபமானதே.

பிறந்திருக்கும் புத்தாண்டை எதையும் சாதிக்க வல்ல புதியதொரு வரவாக எமது மக்கள் கருதி கொண்டாடி மகிழ வேண்டும்- என்றுள்ளது.

## 90 கோடி ரூபா 'ஹலால்' நிதி முஸ்லிம் பயங்கரவாதிகளுக்கா?

### அவசர விசாரணைக்கு வலியுறுத்து

கொழும்பு, ஜன.1

வர்த்தக நிறுவனங்களுக்கு ஹலால் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் உலமா சபைக்கு வருடம் ஒன்றுக்கு 90 கோடி ரூபா நிதி கிடைப்பதாகத் தெரிவித்துள்ள பொது நலசேனா அமைப்பு இந்நிதி பயங்கரவாத அமைப்புகளுக்குச் செல்கின்றதா என்பது குறித்து அரசு உடனடியாக விசாரணை நடத்தவேண்டும் என்று கூறியுள்ளது.

பொதுபல சேனா அமைப்பு நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் வித்தாரத்தெனிய ரத்தன தேரர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள் அனைத்துக்கும் ஹலால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. முஸ்லிம்களுக்கு இது தேவையாக இருக்கலாம். சிங்கள மக்களுக்கு ஹலால் சான்றிதழ் தேவையில்லை.

ஹலால் சான்றிதழைப் பெறுவதற்காக நிறுவனங்கள் உலமா சபைக்கு வருடந் தோறும் பெருந்தொகைப் பணத்தைக் கொடுக்கின்றன. அந்தப் பணத்தைப் பொருள்களின் விலைகளுடன் சேர்த்து நுகர்வோரிடம் இருந்து மீளப்பெற்றுவிடுகின்றன.

ஹலால் சான்றிதழைப் பெறுவதற்காக நிறுவனங்கள் உலமா சபைக்கு வருடந் தோறும் பெருந் தொகைப் பணத்தைக் கொடுக்கின்றன. அந்தப் பணத்தைப் பொருள்களின் விலைகளுடன் சேர்த்து நுகர்வோரிடம் இருந்து மீளப்பெற்றுவிடுகின்றன.

ஹலால் சான்றிதழ் வழங்கப்பட்ட பொருள்களையே உண்ணவேண்டும் என்ற கட்டாயம் முஸ்லிம்களுக்கு இருக்கலாம். ஆனால், சிங்கள மக்களுக்கு அது கட்டாயமில்லை.

அவ்வாறான நிலையில் நாம் ஏன் ஹலால் சான்றிதழுக்கும் சேர்த்து பொருள்களுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும். இதனால்தான் சிங்களவர்கள் ஹலால் சான்றிதழ் வழங்கப்பட்ட பொருள்களைப் புறக்கணிக்க வேண்டுமம் என்று நாம் கோருகிறோம்.

இந்த ஹலால் சான்றிதழ்களின் ஊடாக அச்சான்றிதழ்களை வழங்கும் உலமா சபைக்கு வருடம் ஒன்றுக்கு 90 கோடி ரூபா நிதி கிடைக்கின்றது-என்றார்.

## சிறுவர் நன்நடத்தை ஆணையாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்

### வடமாகாண ஆளுநர் அதிரடி

யாழ்ப்பாணம், ஜன. 1

வடமாகாண சிறுவர் நன்நடத்தை பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபனின் பதவி நேற்றுடன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பதிலுக்கு ரி.விஸ்வரூபனுக்கான பொறுப்புக்கள், கடமைகள் எவையும் வழங்கப்படவில்லை.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-

2012 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் பொறுப்புக்களைக் கையளிக்கும்படி கூறி கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி அவருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தத் திணைக்களத்துக்கு ஆணையாளராகவோ பதில் கடமையாற்றவோ இதுவரை எவரையும் நியமிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் பொறுப்புக்களைக் கவனித்துக் கொள்வார் என்றும் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை வருடமாக அவர் ஆணையாளராகப் பதவி வகித்துவந்த நிலையில் நேற்றையதினம் பொறுப்புக்கள் ஒப்படைக்கும்படி கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வடமாகாண ஆளுநரின் செயலரிடம் தொடர்புகொண்டு உறுதிப்படுத்த முற்பட்டபோதும் அது கைகூடவில்லை. (ஐ-18)

## மீசாலை வீரசிங்கம் ம.வி. ஆரம்பப்பிரிவு தனியாக

தென்மராட்சி, ஜன. 1

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டதையடுத்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தனி அலகாக இயங்கவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயருடன் இயங்கவுள்ள பாடசாலைக்கு அதிபராக கா.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியில் கடமையாற்றிய 12 ஆசிரியர்கள் ஆரம்பப்பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மத்திய கல்லூரியாகக் கல்வி அமைச்சால் தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அந்தப் பாடசாலைக்கு தனியான ஆரம்பப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் மாணவர்கள் நன்மையடைய உள்ளனர்.

## சக்கர வண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

வரணி அரசினர் வைத்தியசாலைக்கு ரூபா 15000 பெறுமதியான இரண்டு சில்லுச் சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது.

வரணியைச் சேர்ந்த அரர் வே.தியாகராசா ஞாபகார்த்தமாக அவரது உறவினரால் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கடந்த வியாழக்கிழமை சக்கரவண்டி கையளிக்கப்பட்டது. (3-122)

# கோலாலம்பூர் கருத்தரங்கில் தமிழர் பாதுகாப்புத் தீர்மானம்

கோலாலம்பூர்,ஜன. 01

மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானம் ஒன்று எட்டப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் போருக்குப் பின்னர் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கருத்தரங்கில் விளக்கமளிக்கவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு கோலாலம்பூரில் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா

தலைமையில் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கும் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான

எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், பி.அரியநேந்திரன் மற்றும் சி.யோகேஸ்வரன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்க்ள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் கலந்துரையாடப்படவுள்ளதுடன், தமிழர்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானம் ஒன்றும் இதில் வரையப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் நில அபகரிப்புக்கள் போன்றன உள்ளடங்கலாக இலங்கையில் வாழும் தமிழர்கள் போருக்குப் பின்னரான சூழலில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் குழு இதில் விரிவாக விளக்கமளிக்கவுள்ளது.

பிரிட்டன், இந்தியா, சிங்கப்பூர், கனடா, மியன்மார், ஜப்பான், மொறிசியஸ் மற்றும் புறூனே போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கோலாலம்பூரில் இடம்பெறும் இந்தத் தமிழர் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு

## போக்குவரத்துக்கு அந்தரித்த மக்கள்





யாழ்ப்பாணம், ஜன.1

*யாழ்.மாவட்டத்தில் சில தனியார் பஸ் சங்கங்களைத் தவிர ஏனைய தனியார் சங்கங்கள் அனைத்தும் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன. அதனால் பயணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும், தென்மராட்சிப் பகுதிக்கு மேலதிகமாக பிறமாவட்ட சேவையில் ஈடுபடும் பஸ்களிலும் பயணிகள் பெரும் இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இடையே பயணம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.*

பருத்தித்துறை, அச்சுவேலி தனியார் பஸ் சங்கங்களுக்கு இடையிலான முறுகல் நிலை காரணமாக ஒருவரை ஒருவர் மாறி மாறித் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதனால் நேற்றுமுன்தினம் குறித்த இரண்டு சங்கத்தினரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று குடாநாடு தழுவிய ரீதியில் தனியார் பஸ்களை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. எனினும் அளவெட்டி யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் பஸ்களும், பருத்தித்துறைச் சங்கத்தின் 751 ஆம் இலக்க சில பஸ்களும் நேற்றுக் காலை தொடக்கம் பணியில் ஈடுபட்டிருந்தன.

கொடிகாமம் சங்கத்தைச் சேர்ந்த சில பஸ்கள் நேற்றுக் காலைசேவையில் ஈடுபட்டன. பின்னர் இடைநிறுத்திக் கொண்டன.

முன்னறிப்பின்றி தனியார் பஸ்கள் பெரும்பாலானவை நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதால் யாழ். நகருக்கு பயணம் செய்வதிலும் பிற இடங்களுக்குச் செல்வதிலும் மக்கள் சிரமத்தை எதிர்கொண்டனர்.

உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனப் பணியாளர்கள், மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்வதற்காக வீதிக்குச் சென்றிருந்தவர்கள் அனைவரும் நீண்ட நேரமாக பஸ் தரிப்பிடங்களில் காத்து நின்றனர்.

அரச பஸ்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அவை பயணிகளால் நிரப்பி வழிந்த நிலையில் பயணித்தன. சில பஸ்தரிப்பிடங்களில் காத்து நின்ற பயணிகளை ஏற்றாமலும் சென்றன. வேலைக்குச் செல்பவர்கள் உரிய நேரத்துக்கு செல்ல முடியாமல் அவதிப்பட்டனர்.

கொடிகாமம்- யாழ்ப்பாணத்துக்கு இடைப்பட்ட பகுதி பயணிகள் பிற மாவட்ட சேவையில் ஈடுபடும் பஸ்களிலும் பயணித்தனர்.

நண்பகலுக்குப் பின்னர் யாழ். நகரிலிருந்து பிற இடங்களுக்குச் செல்வதில் அரச பஸ்களில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அதனால் அரச பஸ்களில் பயணிகள் நிரம்பி வழிந்தனர். பஸ்ஸுக்காகப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் காத்திருந்தனர்.

இதேவேளை தனியார் பஸ் சங்கங்களைச் சேர்ந்த தலைவர்களுடன் தொடர்பு கொண்ட பொலிஸார் தாம் பாதுகாப்பு வழங்குவதாகவும் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறும் கேட்டிருந்தனர். எனினும் அது சாத்தியமாகவில்லை.

தெல்லிப்பழை- யாழ் சேவையில் ஈடுபட்ட சில பஸ்களை சிலர் தடுத்து நிறுத்தியிருந்தனர். பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் அவை சேவையில் ஈடுபட்டன.

இன்று புதுவருடத்தை முன்னிட்டு மக்கள் அநேகர் யாழ்.நகருக்குச் செல்ல முற்பட்டிருந்த நிலையில் பெரும் நெருக்கடி காணப்பட்டது.

அரச அதிபர், தனியார் பஸ் சங்கத்தினருடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் பணிப்புறக்கணிப்பு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது.(ம-4-5-8-9-14-17-122)

# உருளைக்கிழங்கு நல்ல விளைச்சல்



யாழ்ப்பாணம், ஜன.1

யாழ். குடாநாட்டில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளூர் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் இந்த உருளைக்கிழங்குச் செய்கைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் அவை தற்போது நல்ல நிலையில் உள்ளதாகவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கடந்த வருட போகத்தை விட இந்த முறை குடாநாட்டில் அதிகளவான விவசாய நிலங்களில் உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஊரெழு, புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய், மருதனார்மடம், சுன்னாம், மாசிவன், இடைக்காடு ஆகிய பகுதிகளில் கூடுதலானோர் இந்த உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (த-17)

### கரவெட்டி பிரதேச சபையின்

# கொல்களத்தைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி, ஜன.1

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குள் உள்ள ஆடு, மாட்டிறைச்சிக் கடைகளுக்கான கொல்களமாக கரவெட்டிப் பிரதேச சபையின் கொல்களத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என வல்வெட்டித்துறை நகர சபை கோரிக்கை விடுத்துள்ளது.

எமது சபைக்கென கொல்களம் ஒன்றில்லை. எதிர்காலத்தில் கொல்களம் ஒன்றை அமைக்க இடம் ஒன்றைத் தெரிவு செய்துள்ளோம். அங்கு கொல்களம் அமைக்க கால தாமதம் ஏற்படும்.

எமது சபைக்கென கொல்களம் ஒன்றில்லை. எதிர்காலத்தில் கொல்களம் ஒன்றை அமைக்க இடம் ஒன்றைத் தெரிவு செய்துள்ளோம். அங்கு கொல்களம் அமைக்க கால தாமதம் ஏற்படும்.

ஆகையால் எமது சபை எல்லைக்குள் உள்ள இறைச்சிக் கடைக்காரர்கள் கொல்களமாக பயன்படுத்துவதற்கு தங்கள் சபைக்குச் சொந்தமான கொல்களத்தை அனுமதிக்குமாறு வேண்டுகிறோம்.

இதற்கென குறிப்பிட்ட ஒரு தொகையை மாதாந்தம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று வல்வெட்டித்துறை நகர சபை விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# குடிதண்ணீர் விநியோகத்தை நிறுத்தியது பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜன.1

காரைநகர் பிரதேச சபை பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாக சபையின் உப தலைவர் எஸ்.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார். தற்போது இந்தப் பிரதேசத்தில் தேவையான அளவு மழை பெய்துள்ளது.

நீர் நிலைகளில் தண்ணீர் மட்டமும் உயர்ந்துள்ளதுடன் நன்னீர் கிணறுகளில் போதிய அளவு தண்ணீர் காணப்படுகிறது. இந்த நிலையில் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. குடிதண்ணீர் தேவைப்படும் மக்கள் சபையுடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (த-17)

## நெல்லியடி ம.வி. 9 ஆம் திகதியே ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.1

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சாதாரணதரப் பரீட்சை 2012 இன் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக புதிய ஆண்டின் முதலாந் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமையே ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை தரம்- 6 வகுப்பில் அனுமதி வழங்கப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ம)

## சுன்னாகம் சங்கப் பணியாளர்கள் நேற்றுத் திடீர் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.1

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுத் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சங்கத்தின் ஊழியர் தொழிற்சங்கம் நேற்றுக் காலை அவசர அவசரமாகக் கூடியது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அடுத்துப் பணியாளர்கள் காலவரையறையின்றி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக முடிவெடுக்கப்பட்டது.

ஊழியர் சங்கத் தீர்மானத்துக்கு அமைய நேற்றுக் காலை பணியாளர்கள் இந்தத் திடீர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பணியாளர்களுக்கான சம்பள உயர்வு, மாதாந்தக் கொடுப்பனவு மாதாந்தம் 25 ஆம் திகதிக்கு முன்பாக வழங்க வேண்டும். மற்றும் பணியாளர்களுக்கான ஆளணி அங்கீகாரம் உடனடியாகப் பெற்றுத் தர

பணியாளர்களில் இந்தத் திடீர் பணிப் பகிஷ்கரிப்பால் சங்கக் கிளைகள் யாவும் நேற்றுப் பூட்டப் பட்ட நிலையில் இருந்தன.

வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பணிப் புறக்கணிப்பில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

பணியாளர்களில் இந்தத் திடீர் பணிப் பகிஷ்கரிப்பால் சங்கக் கிளைகள் யாவும் நேற்றுப் பூட்டப் பட்ட நிலையில் இருந்தன.

வருடப் பிறப்பை முன்னிட்டு சங்கக் கிளைகளுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்ற மக்கள் கிளைகள் பூட்டப் [illegible] சிரமம் [illegible] குறிப்பிடத்தக்கது. (ம-17-86)



யாழ். நகரப் பகுதியில் நேற்றுக் காலை முதல் புதுவருட வியாபாரம் களைகட்டியது. நகரில் வந்து குவிந்த மக்கள் புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதிலும் உணவுப் பண்டங்களை வாங்குவதிலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர். (த-17-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விலையை 150 ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்காக லிற்ரோ காஸ் நிறுவனத்தால் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கையொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விலை அதிகரிப்பை இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்வதற்கு லிற்றோ காஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது. உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்தே தாம் இந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டியுள்ளது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 2 ஆயிரத்து 246 ரூபாவுக்கு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த-சி)

## மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அவரை விடுதலை செய்யுமாறு கோரி அரச மருத்துவ அதிகாரிகளின் கொழும்பு தாய்ச் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்தநிலையில் இன்று செவ்வாய்க்கிழமை அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் நிமலன் உதயனிடம் தெரிவித்தார்.

மருத்துவர் சிவசங்கரின் மனைவியான மருத்துவர் திருமகள் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுச் சென்று கணவரைப் பார்வையிட்டதுடன் அவரை விடுதலை செய்யுமாறும் கோரியுள்ளார். (த-4)

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தர்ஷானந், ஜெனமேஜெயந், சொலமன் ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் பல்கலைக் கழகத்தை மீண்டும் இயங்க வைப்பதில் பெரும் சிக்கல் நிலவுகிறது. இது தொடர்பில் கலைப்பீடாதிபதி தலைமையில் நேற்று திங்கட்கிழமை கலைப்பீடத்தைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போதே பல்கலைக்கழகத்தை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பில் தைப்பொங்கலுக்குப் பின்னரே தீர்மானிப்பது என்று முடிவாகியுள்ளது.

விஞ்ஞானபீட முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடலும் விரைவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# குடாநாட்டில் இனிதே மலர்ந்தது புத்தாண்டு

யாழ்ப்பாணம், ஜன.1
யாழ்.குடாநாட்டில் நேற்று அதிகாலை பட்டாசு வேட்டொலிகளுடன் புத்தாண்டை வரவேற்றனர் பொதுமக்கள்.

குடாநாட்டின் அனைத்து தேவாலயங்களிலும் புத்தாண்டை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

பட்டாசு விற்பனையும் நகரில் திடீரெனக் களைகட்டியதுடன் புத்தாண்டு பிறப்பு வேளை பல்வேறு திசைகளில் இருந்தும் வர்ணப் பட்டாசுகள் விண்ணை அலங்கரித்தன.

கடந்த தீபாவளிப் பண்டிகையில் பட்டாசு விற்பனை சோபையிழந்திருந்த போதும் புத்தாண்டு தினமான நேற்று பட்டாசு விற்பனை அமோகமாக இருந்தது.

## புரோட்பான்ட்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பான்ட் சேவைகளுக்கான கட்டணங்கள் ஐம்பது வீதத்தினால் குறைக்கப்படும் என தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு முன்னதாக தெரிவித்திருந்தது.

இக்கட்டண குறைப்பு 20 வீதத்திலிருந்து 10 வீதமாக குறைக்கப்படவுள்ளது.

## சமத்துவத்துக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ரும் பொதுநோக்குடன் ஒன்றுபட்டு செயற்பட்டு உயர்ந்த வெற்றிகளைப் பெறவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பெரும் முன்னேற்றங்களை அடைந்த ஒரு நாடாகவும், பல்வேறு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்த ஒரு நாடாகவும் நாம் இந்தப் புதிய ஆண்டில் காலடி எடுத்துவைக்கிறோம்.

அதேபோன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரு தேசமாகவும் நாம் இப்புத்தாண்டில் காலடி எடுத்துவைக்கிறோம். எனவே, இன்று பிறக்கும் இப்புத்தாண்டில் எமது தாய்நாடு ஜனநாயகம், மக்கள் மத்தியிலான சமத்துவம் மற்றும் அபிவிருத்தி அம்சங்களில் மிக முக்கியமான முன்னேற்றங்களைக் காணும். இந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் அனைத்து சமூகத்தினரும் பொதுநோக்கத்துடன் ஒன்றுபடுவர் என்பது எனது நம்பிக்கையாகும்.

பிறக்கும் 2013ஆம் ஆண்டில் எமக்கு முன்னாலுள்ள எல்லாப் பணிகளிலும் திடவுறுதி, அர்ப்பணம் மற்றும் தைரியத்துடன் உயர்ந்த வெற்றிகளை அடைந்திட எனது நல்லாசிகள்.

## அனைவருக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்க தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இவை அனைத்திற்கும் மத்தியிலும், சிறந்த ஒரு வாழ்க்கை முறையும், ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டம், ஒழுங்கு ஆகியவை நிலைநாட்டப்பட்டு சகலரும் சமமாக மதிக்கப்படுகின்ற ஒரு சூழலை வேண்டியே புதுவருடத்தை நோக்கி நகர்கின்றோம்.

இவை அனைத்தையும் வெற்றிகொண்டு சுமுக வாழ்க்கையை உருவாக்க தொழில்சார் அரசியல் முறையை மாற்றி பொதுமக்கள்சார் அரசியலாக அதனை மாற்றி பேராசைகள் ஒழிக்கப்பட்டு மக்கள் சேவை ஆட்சிகொள்ளக்கூடிய ஒரு சூழலை உருவாக்கவேண்டும். அதன் மூலமே அனைவரும் சம அந்தஸ்தையும், உரிமையையும் பெறக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

இதனை அடியொட்டிய ஒரு சூழலை உருவாக்குவதே உங்களுக்கும் எமக்கும் முன்னுள்ள சவாலாகும்.

இவைகளை வெற்றிகொள்ளக்கூடிய வல்லமை எம் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். (த-சி)

## இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கொண்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் சிறுவர் போராளிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய நிலைப்பாடு இலங்கைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமை இலங்கைக்குச் சர்வதேச ரீதியில் நற்பெயர் கிடைப்பதற்கு வழி வகுக்கும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சிறுவர் போராளிகள் தொடர்பில் முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சில பிரேரணைகள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளமை இதன் மூலம் உறுதியாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுவர் போராளிகள் இல்லை என்பதைக் காலம் கடந்தேனும் ஐ.நா. ஏற்றுக்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது என பிரதீபா மஹாநாமஹேவா மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## கைகலப்பில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையம் அறிவித்துள்ளது.

வடமராட்சி, அச்சுவேலி தனியார் பஸ் சங்கங்களுக்கு இடையே முரண்பாடு இருந்து வருகிறது. நேற்றுமுன்தினம் கைகலப்பு ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமாகியது. இதனால் நேற்றுமுன்தினம் இரண்டு சங்கத்தினரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய தினம் இரண்டு தனியார் பஸ் சங்கத்தைத் தவிர ஏனைய சங்கங்கள் அனைத்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இந்தப் பிரச்சினை குறித்து யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உட்பட அதிகாரிகளுடன் பஸ் கம்பனிகளின் இணையம் அச்சுவேலி, பருத்தித்துறை பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

இதன்போதே தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் எதிர்காலத்தில் முரண்பட்டால், கைகலப்பில் ஈடுபட்டால் பொலிஸார் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கவுள்ளேன் என்று அரச அதிபர் இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார் என பஸ் கம்பனிகளின் இணையம் கூறுகிறது.

குடாநாட்டில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்கள் குறித்த இடத்தைத் தாமதமாகச் சென்றடையும் சந்தர்ப்பத்தில் தண்டமாக ஆயிரத்து 500 ரூபாவை விதிப்பதென முன்னரே போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக்குறைக்கும்படி இணையம் கோரியது. எனினும் அதுபற்றித் தீர்மானம் எடுக்கமுடியாது. அதுபற்றிக் கதைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதாக தனியார் பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் கொங்காதரன் குறிப்பிட்டார்.

கலந்துரையாடலை அடுத்து நேற்றுப் பிற்பகல் 3 மணியில் இருந்து அனைத்து பஸ் சங்கங்களின் பஸ்களும் சேவையில் ஈடுபட்டன. (த-4)

## பரந்தன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ளில் வீடுதிரும்பிக்கொண்டிருந்தனர்.

பரந்தன் சந்தியில் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலிஸார் இவர்களை மறித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை மறித்த இடத்தில் நிற்கவில்லை. சற்று தூரம் சென்று நிறுத்தப்பட்டு, இளைஞர்கள் இருவரும் பொலிஸாரை நோக்கி நடந்து வந்துள்ளனர்.

வந்து சேர்ந்ததும் கடமையில் இருந்த பொலிஸார் இருவரையும் எதுவுமே கூறாது; கடுமையாகத் தாக்கியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் மேலதிகமாகப் பொலிஸார் அழைக்கப்பட்டும் இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக சம்பவ இடத்தில் கூடிய மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தி, பொலிஸாரின் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் சென்றுள்ளார்.

இதுதொடர்பில் அவர் உதயனுக்குத் தகவல் தருகையில் :-

''வீதியில் வைத்து நாகரிகம் அற்ற முறையில் பொலிஸாரால் இளைஞர்கள் இருவரும் தாக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன். அவர் நேரடியாக என்னிடம் மன்னிப்புக் கேட்டார். பொலிஸார் தவறாக நடந்துள்ளனர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்'' - என்றார். (ஐ)

## தமிழர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
களான நிமல்சிறி பால டி சில்வா, ஜீ.எல். பீரிஸ், ரண்டசிறி விக்கிரமநாயக்க ஆகியோருடன் சஜின் டி வாஸ் குணவர்த்தன எம்.பியும் கலந்து கொண்டார். அத்துடன், தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த இரு தரப்பு பேச்சுக்களையடுத்து அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இடைக்கால தீர்வுத் திட்ட யோசனையொன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டது. இதன் பிரகாரம் தமிழ்க் தேசியத் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் தமது இடைக்காலத் தீர்வுத்திட்டத்தை முன்வைத்தது. தமிழ்க் கூட்டமைப்பின் இந்த இடைக்காலத் தீர்வுத் திட்டமானது, புலிகளின் கொள்கைளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது எனக் காரணம் கூறி அந்த இடைக்கால யோசனையை அரசு நிராகரித்தது. அத்துடன், தமிழ்க் கூட்டமைப்பு இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் கோரிய எழுத்துமூலமான உத்தரவாதத்தையும் அரசு வழங்க மறுத்தது.

இரு தரப்பு பேச்சுக்களின்போது தமிழ்க் கூட்டமைப்பின் நடவடிக்கைகளுக்கு அதிருப்தி தெரிவித்து அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அரசு தரப்பு பேச்சுக்குழுவிலிருந்து விலகினார்.

இந்நிலையில் இந்திய மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நட்பு ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு விரிசலடைந்திருந்த இனப்பிரச்சினைக்கான பேச்சுகளை மீள ஆரம்பிக்க அழைப்பு விடுத்தார்.

இவ்வாறான சூழ்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனையை முன்வைத்து, அதில் பங்குகொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்தது. தெரிவுக் குழுவில் தாம் பங்கேற்க வேண்டுமெனில், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இரு தரப்பினருக்குமிடையே பேச்சில் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். இந்த பேச்சுகளின் இணக்கப்பாட்டுடன் எட்டப்படுத் தீர்வைப் பரிசீலிக்கும் இடமாக தெரிவுக்குழு அமைய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தெரிவுக்குழு தொடர்பில் தமது நிலைப்பாட்டை அரசிடம் தெரிவித்தது.

இதற்கு அரசிடமிருந்து சாதகமான பதில் தமிழ்க் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை. அத்துடன், கூட்டமைப்பு முதலில் தெரிவுக் குழுவில் பங்கேற்க வேண்டும், அதனூடாக பேச்சில் இணக்கப்பாடுகளை எட்டலாம் என அரசு அதன் பிடிவாதப்போக்கை வெளிப்படுத்தியது. இந்நிலையில் இரு தரப்பினரும் தெரிவுக்குழு தொடர்பில் தத்தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசும், தமிழ்க் கூட்டமைப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தீர்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன.

இந்நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்ற கருத்து ஆளுந் தரப்பின் சில அமைச்சர்களால் முன்வைக்கப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கருத்தினால், ஆளுந்தரப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தமது கடும் அதிருப்தியினை வெளியிட்டு வந்தனர். சர்வதேசமும் இந்தப் 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு தமது அதிருப்தியை வெளியிட்டது.

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் மலரவிருக்கும் புத்தாண்டிலாவது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா என அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் வினவியபோது, அவர் கூறியவை வருமாறு:

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வைக்காண நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்.

மலர்ந்திருக்கும் 2013ஆம் ஆண்டு சிறந்ததொரு ஆண்டாகும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தடையாக இருக்கும் அனைத்து அந்நிய சக்திகளையும் முறியடித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின்மூலம் தீர்வு எட்டப்படும்.

அதற்காக இன, மத பேதங்களைக் கடந்து நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். 13ஆவது திருத்தச்சட்டத்துக்கமைய சகல அதிகாரங்களும் கிடைக்கப்பெற்ற சமூகத்தில் தமிழ் மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும். அதுதான் எமது எதிர்பார்ப்பாகும் - என்றார் அமைச்சர் ராஜித.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன் ஒன்பதாம் ஆண்டில்

தோற்றம் 19 * 01 * 1935



மறைவு 01 * 01 * 2003

# முருகப்பா பழனியப்பன்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும், தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும், நல்லூர் கிராமசபையின் முன்னாள் உபதலைவரும், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் போசகரும், வன்னியசிங்க மண்டபத்தின் ஸ்தாபகரும்)

அப்பா என்ற உறவு எமைப் பிரிந்து
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
ஆறவில்லை எம்மனதில் உங்கள் நினைவுகள்
தோளினிலே தாலாட்டி நெஞ்சினிலே உறங்கவைத்து
பாரினிலே எமையிங்கு நற்பாதையிலே
நடக்க விட்ட அப்பாவே!
அப்பாதையையே நாம் தொடர்வோம் எந்நாளும்
ஆழ்கடலில் துரும்பாகி அலறுகிறோம் அப்பாவே!!
ஏழ் பிறப்பிலும் உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்திடுவோம்
என்றும் உங்கள் நினைவுகள் நீங்காமல் எம்மனதில்
நிலைத்திருக்கும்

உங்கள் ஆத்மா
சாந்தியடைய கண்ணீர் மல்க
வேண்டி நிற்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
04.10.2005

ஆண்டவன் அடியில்
04.01.2010



திதி- சதுர்த்தி
(01.01.2013) செவ்வாய்க்கிழமை

### செல்வி பேரினியாள் சிவகுமாரன்

இனிய முகங்காட்டி இன்சொல் பேசி
இனித்திட்ட இவ்வாழ்வை முடித்து நீ
மூன்றாண்டாகிடினும் முடியாதெம் துயரம்
முழு நிலவாம் உன்முகம் காண்பதற்காய்
எல்லோரும் இங்கிருக்க எங்கம்மா சென்றாய் நீ
ஏங்கித் தவிக்கின்றோம் எப்போ நீ வருவாய்

சிறாத்தன் புலம்,
தெல்லிப்பழை.

திரு. திருமதி. சிவகுமாரன்
குடும்பத்தினர்.

## குச்சவெளி கடற்பரப்பில் மனித உடற்பாகம் மீட்பு

திருகோணமலை,ஜன.1

திருகோணமலை, குச்சவெளி கடற்பரப்பில் மனித உடற்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குச்சவெளி பொலிஸ் மற்றும் கடற்படையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கடற்பரப்பில் படகு விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

பிரபல அரச நிறுவனத்தில் அலுவலக முகாமையாளராகக் கடமையாற்றும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நாற்பது வயதுடைய மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றோம்

தொடர்புகளுக்கு :
0717511959

(27493)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி திருமதி S. தயாபரன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
பொன்னுத்துரை பாலாம்பிகை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும், ஊழியர்களும்,
புதிய யாழ். வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### சடையர் சுப்பிரமணியம்



உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப்பிறப் பிடமாகவும், கே. கே. எஸ் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் சுப்பிரமணியம் நேற்று (31.12.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையர் -அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவமதி (ஜேர்மன்), நந்தகுமார் (CTB) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிதரன் (ஜேர்மனி), சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், தீக்ஷிதா, அபிஷேகா, கிருத்திகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக காரைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.

தகவல்:
நந்தகுமார் (மகன்)

## சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை-கோண்டாவில் புதிய மாணவர் அனுமதி -2013

- ★ 5 வயது நிரம்பிய விசேட தேவையுடைய இருபாலரும் அனுமதிக்கப்படுவர்.
- ★ மாணவர் தொடர்பான மருத்துவக் குறிப்பு அவசியம்.
- ★ பாடசாலை அனுமதி தொடர்பாக எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.
- ★ பாடசாலை நாள்களில் சிற்றுண்டி, மதிய உணவு இலவசமாக வழங்கப்படும்.
- ★ நேர்முகப் பரீட்சையின் போது பெற்றோர், மாணவர் கலந்து கொள்ள வேண்டும்.

விண்ணப்ப முடிவு நாள் 10- 01-2013

அதிபர், சிவபூமி பாடசாலை,
கோண்டாவில்.

நிர்வாகசபை,
சிவபூமி அறக்கட்டளை.

(27489)(ச.11)

## Children's World Pre School

ஆங்கில மொழி பாலர் பாடசாலை

Open The Door To Your Child's Future

சிறுவர் அபிவிருத்தி மகளீர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது

- Language Development
- Knowledge Development
- Skill Development
- Values Development
- Speach & Drama Class.



ஆரம்பம்
09.01.2013

அனுமதிகள்
2 1/2 வயது முதல்



Play-based "Learning Through Play" British Curriculum

K.K.S, வீதி கோண்டாவில் மேற்கு
[உபதபாலகம் அருகில்]
முன் அனுமதிக்கு
0777729525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிவபூமி முதியோர் இல்லம்
## தொல்புரம் சுழிபுரம்
## தேவை

1. கணினி அறிவுடைய நிர்வாக அலுவலர்
2. தாதி உத்தியோகத்தர்
3. முதியோர் பராமரிப்புக்கான உதவியாளர்
4. பாதுகாப்புப் பணியாளர்

மேற்குறித்த பணிகளுக்கு அனுபவமும் ஆற்றலும் தகைமையுடையவர்கள் 10.01.2013 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஆறு. திருமுருகன்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, சிவபூமி அலுவலகம்,
கோண்டாவில்.

(27488)(6.11)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த ஆங்கில ஆசானாகவும், பாட இணைப்பாளராகவும் 15 ஆண்டுகள் சேவையாற்றி 22 வருட சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வினைப்பெறும்

# திரு. முத்துத்துரை சிவதாசன் அவர்களின் சேவைநலன் பாராட்டு

**01.01.2013**

## ஆலயக் குருவின் ஆசிச் செய்தி

ஆசிரியப் பெருந்தகை திரு. மு. சிவதாசன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க ஆசிரியராகத் திகழ்ந்தவர். சிவஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும் எல்லா விழாக்களிலும் சைவப் பண்பாட்டுடன் வருகைதந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கினார்.

குறிப்பாக மாலைவேளையில் தவறாது திருவிளக்கேற்றி கல்லூரிச் சூழலையும் ஆலயத்தையும் அழகுபடுத்தியவர். கலகலப்பாகப் பேசினாலும் கருமங்களில் கண்ணாக இருப்பவர். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ ப. சதானந்தக்குருக்கள்
ஸ்ரீ சிவஞான வைரவர் ஆலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## அறிவு திறன் மனப்பாங்கு மிக்க நல்லாசான்

ஆசிரியர் முத்துத்துரை சிவதாசன் அவர்கள் தன்னம்பிக்கை, முயற்சி, தொழில்வாண்மை, இறைபக்தி என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு ஆங்கிலமொழி அறிவை வளர்ப்பதற்கு அரும்பணிகள் ஆற்றிய நல்லாசான் ஆவார். மாணவர்களின் மனநிலையை உரசிப்பார்த்து மனநெகிழ்ச்சியை உணர்ந்து மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்தி கருத்தேற்றம் செய்வதில் வல்லவர்.

எல்லோருடனும் கலகலப்பாக விளங்கி விருப்பு வெறுப்பு இல்லாது காழ்ப்புணர்வு ஏதுமற்று சமநோக்குடன் நட்புறவை வளர்த்து, எவருக்கும் பொல்லாப்புமில்லாமல் செயற்பட்டவர். கடந்த பதினைந்து வருடங்களாக எமது கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக, பாடஇணைப்பாளராக, ஆங்கிலமன்றப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டார். இவரது ஊக்குவிப்பால் ஆங்கில மொழிப் பாடத்தில் அதிக பெறுபேற்றினைப் பெற்றது குறிப்பிடத் தக்கது.

விளையாட்டுத்துறை சார்ந்த சிந்தனையாளராகவிருந்து மைதானத்தில் மாணவர்களுடன் சமத்துவமாகப் பழகிப் பெற்றோர்களையும், மாணவர்களையும், நண்பர்களையும் ஈர்த்து இன்புறுத்தும் பண்பு தனித்துவமானது. தனது முயற்சியில் வெற்றி கொண்ட ஆசிரியர் என்பதற்கு ஆதாரமாக ஆசிரிய தின விழாக்கள் மற்றும் போட்டிகளில் விறுவிறுப் பாகச் செயற்பட்டுத் தனது முயற்சியில் வெற்றிகொண்ட விருப்புக்குரிய நல்லதொரு ஆசிரியராகத் திகழ்ந்தார்.

எமது கல்லூரி ஞானவைரவரின் திருவடிகளை நாளும்பொழுதும் வணங்கிவருவதால் இவரது எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்பதில் ஐயமில்லை எனக்கூறி, மேன்மேலும் வளமாக வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வீ. கணேசராஜா, அதிபர், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## மனிதநேயம்மிக்க பண்பாளர்

1995 இடப்பெயர்வின் பின் பல ஆசிரியர்கள் யாழ். இந்துக் கல்லூரிக்குத் திரும்பாத காலம். பல பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் தட்டுப்பாடான காலம். அக்காலகட்டத்தில் இந்துக் கல்லூரிக்கு ஆங்கில ஆசிரியராக வந்து கைகொடுத்தவர்தான் திரு. சிவதாசன் அவர்கள். அவர் தனது கற்பித்தலைக் கடமையுணர்வுடன், ஒழுங்காக மேற்கொண்டு வந்தவர். கற்பித்தலுடன் நில்லாமல் கல்லூரியின் ஏனைய செயற்பாடுகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டார். ஆங்கில மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மன்றத்தைச் சிறப்பாக வழிநடத்தியவர்.

கல்லூரியின் 16 வயது உதைபந்தாட்ட அணியின் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டுக் கல்லூரியின் உதைபந்தாட்ட வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். ஆசிரியர் - மாணவமுதல்வர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட நிகழ்வின்போது அவர் அனைவரையும் கவரும் வண்ணம் விளையாடுவார். இவருடைய ஆட்டத்தினை மாணவர்கள் கரகோஷம் செய்து இரசிப்பார்கள். நகைச்சுவையாக உரையாடுவதிலும் வல்லவர். கல்லூரி நிகழ்வுகளில் இவர் உரையாற்றத் தொடங்கினால் சபைகளை கட்டி விடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எல்லோரையும் மதிக்கத் தெரிந்தவர். ஒருவருக்கும் தீங்கு நினையாதவர். கல்லூரி நிர்வாகத்துடன் நல்லுறவைப் பேண விரும்பியவர். மனிதநேயம் மிக்க பண்பாளர். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய கல்லூரி ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றேன்.

பொ. மகேஸ்வரன்
ஓய்வுநிலை பிரதி அதிபர்,யாழ். இந்துக் கல்லூரி.






**English. Sp. Trained, Dip. in English, S.L.T.S. - 2-I**

**பிறந்த திகதி - 02.06.1955**

| | |
|---|---|
| பாடசாலைக் கல்வி | :- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | :- (தேசிய கல்வி நிறுவகம்) |
| ஆங்கில டிப்ளோமா | :- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

**சேவையின் விவரம்**

| | |
|---|---|
| கிளி/மத்திய கல்லூரி | 16.03.1990 – 15.03.1992 |
| கிளி/சிவபாத கலையகம் | 16.03.1992 – 05.07.1995 |
| கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | 06.07.1995 – 29.10.1996 |
| வ/மதீனா வித்தியாலயம் | 30.10.1996 – 06.07.1997 |
| யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | 07.07.1997 – 15.02.1998 |
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 16.02.1998 – 01.01.2013 |

## ஆங்கிலம் என்றால் – அது சிவதாசன் தான்

முத்துத்துரை சிவதாசன் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கிய காலங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். ஆங்கிலம் என்பது கற்பதற்கு மிகவும் இலகுவானது என்ற நுட்பத்தை இந்துக் கல்லூரி மாணவர்களிடையே புகுத்தி வெற்றிகண்ட பெருமகன் என்றே இவரை எல்லோரும் பாராட்டுவார்கள்.

ஆங்கிலதினப் போட்டிகள், ஆங்கில மன்றங்கள் போன்றவற்றைச் சிறப்புடன் இயக்கியவர். காலநேரம் பாராது கடமை செய்த உன்னத ஆசிரியர் ஒருவர் இளைப்பாறுவது என்பது தாங்கமுடியாததாகி னும், காலத்தின் கட்டாயத்திற்கு நாம் அனைவரும் கட்டுப்படவேண்டியவர்களே.

இவரது சேவையின் உயர்வைக் கிளிநொச்சி மாவட்டத்தில் நான் கடமையாற்றிய காலத்தில் நன்கு அறிவேன். உண்மையில் ஏழை மாணவர்களுக்கு ஆங்கில உயிரூட்டிய உத்தம ஆசிரியராகப் புகழுடன் விளங்கியவர். இவர் ஆசிரியராக மட்டுமன்றிச் சிறந்த சமூகசேவகராகவும் தான் கடமையாற்றிய பகுதிகளில் செயற்பட்டது மறக்கமுடியாததாகும். இவரது ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

சி.மாணிக்கராசா, கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

## மகிழ்ச்சிகரக் கற்பித்தலில் புரட்சியை ஏற்படுத்தியவர்

யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து ஒருவர் ஓய்வுபெறுகின்றார் என்றால் அவருக்கு நான் என்ற அகங்காரம் நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும். இங்கு கால்பதித்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஒவ்வொரு ஜீவராசிகளும் அறிவுதேர்ச்சி, பக்குவம், அனுபவம், முதிர்ச்சி, திறன் விருத்தி ஆகியவற்றிக்கு ஆட்பட்டுவிடுவார்கள். நிறைய வாசிக்கும் அன்பர் ஆங்கில ஆசான். நம் நாட்டிலோ கூடியது ஏழு தசாப்தங்கள்தான் மனிதவாழ்வு; அதற்குள் இனிமையாக இலக்குநோக்கி நகரும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக நெறிப்படுத்திச் செயற்பட்டு வந்ததில் சிந்தித்துச் செயற்பட்டவர். ஆசிரியத் தொழிலின் தயார்ப்படுத்தலில் முதன்மையானவர், இன்பமும் கண்டவர்.

இந்துக் கல்லூரியில் எந்நேரமும் பலர் நின்று பல பணிகளைச் செய்து பாதுகாத்து வந்த பள்ளியை ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர் இடப்பெயர்வு காலத்தில் எமது இந்து அன்னையின் தேவைகளை மிகப்பொறுப்புடன் நேசித்து, பேணிப் பாதுகாத்து நிவர்த்திசெய்த அன்பர். உதைபந்தாட்டம் முதல் உள எழுச்சிப் பாடல்கள், ஆங்கில நாடகங்கள் வரை, பயிற்சி அனுபவம் பெற்ற மாணவர்கள் சகலகலாவல்லவன் எனப் பாராட்டினர்.

அவரது குடும்பம் சிறக்கவும், இனிமை தொடரவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பொ. சிறிஸ்கந்தராசா,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி, தவிசாளர், பிரதேசசபை, பூநகரி.

## கலகலப்பும் சுறுசுறுப்பும் மிக்க நல்லாசான்

திரு. முத்துத்துரை சிவதாசன் 1998ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்பித்தல் மற்றும் புறச்செயற்பாடுகள் பலவற்றில் ஆற்றல் நிறைந்தவராக விளங்கினார். தனது வேடிக்கைப் பேச்சாலும் உறுதியான விளக்கக் கருத்துக்களாலும் எல்லார் மனதிலும் இலகுவாக இடம்பிடித்தார்.

தனது குரல்வளத்தாலும் அறிவுபூர்வமான சிந்தனையாலும் ஆங்கிலமொழியை மாணவர்களுக்கேற்ற இசைவாக்கத்துடன் கருத்தேற்றம் செய்வதில் வல்லவராகவும் ஆங்கில பாட இணைப்பாளராக விளங்கியவேளையில் பலவீனமான மாணவர்களை இனங்கண்டு ஊக்குவித்து வழிப்படுத்தியதால் ஆங்கிலமொழிப் பாடத்தில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 98% சித்தி பெற வைத்து பாடஅடைவு மட்டத்தை அதிகரிக்க வைத்த சாதனையாளன் என்றால் மிகையாகாது.

ஆங்கிலமொழி மன்றத்தின் பொறுப்பாசிரியராயிருந்து அயராது உழைத்து ஊக்குவித்து வழிப்படுத்திய வினைத்திறனால் கல்லூரியின் வளர்ச்சி தளர்வின்றி வளர்ந்தது என்பதை நான் அறிவேன்.என்றும் சுறுசுறுப்பாகவும், கலகலப்பாகவும் விளங்கும் சிவதாசன் விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள், பக்தி, அன்பு என்பனவற்றால் பழைய மாணவ சங்க உறுப்பினர்களுடன் நீடித்த உறவு நிலைக்க வைத்து நிறைந்திருப்பவர். அவரது ஓய்வுக் காலம் ஒளிமயமாக அமைய எல்லாம்வல்ல ஸ்ரீ சிவஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

கப்டன் நா. சோமசுந்தரம், முன்னாள் பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர்.

## ஆங்கிலமொழிமூலபாட மேம்பாட்டில் புதுமைபடைத்தவர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணியிலே சிறப்பாகச் செயற்பட்டு ஓய்வுபெறுகின்ற ஆங்கில ஆசிரியரும் பாடஇணைப்பாளருமான திருவாளர் மு. சிவதாசன் அவர்களின் சேவைநலன் பாராட்டு சிறப்பு மலரிலே வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அயராத உழைப்பு, விடாமுயற்சி என்பவற்றினூடாக ஆங்கிலத்துறையில் மட்டுமல்லாது கலை மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் தனக்கென ஓர் இடம்பதித்தவர். எப்போதும் சிரித்த முகத்துடன் உறவாடும் சிவதாசன் அவர்கள் கல்லூரியின் ஆங்கிலத்துறை வளர்ச்சியில் சிறப்பாகச் சேவையாற்றியுள்ளார். விளையாட்டு மைதானத்திலும் வகுப்பறையிலும் மேடையிலும் தனது செயற்பாடுகளால் அதிகளவு மாணவர்களின் அபிமானத்தைப்பெற்ற சிவதாசன் அவர்கள் நகைச்சுவையாகப் பேசி மற்றோரை இலகுவாகக் கவரும் திறன்கொண்டவர். மேலும் ஆங்கிலமொழிமூலம் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் திறன் கொண்டவர்.

இவ்வாறு ஆசிரியப் பணியிலே பல்லாண்டு காலம் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு.மு.சிவதாசன் அவர்கள் தனது ஓய்வுகாலத்தில் சகல சௌபாக்கியங்களுடன் நீண்டகாலம் வாழவும், எமது மாணவர் சமூகத்துக்கு அவரது சேவை தொடரவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ப. ரகுமார், செயலர், ஆசிரியர் கழகம், யாழ். இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## திவிநெகும சட்டமூலம் குறித்த மு.காவின் நிலைப்பாடு எப்பக்கம்...?

**1987** ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், தமிழ் பேசும் மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட, ஓரளவுக்கேனும் பாதுகாப்புத் தருவதாகக் கருதப்படும் மாகாண சபைகள் நிர்வாக நடைமுறையை சிறுபான்மையினரிடமிருந்து தட்டிப் பறித்து நிலத்தில் வீழ்த்தி மிதிக்கும் திசையில் அரசு காலடி எடுத்து வைத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தது போன்று இன்று பிறந்துள்ள 2013 புத்தாண்டு முஸ்லிம் காங்கிரஸுக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கப்போகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் இனியும் மௌனம் சாதிக்காது என்பதை அமைச்சர் ஹக்கீமின் கருத்து ஓரளவு வெளிப்படுத்துகிறது.

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை. முஸ்லிம் காங்கிரஸ் மீதும் அதன் தலைவர் மீதும் கடந்த காலங்களில் இருந்துவந்த சந்தேகங்களை பேராளர் மாநாட்டுத் தீர்மானங்கள் தெளிவுபடுத்திவிட்டன.

மாகாணசபை முறைமை குறித்து மிகவும் தெளிவாக இருக்கிறது முஸ்லிம் காங்கிரஸ். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை முழுமையாக அமுல்செய்யவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாகாணசபைகள் முறைமை குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்தும் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் உறுதியுடன் செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களது எதிர்பார்ப்பு. சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்கவோ அல்லது அதனைப் பலவீனப்படுத்தவோ அன்றேல் அதன் அதிகாரங்களைக் குறைக்கவோ எடுக்கப்படும் எந்த முயற்சிக்கும் ஆதரவு வழங்குவதில்லை என்றும் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் நீக்கப்பட்டு அதன் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று முதலில் கருத்து வெளியிட்டு சர்ச்சையை ஆரம்பித்து வைத்தவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே. பின்னர் அவரது சகோதரர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இதே கருத்தை வலியுறுத்தி இருந்தார். அதன் பின்னர் ஜனாதிபதி தனது வரவு - செலவுத்திட்ட உரையில் மாகாணசபை முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றார். மாற்றம் என்று ஜனாதிபதி பூடகமாகத் தெரிவித்தது பெரும்பாலும் அதன் அதிகாரக் குறைப்பையே என்பதை எவராலும் உய்த்துணர முடியும். இருப்பதையே ஒழிக்க விரும்புபவர்கள், ஒருபோதும் மேலதிக அதிகாரங்களை வழங்க இணங்கமாட்டார்கள். இப்படியான ஒரு சூழலில் தற்போது முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் அரசுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கக்கூடியவை. மாகாணசபைகளின் அதிகாரத்தைக் குறைக்கும் திவிநெகும சட்டமூலத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிப்பதைத் தவிர்க்கக்கூடும் என்ற அச்சம் தற்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் எதிர்கால நடவடிக்கைகள் அதன் எட்டு உறுப்பினர்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. இந்த எட்டுப்பேரும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே முஸ்லிம் காங்கிரஸ் தனது இலக்கை அடைய முடியும். பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணைக்கு பிள்ளையார் சுழி போட்டதே இந்தத் திவிநெகும சட்டமூலம்தான். பெரும்பாலும் எதிர்வரும் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விவாதம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதால் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளின் கவனத்தையும் இவ்விடயம் பெரிதும் ஈர்த்துள்ளது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக அரசில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் நிலைப்பாடு அரசினால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகிறது. இந்த நால்வரும் மாகாணசபை முறைமைக்கு ஆதரவான கருத்தையே வெளிப்படுத்தி வருகின்றனர். மாகாண சபைகளைப் பலவீனப்படுத்தும் வகையிலான முயற்சிக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணசபையில் திவிநெகும சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட வேளை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை பெரும் சர்ச்சையைக் கிளப்பி இருந்தது. மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டு, மாகாணசபையின் சில அதிகாரங்களைப் பிடுங்கி எடுக்கும் திவிநெகும சட்டத்தை ஆதரித்தமை கேலிக்கிடமானதாகப் பார்க்கப்பட்டது. இத்தகைய நிலைமை இனியும் நீடிக்கக்கூடாது. இந்தப் பிரச்சினையில் முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டில் உறுதியாகச் செயற்படும் என்ற எதிர்பார்ப்பே பரவலாக முன்னெழுந்து வருகிறது.

சொல் ஒன்று; செயலொன்று என்ற வகையில் செயற்படாது இறுதிநேரத்தில் முடிவை மாற்றிச் செயற்படாது, சிறுபான்மையின மக்களது உரிமைகளுக்கு ஓரளவு பாதுகாப்பை ஏற்படுத்தி வரும் மாகாண சபைகள் முறைமைக்கு வேட்டு வைக்கும் விதத்திலான அரசின் திவிநெகும சட்டமூலத்துக்கு -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்காது என்ற தமிழ், முஸ்லிம் மக்களது நம்பிக்கையை இந்த வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிதறடித்து விடாது என நம்புவோம்.

# உடனடியான தீர்வு தரக்கோரி ஒப்பந்த ஆசிரியர்கள் முறைப்பாடு

இலங்கை ஆசிரியர் சங்கமும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும் இணைந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கு எதிராக யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

2 வருட ஒப்பந்த அடிப்படையில் வன்னி மாவட்டத்துக்குக் கடமை புரியச் சென்ற ஆசிரியர்கள் தமது சேவைக்காலம் நிறைவடைந்தும் தமது இடமாற்றத்தில் இழுபறி நிலை காணப்படுவதை எதிர்த்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் சென்ற ஆசிரியர்களின் நியமனக் கடிதத்தில் 31.12.2012 உடன் ஒப்பந்தத்தை நிறைவு செய்து எதுவித நிபந்தனையுமின்றி 1.1.2013 இற்கு முன்னர் கடமையாற்றிய கல்வி வலயத்துக்குச் சென்று தமது கடமையைப் பொறுப்பேற்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எழுத்து மூலம் வழங்கப்பட்ட உறுதியை நிறைவேற்றுமாறு கோரியே இலங்கை ஆசிரியர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

**நியமனக் கடிதத்தில் 31.12.2012 உடன் ஒப்பந்தத்தை நிறைவு செய்து 1.1.2013 இற்கு முன்னர் கடமையாற்றிய கல்வி வலயத்துக்குச் சென்று தமது கடமையைப் பொறுப்பேற்க முடியும்**

இதனை கருத்தில் கொண்ட சில கல்வி அலுவலகங்கள் ஒப்பந்த அடிப்படையில் சென்ற ஆசிரியர்களுக்கு கடந்த 24 ஆம் திகதி இடமாற்றக் கடிதங்களை வழங்கியுள்ளன. ஆயினும் கடந்த 28 ஆம் திகதி வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் ஒப்பந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கு வரும் ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாண அதிகாரிகளுடன் சந்தித்துப் பேச்சு நடத்திய போது 2013 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் வரும் ஆசிரியர்கள் தொடர்பில் பிரச்சினை இல்லை எனவும் இது தொடர்பான அறிக்கையை அந்தக் காலத்திலிருந்த வடமாகாண பிரதிச் செயலர் பத்திரிகை மூலமும் அறிக்கையை வெளியிட்டார்.

அதேபோல் டிசெம்பர் 22 ஆம் திகதி ஆளுநருடன் மேற்கொண்ட சந்திப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குச் செல்லும் ஆசிரியர்களின் இடமாற்றத்தில் தான் குறைபாடு உள்ளது. அதனையே மீளாய்வு செய்யுமாறு கதைக்கப்பட்டதே ஒழிய வன்னிப் பகுதியாகிய கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு போன்றவற்றிலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு அல்ல எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகவே யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. பாடசாலை ஆரம்பமாக இருப்பதால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பேற்படாதவாறு நியாயமான முறையில் இந்தப் பிரச்சினையைக் கையாண்டு உடனடியாக முடிவை வெளிப்படுத்துமாறு வடமாகாணப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பித் தமது விசாரணையை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அதிகாரி தெரிவித்தார். (ம-422)

# பிரதேச சபையின் வளங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும்

**கரவெட்டி பிரதேசசபை உபதலைவர் தெரிவிப்பு**

வடமராட்சி,ஜன.1

பிரதேச சபையின் வளங்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சமமாகப் பங்கிடப்பட வேண்டும். இதனால் கிராமங்களில் நிலவும் குறைபாடுகளை ஓரளவுக்குத் தீர்த்துக் கொள்ள முடியும்.

கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் இ.சாந்தசொரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை சபை மண்டபத்தில் உபதலைவர் இ.சாந்தசொரூபன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

எமது பிரதேச சபையின் வளங்கள் சமமாகப் பங்கிடப்பட வேண்டும். வளமாக உள்ள கிராமங்களிலும் குறைகள் உண்டு.அவற்றையும் நிவர்த்திக்க வேண்டும்.

இப்பிரதேசத்தில் வீதி விளக்குகள் கிராமங்கள் தோறும் சமச்சீராக பொருத்தப்படவில்லை. எமது கிராமத்தில்கூட வீதிமின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. எமது கிராமம் இருளில் மூழ்கியுள்ளது. சபையால் எமக்கு வழங்கப்பட்ட வீதி மின் விளக்குகளை அல்வாய், அத்தாய், உடுப்பிட்டி போன்ற கிராமங்களில் பொருத்த ஏற்பாடுகளைச் செய்திருந்தேன்.

தற்போது அபிவிருத்திக்கென ஒவ்வொரு பிரதேசசபை உறுப்பினருக்கும் தலா 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி இன்னும் ஒரு மடங்காக அதிகரித்து 4 இலட்சமாக அறிவிக்கப்பட வேண்டும்.

நெல்லியடி முருகன் கோயிலின் பிற்பகுதி ஒரே குப்பை கூழமாக இருக்கின்றது. அதனருகில் பற்றைகள் இருக்கின்றன. அப்பகுதியில் இரவு வேளையில் விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறுகின்றன. அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ம-8)

# அதிபர் சேவை தரம் I இற்கு விண்ணப்பிக்கலாம்

**விண்ணப்பங்கள் ஜனவரி 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்**

அச்சுவேலி, டிச.31

இலங்கை அதிபர் சேவை தரம்I பிரிவுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2:1 இல் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் ஜனவரி 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:1 இல் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர். (த-11)

# கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு தெரிவானோர் விவரம் வெளியானது

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு மட்டுப் படுத்தப்பட்ட நிலையில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 143 பேரின் பெயர் விவரங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.இதில் 30 பேர் தமிழர்கள் 10 பேர் முஸ்லிம்கள்.

இலங்கை ஆசிரியர் சேவையில் குறிப்பிட்டகால சேவையை பூர்த்தி செய்தவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு போட்டிப் பரீட்சையில் பெற்ற உயர் புள்ளி அடிப்படையில் நேர்முகப் பரீட்சை மூலம் உள்ளீர்க்கப்படுகின்றனர். பொது நிலை, பாடத்துறை உட்பட 18 [illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு மட்டுப் படுத்தப்பட்ட நிலையில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் முஸ்லிம்களின் பெயர் விவரம் வருமாறு:-

பொது ஆளணி:- திருமதி ரி.குகன், ஆர்.விஜயேந்திரன், எஸ்.காண்டீபன், திருமதி ஜே.சுகந்தி, திருமதி ஏ.டபிள்யூ எஸ்.எம்.வாஹித், எஸ்.மரியழகன், எஸ்.விஸ்வநாதன், திருமதி. எஸ். செந்தில்வதனி, ஏ.ஏச்.பௌஸ், திருமதி ஜெ.சந்திரபாலன், ரி.தர்மலிங்கம், எஸ்.கந்ததாஸன், திருமதி. எஸ்.பரமேஸ்வரன், திருமதி. யூ.விவேகானந்தராசா,

கணிதம்:-திருமதி.என்.சுதர்சினி எம்.வெங்கடேஸ்வரன்,

கைவினை:- எஸ்.தேவகுமாரன்

சித்திரம்:- ரி.மயூரன், ஜி.இளையதம்பி

தகவல் தொழில்நுட்பம்:- திருமதி.ஏ.கிருஷ்ணவேணி, பி.எம். டபிள்யூ.ஏ.முகைதீன், எஸ். தர்மசிறி, எம்.டி.நிரேஸன், எம்.தேவதாஸ்.

விஞ்ஞானம்:-எம்.ஏ.எம்.உனைஷ்

விவசாயம்:- கே.ஹரிகரன், எம்.ஏச்.மொகமட் ஜபி.

வர்த்தகம்:-

எம்.எஸ்.எம்.ராஜிக், ஏ.சுபகரன், என்.பிரகாஷன், எஸ்.ஸ்ரீகுமரன்.

அரபு:- ஏ.ஆர்.எம்.அமீன், எம்.ஐ.எம்.நவ்பர்டீன்.

திட்டமிடல்:- ஆர்.கே.அன்ரனி.

கீழைத்தேச சங்கீதம்:- எஸ்.சிவசிவா, திருமதி.எஸ். ரவிராஜன்.

உடற்கல்வி:- யூ.எல்.உவைஸ், என். அப்துல் விஜப்த், திருமதி கே.பிரதீபா.

மனைப்பொருளியல்:- திருமதி.வி.சுதாகரன். (ம-11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் மழை காரணமாக வீட்டுத் திட்ட பணிகள் பாதிப்பு

அக்கராயன், ஜன. 1

மழை காரணமாக வீட்டுத்திட்டப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக இடம்பெயர்ந்தோருக்கான நிரந்தர வீடமைக்கும் பணிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**வீட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தும் நிறுவனங்கள், கட்டம்கட்டமாகக் கட்டுமானப் பணிகளை முடிவுறுத்த வேண்டும் எனப் பயனாளிகளுக்குப் பணித்துள்ளன. இதற்கான கால அட்டவணைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.**

வீட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தும் நிறுவனங்கள் கட்டங்கட்டமாகக் கட்டுமானப் பணிகளை முடிவுறுத்த வேண்டும் எனப் பயனாளிகளுக்குப் பணித்துள்ளன. இதற்கான கால அட்டவணைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனினும் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக கால அட்டவணையைக் கடைப்பிடிக்க முடியாதுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

சில கிராமங்களுக்கான வீதிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் வீடு கட்டுவதற்கான கட்டடப் பொருள்களைக் கொள்வனவு செய்வது முதற்கொண்டு கட்டடம் கட்டுவதுவரையான வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் தாம் உரிய காலத்தில் வீட்டைக் கட்டி முடிக்க முடியாதுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

## அக்கராயன்குள தடுப்பணையின் உடைப்பெடுப்பு அபாயம் தடுப்பு

அக்கராயன், ஜன. 1

அக்கராயன் குளத்தின் நீர் தடுப்பணையின் உடைப்பெடுக்கும் அபாயம் தடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இராணுவத்தினரும், அந்தப் பகுதி மக்களும் இணைந்து மண்மூடைகளை அடுக்கி அணையைப் பாதுகாததுள்ளனர்.

இதன்மூலம் ஏற்பட இருந்த ஆபத்து தீர்க்கப்பட்டதுடன் 200 ஏக்கர் வரையான நெற்செய்கையும் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குளத்தின் வான்பாய்ந்து அக்கராயன் ஆற்றுக்கு நீர் நிரப்பப்புவதற்காகப் போடப்பட்டுள்ள பாதுகாப்பு மண் அணையே உடைப்பெடுக்கும் அபாயத்தில் இருந்தது. இந்த நிலையில் இராணுவத்தினரும், மக்களும் இணைந்து சுமார் ஆயிரம் மண்மூடைகளை அடுக்கி அணையைப் பாதுகாத்துள்ளனர்.

அக்கராயன்குளம் கடந்த வருடம் புனரமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## கோணாவில் மாமயன்குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

கோணாவில், ஜன. 1

கோணாவில், யூனியன்குளம் கிராமத்தில் உள்ள மாமயன்குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யூனியன்குளம் மேற்கில் அமைந்துள்ள மாமயன் குளத்தைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்த மழை காரணமாக குளம் பெருக்கெடுத்து வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்துள்ளது. இதனால் வீதிகளும் சேதமடைந்துள்ளன. குளம் புனரமைக்கப்பட்டால் அதன்கீழான விவசாய நடவடிக்கைகளை

**தற்போது பெய்த மழை காரணமாக குளம் பெருக்கெடுத்து வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்துள்ளது.**

மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும் எனவும், வெள்ள ஆபத்து குறைக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் குளங்கள் பெருக்கெடுப்பதால் வீதிப்போக்குவரத்துத் தடைப்படுகிறது. இதனால் அவசர நிலைமைகளுக்காக வெளியிடங்களுக்குச் செல்வதிலும் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

## விரிவுரைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன. 1

தேசிய கல்வி நிறுவனத்தின் கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் நடைபெற்று வரும் கல்விமாணி பட்டக் கற்கை நெறியின் இரண்டாம் வருடத்துக்கான விரிவுரைகள் கடந்த 17 ஆம் திகதியில் இருந்து உரிய நேர அட்டவணைப் படி நடைபெற்று வருகின்றன.

இந்தப் பிராந்திய நிலையத்தில் இரண்டாம் வருட கற்கை நெறியைத் தொடரும் மாணவர்கள் தமது இரண்டாம் வருடத்துக்கான கற்கை நெறிக் கட்டணத்தை இலங்கை வங்கியில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை எதிர்வரும் 5 ஆம் திகதி பிராந்திய நிலையத்தில் சமர்ப்பித்து தமக்கான இரண்டாம் வருட பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பிராந்திய நிலைய இணைப்பாளர் மா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (த-405)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஐயன்கன்குள மக்களுக்கான நிவாரணப் பணிகள் ஆரம்பம்

அக்கராயன், ஜன. 1

ஐயன்கன்குளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவினர் நிவாரண உதவிகளைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை வழங்கினர்.

இதன்போது வெளித்தொடர்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் சிரமங்களை எதிர்கொண்ட இந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களும், சமைத்த உணவும் வழங்கப்பட்டுள்ளன.

தேறாங்கண்டல்குளம் வான்பாய்ந்ததால் ஐயன்கன்குளத்துக்கான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது. இதனால் அந்த மக்கள் தமது கிராமத்தை விட்டுக் கடந்த ஐந்து நாள்களாக வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மருத்துவத் தேவைக்காக மல்லாவிக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டிருந்தது. அண்மையில் பெய்த மழையின்போது, வீடுகள் வெள்ளக்காடாகியதால் நஞ்சருந்திய ஒருவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக் கூடத் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் மூன்று கடைகளும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு கிளையுமே உள்ளன. கடந்த வார மழையின்போது இந்தக் கடைகளில் உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டன. இதனால் பொருள்களைக் கொள்வனவு செய்யவும் இவர்கள் சிரமப்பட்டுள்ளனர்.

பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் கிராம மக்களும் இவ்வாறே சிரமங்களை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

## சிறாட்டிகுளம் மக்களுக்கு மொறட்டுவ மாணவர் உதவி

அக்கராயன், ஜன. 1

மாந்தை கிழக்கு, சிறாட்டிகுளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 49 குடும்பங்களுக்கு மொறட்டுவப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தினர் உணவு, உணவல்லாத பொதிகளை வழங்கியுள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலரின் கோரிக்கைக்கு இணங்க மொறட்டுவப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தினர் சிறாட்டிகுளத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக உதவிகளை நேற்றுமுன்தினம் வழங்கினர்.

சிறாட்டிகுளத்தை வெள்ளம் சூழ்ந்துகொண்டுள்ளதால் மக்கள் வெளித்தொடர்புகளற்று இருந்துள்ளனர். வெள்ள நிலைமை தற்போது சற்று குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தின் உதவியுடன் அந்த மக்களுக்கு உணவு, உணவு அல்லாத பொருள்களை மாணவர்கள் வழங்கியுள்ளனர். (ஐ-18)




வெள்ள இடர்களினால் பாதிக்கப்பட்ட சிறாட்டிகுளம் மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்குப் புலம் பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட் வகைகளை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மடு தியான மையத்தின் பணிப்பாளர் பங்குத் தந்தை அருட்திரு ரூபன், எழுத்தாளர் சண் ஆகியோர் வழங்கினார்கள். (த)

## கிளிநொச்சிக்கு இரு இடங்கள்

கிளிநொச்சி, ஜன. 1

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற மாகாண மட்ட வணிகப் போட்டிகளில் கிளிநொச்சி வலயத்துக்கு இரு வெற்றிகள் கிடைத்துள்ளன.

பிரிவு -1 (தரம் -10)
பேச்சு
2 ஆம் இடம் - க.பவித்திரா (கிளிநொச்சி ம.வி),

பிரிவு - 3 (தரம் -12,13)
குறுவினாவிடைப் போட்டி
2 ஆம் இடம் - யு.கஜீபன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

மேற்படி போட்டிகளில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட 12 கல்வி வலயங்களில் இருந்தும் ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று மாணவர்கள் வீதம் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டிகள் பிரிவு -1 (தரம் -10), பிரிவு -2 (தரம் -11), பிரிவு -3 (தரம் -12,13) என மூன்று பிரிவுகளாக ஒவ்வொரு பிரிவிலும் பேச்சு, கட்டுரை, குறுவினாவிடைப் போட்டி என நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-405)

## முள்ளியவளை - முல்லைத்தீவு வீதியில் வெள்ளம் வற்றியதால் போக்குவரத்து

புதுக்குடியிருப்பு,ஜன.1

மழை காரணமாக தடைப்பட்டிருந்த முள்ளியவளை - முல்லைத்தீவு வீதி மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. வெள்ளம் வற்றியமையை அடுத்து இந்த வீதி ஊடான போக்குவரத்து ஆரம்பமாகியுள்ளது.

அண்மைக் காலமாக பெய்து வந்த கடும் மழை காரணமாக முள்ளியவளை - முல்லைத்தீவு வீதியிலுள்ள மூன்றாங்கட்டைப் பாலத்தின் மேலாக சுமார் 4 அடி உயரத்துக்கு வெள்ளம் மேவிப் பாய்ந்ததால் முல்லைத்தீவுக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து படகு மூலம் போக்குவரத்து இடம்பெற்று வந்தது. தற்போது நீர் குறைந்துள்ளமையால் படகுச் சேவையும் இடம்பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் முல்லைத்தீவுக்கான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்படும் சூழ்நிலை காணப்பட்டது.

தற்போது பாலத்துக்கு அருகில் தற்காலிகமாக வீதி ஒன்று அமைக்கப்பட்டு போக்குவரத்து இடம்பெற்று வருகிறது. (த-400-433)

## ரூபா 78 லட்சம் செலவில் வவுனியாவில் அபிவிருத்தி பணி

வவுனியா,ஜன.1

வவுனியா நகர சபையால் கடந்த வருடம் 78 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நகரசபை நிர்வாக எல்லைக்குள் இனங்காணப்பட்ட மக்களின் அத்தியாவசியமான தேவைகளான மலசல கூடங்கள், பொதுக் கிணறுகள், பொது மயானங்கள் மற்றும் பொது நோக்கு மண்டபங்களே இவ்வாறு சபை நிதியின் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

கோவில் புதுக்குளம் பொது நோக்கு மண்டபம் 5லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவிலும், பூந்தோட்டம் பொது மயானம் 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவிலும் நகர நடை பாதைக் கடைத் தொகுதி 24 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிலும்-

சகாய மாதபுரம் பொதுக் கிணறு அமைத்தல் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவிலும், பத்தினியார் மகிழம்குளம் பொது நோக்குமண்டபம் 5 லட்சம் ரூபா செலவிலும், தேக்காவத்தை முன்பள்ளி 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும்-

நகரசபை மலசலகூடம் 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், இறைச்சிக்கடைகள் 15 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (த-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனங்களின் மீள் மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.1

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப் பட்ட மீள் மதிப்பீட்டை இவ் வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நகரசபையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் நகர சபை உத்தியோகத்தர்களின் முயற்சியால் எழுதிக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இனியும் தாமதிக்காமல் இவ் வருடமே நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

**மதிப்பீட்டுத் தொகையின் பத்து வீதம் வரியாக அறவிடுவது என வும் தீர்மானிக்கப்பட்டது**

புதிய வரி மதிப்பீட்டில் கட்டண அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை தொடர்பாக மக்களிடம் நேரடியாகவோ அல்லது அறிவித்தல்கள் மூலமாகவோ தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தற்போது நடைமுறையில் உள்ள ஆதனவரிப் பதிவுகள் கடந்த 1988 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டதால் கடந்த 25 வருட காலத்தில் ஏற்பட்ட காணிகளின் விலை அதிகரிப்பு, கட்டடங்களின் வாடகை அதிகரிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டுத் தொகையின் பத்து வீதம் வரியாக அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நகரசபையின் அபிவிருத்தி கருதி மக்களின் பங்களிப்பை கடுமையாக வழங்கி அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம-9)



கைதடி அரச மருந்தகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. புதிய மருந்தகம் ஜனவரி மாத இறுதியில் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-17)

# வெள்ள நிவாரணம் விநியோகம்



யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நாவாந்துறையில் உள்ள 7 ஆம், 8 ஆம், 02 ஆம் இலக்கக் கிளைகள் ஊடாக இந்த நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்டுகின்றன.

நாவாந்துறை, பொம்மைவெளி, கொட்டடி, மீனாட்சிபுரம், சூரியவெளி, காக்கைதீவு ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் இந்த மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

சுமார் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த வெள்ள நிவாரணம் வழங்கப்படுகிறது.

மக்கள் நிவாரணத்தைப் பெறுவதற்காக நேற்று சங்கக்கிளைகளில் முண்டியடித்தன. (த-17)

# தனியார் பஸ்களில் இடம்பெறும் பிரச்சினை குறித்து முறைப்பாடு

## அதிகம் கிடைத்துள்ளன என்கிறார் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம்,ஜன.1

தனியார் பஸ்களில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களிடம் இருந்து 119 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. யாழ். பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேகர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் தமது போக்குவரத்து தேவைகளுக்காக தனியார் பஸ்களையே அதிகம் பயன்படுத்துகின்றனர். எனினும் மக்களுக்கு இடையூறு இல்லாத சேவைகளைத் தனியார் பஸ்கள் வழங்கவில்லை.

அண்மைக் காலமாக தனியார் பஸ்களில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக 119 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவும் ஏனைய பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் தனியார் பஸ்கள் தமது இலாபத்துக்கு மட்டுமல்லாது, போக்குவரத்து சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் மக்களுக்கு இடையூறு ஏற்படாத விதத்திலும் சேவையை வழங்க வேண்டும்.

போக்குவரத்துச் சட்ட விதிமுறைகளை மீறும் போது விபத்துக்கள் ஏற்படுவதுடன் , பொது மக்கள் தாமதமான பயணத்தை மேற்கொள்ளவும் நேரிடுகிறது.

அத்துடன் தேவையற்ற தண்டனைகளையும் சட்ட நடவடிக்கைகள் மூலம் பெற வேண்டியுள்ளது.

சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பயணிகளுக்கு ஏற்ற விதத்தில் ஆவணங்கள் வைத்திருப்பதுடன் உரிய வேகக்கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டியதும் அவசியமாகும்.

முக்கியமாக வீதி விதிமுறைகளைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் -என்றார். (ம-14)

# சாவகச்சேரி நகர சபைப் பிரிவில் இந்த வருடம் 100 மின் விளக்குகள்

தென்மராட்சி,ஜன.1

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடம் மக்கள் பங்களிப்புடனான வீதி, விளக்குப் பொருத்தும் பணிகள் 100 குடும்பங்களுக்கு கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் மின் விநியோகம் வழங்கப்படும்.

சாவகச்சேரி நகர சபையின் விசேட கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது என்று நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குப் பொருத்துவதற்கு பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் வருவதாக தலைவர் கூட்டத்தில் தெரிவித்த போது மின் விளக்குப் பொருத்தும் செயலைக் கருத்தில் கொண்டு இந்த வருடம் 100 வீதி விளக்குகள் பொருத்துவது எனவும் கிடைக்கும் விண்ணப்பத்துக்கு உடனடியாக மின் விளக்கு பொருத்த வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ம-9)



அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலையின் ஒளிவிழா பாடசாலை அதிபர் திருமதி காயத்திரி நகுலராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட வண.கலாநிதி ஸ்டான்லி சந்திரராஜன் ஆனல்ட், அருட்சகோதரி ஐ.எஸ்.ஆ ஆனலட் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-50)

# மீசாலை வீரசிங்கம் ம.வி. ஆரம்பப் பிரிவு தனியாகிறது

தென்மராட்சி, ஜன.1

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டதையடுத்து கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தனி அலகாக இன்று தொடக்கம் இயங்கவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயருடன் இயங்கவுள்ள பாடசாலைக்கு அதிபராக கா.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியில் கடமையாற்றிய 12 ஆசிரியர்கள் ஆரம்பப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மத்திய கல்லூரியாக கல்வி அமைச்சால் தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வீட்டுத்தோட்டத்துக்கு பயனாளிகள் தெரிவு

தென்மராட்சி, ஜன.1

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வீட்டுத் தோட்டத் திட்டத்துக்கு தென்மராட்சி பிரதேசத்தில் 49 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் வாழும் பிரதேச வளத்துக்கேற்ப வீட்டுத் தோட்டங்கள் அமைப்பது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் விவசாய போதனாசிரியரால் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-9)

# உவர் தன்மையாக குழாய்க் கிணறுகள்

யாழ்ப்பாணம்,ஜன.1

காரைநகர் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட குழாய் கிணறுகளில் பெரும்பாலானவை உவர் தன்மையாகக் காணப்படுகன்றன என்று பிரதேச சபையின் தலைவர் எஸ்.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் நன்னீர் தேவைகளுக்காக அமைக்கப்பட்ட இந்த குழாய் கிணறுகளில் சில உவர் தன்மையாகக் காணப்படுகின்றன. கோடை காலங்களில் பிரதேச மக்களின் நன்னீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தக் குழாய்க் கிணறுகளை சபை அமைத்தது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் அழிவுக்கு காரணமானவர் கருணாநிதி

## அ.தி.மு.க. செயற்குழுவில் கண்டனம்

சென்னை, ஜன.1
இலங்கை தமிழர்களின் அழிவுக்கு காரணமாக இருந்து கபட நாடகம் ஆடினார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அதிமுக செயற்குழுவில் நேற்று கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, வானகரத்தில் நேற்றுக் காலை கட்சியின் பொதுசெயலர் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழர்களின் அழிவுக்குக் காரணமாக இருந்து கபட நாடகம் ஆடும் கருணாநிதிக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் உள்ளிட்ட 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் தமிழகத்தில் விவசாயிகள்(நிவாரண உதவி) நலன், தொழிலாளர் நலனுக்கென முதல்வர் எடுத்த நடவடிக்கைகளுக்கும், குறிப்பாக காவிரி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டிய மைக்கும் நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டன.



**சென்னை, வானகரத் தில் நேற்றுக் காலை கட்சியின் பொதுசெயலர் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நடை பெற்றது.**

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் 7 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திய மைக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டன.

அந்நிய முதலீட்டை ஏற்கமாட்டோம் என்று உறுதியாக இருந்தது, கல்வித்துறையில் புரட்சி, ஸ்ரீரங்கம், பழநியில் அன்னதான திட்டம், சத்துணவில் சிறந்த உணவு வகைகள் சேர்ப்பு, மின்மிகை மாநிலமாக்கிட எடுத்து வரும் நடவடிக்கைகள், எம்.ஜி.ஆர்., நினைவிடம் புனரமைத்தல் ஆகியவற்றுக்கு பாராட்டுத் தெரிவித்து முதல்வருக்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

## மறைந்த மாணவிக்கு அஞ்சலி புத்தாண்டு நிகழ்ச்சிகள் இரத்து



டில்லி, ஜன.1
மருத்துவபீட மாணவியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாநில அரசுகள் சில புத்தாண்டு கொண்டாட்டத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளன.

இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா மாநில அரசுகள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன. குறித்த மாநிலங்களில் உள்ள நட்சத்திர விடுதிகள், தொழில் அமைப்புகள் சார்பில் நடைபெறும் கொண்டாட்டங்கள் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபடப் போவதில்லை என்று தெரிவித்துள்ள ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட், பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க அனைவரும் புத்தாண்டு சபதம் ஏற்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

பொதுமக்கள் புத்தாண்டை ஆரவாரமின்றி வர வேற்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

**ஜன.3 இல் கறுப்பு தினம்**

மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் டில்லியில் ஜந்தர்மந்தர் மற்றும் செங்கோட்டை உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் சென்றனர்.

இதேவேளை பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க கோரும் மனுவில் ஆயிரக்கணக்கானோர் கையெழுத்திட்டனர். எதிர்வரும் 3 ஆம் திகதியை கறுப்பு தினமாக அனுசரித்து நாடு தழுவிய அளவில் முழு அடைப்புப் போராட்டத்திற்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். (வ)

## அணு உலைகளை எதிர்க்கும் முடிவில் மாற்றம் எதுவுமில்லை

### கம்யூ. கட்சியின் மூத்த தலைவர் கருத்து



சென்னை, ஜன.1
அணு உலைகளை எதிர்க்கும் முடிவில் மாற்றம் இல்லை என்று கேரள மாநில முன்னாள் முதல்வரும் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான வி.எஸ்.அச்சுதானந்தன் தெரிவித்தார்.

மின் உற்பத்திக்காக நிறுவப்படும் அணு உலைகளால் அபாயம் ஏற்படும் என்ற தனது கருத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டிலிருந்து சற்று வேறுபடுகிறது என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார்.

அணுசக்திக்கு எதிரான கூட்டமைப்பு சார்பில் திருவனந்தபுரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அச்சுதானந்தன் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு மின் நிலையம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இறுதித் தீர்ப்பு எப்படி இருந் தாலும், இதுதொடர்பாக நீதிமன்றம் எழுப்பி உள்ள சந்தேகங்கள், அப்பகுதி பொதுமக்களின் அச்சத்தையும், கவலைகளையும் பிரதிபலிப்பதாக உள்ளன.- என்றார்.



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மும்பை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்கினார்.

## கல்பாக்கம் விஞ்ஞானி உட்பட மாவோக்கள் 7 பேர் கைது

அவர்களிடம் இருந்து லப்ரொப், இணையத்தள உபகரணம், 6 செல் போன்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

திருவனந்தபுரம், ஜன.1
கேரளாவில் இரகசிய கூட்டம் நடத்திய மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இயக்கத்தைச் சேர்ந்த 7 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் சென்னை கல்பாக்கம் அணு மின்நிலைய ஓய்வுபெற்ற விஞ்ஞானி.

கேரள மாநிலம் மாவேலிக்கரையில் உள்ள ஓர் விடுதியில் நேற்று முன்தினம் காலை 7 பேர் இரகசிய கூட்டம் நடத்துவதாக பொலிஸாருக்குத் தெரிய வந்தது. உடனே, அந்த விடுதியில் அதிரடிச் சோதனை நடத்தினர்.

அதில், ஓர் அறையில் இரகசியக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த7 பேர் சிக்கினர்.

அவர்களிடம் இருந்து லப்ரொப், இணையத்தள உபகரணம், 6 செல் போன்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். அவர்களில் கோபால் என்பவர் கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி ராஜினாமா செய்தவர்.

7 பேரையும் பொலிஸார் இரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## இமயமலை பகுதியில் கடும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு

### சிங்கப்பூர் விஞ்ஞானிகள் எச்சரிக்கை



இந்தியாவின் வடக்கு எல்லையான இமயமலை பகுதியில், கடும் நில நடுக்கம் ஏற்பட அதிக வாய்ப்பு இருப்பதாக சிங்கப்பூர் விஞ்ஞானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.இது, ரிச்டர் அளவில், 8.0 - 8.5 வரை பதிவாகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சிங்கப்பூரைச் சேர்ந்த, நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சிலர் பவுல் டாப்பொன்னியர் தலைமையில், இமயமலைப் பகுதியில் ஆய்வு நடத்தினர். அவர்களுடன், நேபாளம் மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் பங்கேற்றனர்.

இமயமலைப் பகுதியில், 1897 மற்றும் 1905, 1934, 1950ஆம் ஆண்டுகளில், நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, ரிச்டர் அளவில், 7.8-8.9 வரை பதிவாகியுள்ளது. எனினும், 1934 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில், 150 கிலோ மீற்றர் நீளத்துக்கு நிலத்தில் வெடிப்பு கள் ஏற்பட்டன. ஆறுகளின் வண்டல் படிவம் மற்றும் மலைச் சரிவுகளை, ரேடியோ கார்பனை பயன்ப டுத்தி, ஆய்வாளர்கள், பூமியில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களையும் ஆய்வு செய்துள்ளனர்.

இதன் அடிப்படையில், இமயமலைப் பகுதியில் முன் ஏற்பட்டது போல், அதிக அதிர்வுடன் கடும் நில நடுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அது ரிச்டர் அளவில், 8.0 - 8.5 வரை பதிவாகும் என்றும் குறிப்பிட் டுள்ளனர். இதனால், இமய மலை பகுதியைச் சுற்றியுள்ள இடங்களில் நிலத்தில் பெரும் பிளவுகள் ஏற்படலாம் என்றும் எச்சரித்துள்ளனர்.

**வன்புணர்வுக் குற்றவாளிகளுக்கு**

## மருந்துகள் மூலம் ஆண்மையை அழிக்க காங்கிரஸ் யோசனை

டில்லி, ஜன.1
பாலியல் வன்புணர்வில் ஈடுபடும் குற்றவாளி களுக்கு மருந்துகள் மூலம் ஆண்மையை அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

டில்லியில் ஓடும் பஸ்ஸில் மாணவி வன்புணர்வுக்கு இலக்கான சம்பவத்தை தொடர்ந்து, அவ்வாறான குற்றவாளிகளுக்கு தண்டனையைக் கடுமையாக்க வேண்டும் என்று நாடு முழுவதும் கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து சட்ட திருத்தம் கொண்டு வருவது பற்றி ஆராய நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் ஆணையகத்தை மத்திய அரசு அமைத்துள்ளது. மேற்படி ஆணையகம் பல்வேறு தரப்புகளிடமும் ஆலோசனைகளைக் கோரியுள்ளது. சட்டத்தில் என்னென்ன கடுமையான திருத்தங்கள் கொண்டு வரலாம் என்று காங்கிரஸ் தரப்பில் இருந்து நீதிபதி வர்மாவிடம் மனு அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அதில், வன் புணர்வுக் குற்றவாளிகளுக்கு 30 ஆண்டு வரை சிறைத் தண்டனை, மருந்துகள் மூலம் ஆண்மையை அழிப்பது போன்ற யோசனைகள் தெரிவிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. யோசனைகளைத் தயாரிக்கும் பணியில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஈடு பட்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான குற்றச்சாட்டை கைவிட்டார் முர்சி

கெய்ரோ, ஜன.1

எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான தேசத் துரோக குற்றச்சாட்டை கைவிட்டார் எகிப்திய ஜனாதிபதி முர்சி.

முர்சி கொண்டு வந்த சர்ச்சைக்குரிய அரசமைப்புத் திருத்தம் காரணமாக எகிப்தின் இயல்பு நிலை பாதிக்கப் பட்டுள்ளது. இந்தநிலையில் எதிர்க்கட்சிகளை அனுசரித்துச் செல்லும் வகையில் முர்சி இந்த நடவடிக்கையை மேற்



கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் முகமது எல்பரதே, முன்னாள் வெளியுறவு அமைச்சர்கள் அமர்மூஸ், ஹம்தீன் சபாஹி ஆகியோரே குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூஸ், சபாஹி ஆகியோர் முர்சியை எதிர்த்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டியதாகத் தெரிவித்து அவர்கள் மீது தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்தவர்கள் 15 பேர் கழுத்து வெட்டிக் கொலை

அபுஜா, ஜன.1

நைஜீரியாவில் கிறிஸ்தவர்கள் 15 பேர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கில் இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மைதுகுரி என்ற பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் கழுத்து வெட்டப்பட்டப் பட்டுஉயிரிழந்த 15பேரின்உடல்களைக் கண்டெடுத்துள்ளனர்.

அவர்களில் பெண்கள், குழந்தைகளும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

போகோ ஹராம் என்ற தீவிரவாத அமைப்பு நைஜீரியாவில் இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்த தீவிரமாகப் போராடி வருகிறது. அந்த அமைப்பினரே கிறிஸ்தவர்கள் மீது இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மருத்துவமனையில் ஹலாரி கிளின்டன்



நியூயோர்க், ஜன.1

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்பு ஹிலாரி கிளின்டனின் வயிற்றில் தொற்றுக் கிருமி ஏற்பட்டதை தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டார்.

இந்தநிலையில் நேற்று அவருக்கு மீண்டும் உடல் நலன் பரிசோதிக்கப்பட்டது. அப்போது அவரது உடலில் இரத்தக் கட்டி இருப்பது தெரிய வந்தது.

அதைத் தொடர்ந்து அவர் நியூயோர்க் நகரில் பிரெஸ்பைட்டேரியன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். மருத்துவர்கள் தொடர்ந்து ஹிலாரியின் உடல்நிலையை கண்காணித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்.அதிபர் இந்தியா செல்லார்

இஸ்லாமாபாத், ஜன.1

இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகளை காண பாகிஸ்தான் அதிபர் சர்தாரி இந்தியா செல்லும் திட்டம் எதுவுமில்லை என ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் நடக்க உள்ள ஆட்டத்தைக் காண பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இந்தியா வரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

இது குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் பரக்கத்துல்லா பாபர் தெரிவிக்கையில்,

''இது வெறும் வதந்திதான். இந்தியா வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அப்படியிருக்கையில் சர்தாரி இந்தியா வரும் திட்டமில்லை. அழைப்பு விடுத்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்''- என்றார்.

# பஸ்கள் மீது தாக்குதல்

## பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்கள் 19 பேர் சாவு



இஸ்லாமாபாத், ஜன.1

பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் பயணம் செய்த 3 பஸ்களைக் குறிவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

ஈரானுக்கு 3 பஸ்களில் புனிதப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தானியர்கள், டப்டான் நகரிலிருந்து பலுசிஸ்தான் மாகாணம் குவெட்டா நகரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். மஸ்டங் மாவட்டம் திரின்கார் என்ற இடத்தில் வந்து கொண்டிருந்தபோது அங்கே நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் ஒரு பஸ் தீப்பற்றி எரிந்தது. மற்றைய இருபஸ்களும் கடும் சேதங்களுக்குள்ளாகின.

உடனடியாகப் பொலிஸாரும், மீட்புக் குழுவினரும் சம்பவ இடத்துக்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தத் தாக்குதலில் பஸ்ஸில் பயணம் செய்த 19 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த பலர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டும் இவ்வாறு ஈரான் சென்று திரும்பிய யாத்திரிகர்கள் பஸ் மீது நடத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டணிக்கு தயராகிறது சீன கம்யூனிஸ்ட்?

பீஜிங், ஜன.1

சீனாவில் பிற கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அரசியலில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் யோசனை தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்ததலைவரான யூ ஜெங் செங், இது குறித்துத் தெரிவிக்கையில்:-

''கம்யூனிஸ்ட் அல்லாத பிறகட்சிகளுடனும் இணைந்து அரசு பணியாற்ற வேண்டும். உற்பத்தியைப் பெருக்க மாறுபட்ட கருத்துடையவர்களின் ஒத்துழைப்பையும் பெறுவது அவசியம்.'' என்று தெரிவித்தார்.

சீனாவில் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் தலைமையில் ஒற்றைக் கட்சி ஆட்சிமுறை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோரை பாதுகாக்காவிடில் சட்ட நடவடிக்கை

## சீன அரசு அறிவிப்பு

பீஜிங், ஜன.1

பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க சீன அரசு முடிவு செய்துள்ளது. உலகில் அதிக சனத் தொகையைக் கொண்டது சீனா. இதனால் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த ஒரு குழந்தை மட்டும் எனும் திட்டத்தை 30 ஆண்டுகளுக்கு முன்னர் சீன அரசு நடைமுறைப்படுதியது.

இதனால், சீனாவின் சனத்தொகை கணிசமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக இந்த திட்டம் வெற்றி பெற்றாலும், உணர்வு பூர்வமாக பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. பிள்ளைகள் வளர்ந்த பின் இவர்கள் வெளிநாட்டில் வேலைக்குச் சென்று அங்கேயே தங்கி விடுகின்றனர். இதனால் பெற்றோர் தனிமையில் வாடுகின்றனர்.

இந்த பிரச்சினைக்கு முடிவு கட்ட, சீன அரசு சமீபத்தில் ஓர் உத்தரவை பிறப்பித்துள்ளது. பெற்றோரை கண்டு கொள்ளாத, பிள்ளைகள் தண்டனைக்கு உள்ளாவார்கள். பெற்றோர்களை பாது காக்கத் தவறும் பிள்ளைகளை, தண்டிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

# 'எங்கள் குட்டி அழகன்'



லண்டன், ஜன.1

பிரிட்டனின் 'வெஞ்சர் போட்டோகிராபி' நிறுவனம் குழந்தைகளுக்கான 'அழகு' போட்டி ஒன்றை நடத்தியது. இதில் 2300இக்கும் அதிகமான குழந்தைகள் பங்கேற்றன.

இணையத்தளத்தில் புகைப்படங்களைப் பார்த்து 24 ஆயிரம் பேர் கருத்துத் தெரிவித்தனர். அழகுக் குழந்தையைத் தெரிவு செய்ய நடுவர் குழுவும் அமைக்கப்பட்டது. அவர்களது ஏகோபித்த ஆதரவுடன் ''கொழுக் மொழுக்' குழந்தையாக தோமஸ் (வயது 28) பெக்கி (வயது 29) தம்பதியின் 7 மாத ஆண் பிள்ளை ரோவன் ஸ்டோன் தேர்வு செய்யப்பட்டான்.

ரூ.45 ஆயிரம் மதிப்பில் பொம்மைகள் வாங்கிக் கொள்வதற்கான அன்பளிப்புச் சீட்டை வெஞ்சர் ரோவன் ஸ்டோனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி இன்னும் ஓராண்டுக்கு வார, மாத இதழ்களில் அட்டைப் படமாக குழந்தை ரோவனின் படம் வெளிவருவதற்கும் விளம்பரத்தில் நடிப்பதற்கும் [illegible]

# தீவிரமடையும் சிரியப் போர்

## அதிகரிக்கின்றன உயிரிழப்புகள்



டமஸ்கஸ், ஜன.1

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வருகிறது. கடந்த சில தினங்களில் மட்டும் 400 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக புரட்சியாளர்கள் போராடி வருகின்றனர்.

சிரியாவில் புரட்சி படையிடம் உள்ள நகரங்களை மீட்க இராணுவத்தினர் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக ஹோம்ஸ் நகரம் அருகேயுள்ள தெர்பால் பெக் என்ற மாவட்டத்தை மீட்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தத் தாக்குதல்களில் 200 பொதுமக்கள் உயிரிழந்துள்ளர். அவர்களில் 50 இக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே இராணுவம் நடத்திய தாக்குதலில் கடந்த இருதினங்களில் மட்டும் 400 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதை ராமனுஜத்தின் கண்டுபிடிப்புகள் சரியே

## அமெரிக்க விஞ்ஞானிகள் ஒப்புதல்

லண்டன், டிச.31

கணித மேதை ராமானுஜத்தின் கண்டுபிடிப்புகள் சரியே என்று அமெரிக்க விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய கணித மேதையும் தமிழருமான ராமானுஜம் 1920ஆம் ஆண்டு மரணப் படுக்கையில் இருந்தபோது பல கண்டுபிடிப்புகள், சூத்திரங்களைக் கண்டறிந்தார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த தனது வழிகாட்டியான கணித மேதை ஜி.எச்.ஹார்டிக்கு எழுதிய கடிதத்தில் இதுபற்றி அவர் எழுதியிருந்தார்.

இது கணித உலகுக்கே புதிதாகவும், புதிராகவும் இருந்தது. இப்போது அமெரிக்க கணித ஆராய்ச்சியாளர்கள் ராமானுஜத்தின் கண்டுபிடிப்புகள், சூத்திரங்கள் எல்லாம் சரிதான் என ஏற்றுக் கொண்டுள்ளனர். அவரது கணித புதிர்களுக்கும் தீர்வு கண்டுபிடித்துள்ளனர்.

ராமானுஜம் இறந்து ஏறத்தாழ 100 ஆண்டு காலம் நெருங்கும் நிலையில், இப்போது அவரது கண்டுபிடிப்புகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி எமோரி பல்கலைக்கழக கணித ஆராய்ச்சியாளர் கென் ஒனோ கூறுகையில், ''ராமானுஜத்தின் கடைசி கடிதத்தில் கூறி இருந்த கணக்குப் புதிர்களுக்கு தீர்வு கண்டிருக்கிறோம். கடந்த 90 ஆண்டுகளாக இந்தத் தீர்வு காணப்படாமல் இருந்தது. ராமானுஜத்தின் கண்டுபிடிப்புகள் சரியானவைதான்'' என்றார்.

# புகுஷிமாவை சுத்தப்படுத்துவது மிக சவாலானதொரு விடயமே

## ஜப்பானின் புதிய பிரதமர் கருத்து

டோக்கியோ, ஜன.1

சுனாமி காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட புகுஷிமாவைச் சுத்தப்படுத்துவது முன் எப்போதும் இல்லாத சவாலான பணி என்று தெரிவித்துள்ளார் ஜப்பானின் புதிய பிரதமர் ஷின்சோ அபே.

புகுஷிமா பகுதிக்கு நேற்று முன்தினம் அபே சுற்றுப் பயணம் மேற்கொண்டோர். அதன்பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

''2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட சுனாமி காரணமாக புகுஷிமாவில் உள்ள அணு உலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் அப்பகுதி கதிர் வீச்சு பரவியது. இந்தநிலையில், அதைச் சுத்தப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இது மனித வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத சவாலான பணி. இதில் வெற்றி பெற்றுவிட்டால் ஜப்பான் மற்றும் புகுஷிமா மறுநிர்மாணம் சாத்தியமாகும்'' என்றார்.

புகுஷிமா அணு உலை பாதிப்புக்குப் பிறகு, பாதுகாப்பு ஆய்வுக்காக நாட்டில் உள்ள 50 அணு உலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டன. பின்னர், அடுத்த 30 ஆண்டுகளில் அணு உலைகளை படிப்படியாக நிரந்தரமாக மூடுவது எனவும் முந்தைய அரசு அறிவித்தது.

இந்நிலையில், புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள அபே, அணு உலைகளை மூடுவது தொடர்பான முடிவை மறுபரிசீலனை செய்யப்போவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிமலை சிகரத்தில் ஏறும் கிரியோசிட்டி



செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என்பது குறித்து அமெரிக்க விண்வெளி மையமான நாசா ஆய்வு செய்து வருகிறது.

இதற்காக நாசாவால் கியூரியோசிட்டி என்ற விண்கலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விண்கலம் செவ்வாய் கிரகத்தின் அமைப்பு, பாறை, மணல், சுற்றுப்புற சூழல், காற்றின் வேகம் மற்றும் புழுதி புயல் போன்றவற்றை ஆய்வு செய்து புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது.

இதன் மூலம் உயிரினங்கள் வாழ முடியும் என்பது விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். இந்த நிலையில் செவ்வாய் கிரகத்தில் உள்ள எரிமலை சிகரத்தில் கியூரியோசிட்டி நேற்று ஏறத் தொடங்கியுள்ளது.

இந்த எரிமலையின் சிகரம் 3 மைல் உயரம் கொண்டது. அதன் மீது ஏற தொடங்கியுள்ள கியூரியோசிட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் மத்தியில் மலையில் சிகரத்தை எட்டும். தொடர்ந்து அங்குள்ள பாறைகளை வெட்டிப் புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

# முபாரக்கின் சொத்துகள் முடக்கப்பட்டன

## சுவிஸ் அரசு அதிரடி நடவடிக்கை

ஜெனிவா, ஜன.1

சுவிஸ் வங்கியில் இருந்த எகிப்து முன்னாள் அதிபரின் 300 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகளை சுவிஸ் அரசு முடக்கியுள்ளது. இந்த சொத்துகள் முபாரக்கின் இரு மகன்களின் பெயரில் வங்கியில் பதுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முபாரக்கின் மகன்களான ஆலா மற்றும் கமால் முபாரக் ஆகியோர் சுவிஸின் கிரெடிட் சுவிஸ் வங்கியில் 300 மில்லியன் டொலர்களைக் கடந்த 2005 ஆம் ஆண்டு வைப்பிலிட்டுள்ளனர்.

பின்னர் எகிப்தில் மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து ஹோஸ்னி முபாரக் அதிபர் பதவியை விட்டு அகற்றப்பட்டார். ஆட்சிமாற்றத்தைத்தொடர்ந்து ஊழல் வழக்குகளில் முபாரக்கும் அவரது மகன்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே ஆலாவும் கமால் முபாரக்கும் கிரெடிட் சுவிஸ் வங்கியில் வைத்திருந்த 300 கோடி டொலரை சுவிஸ் அரசு முடக்கியுள்ளது. இது குறித்து கருத்து தெரிவிக்க அந்த வங்கியின் செய்தித் தொடர்பாளர் மறுத்து விட்டார்.

இதேவேளை முபாரக் ஆட்சிக்கு நெருக்கமான 14 பேர் மீதான விசாரணையை சுவிஸ் அரசு ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்- 27.03.1924

மறைவு 13.01.1993



அமரர் வல்லிபுரம் இராசமணி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

என்றென்றும் மாறாத நினைவுகளுடன்

கோயில் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாய் முருகன் கோயிலுக்கு அருகில் நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776146434

## வேலைக்கு ஆள்கள் தேவை

தோட்டம் மற்றும் சமையல் வேலை தெரிந்த ஆண் வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0773361750,0776925193

விளம்பரத் தொடர்புகளுக்கு: advt@uthayan.com

ஜெய்குருதேவ்

இனிய புத்தாண்டின் பூஜ்ய

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்கஜி அவர்களின் வாழும் கலைப் பயிற்சி



மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், யோகா, தியானம், சுதர்சன கிரியா

இலவச அறிமுக உரை 02.01.2013 மாலை 5 மணிக்கு

இடம்: மகேஸ்வரன் மணி மண்டபம்,(நல்லூர்)

தொ.பே.: 077 047 4757, 077 760 7008

## 18ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 25 * 06 * 1925

அம்மன் திருவடியில் 01 * 01 * 1995

அமரர் சின்னையா இரத்தினம்

(பிரபல வெற்றிலை வியாபாரி சாவகச்சேரி)

திதி – 12.01.2013

அன்பு தந்து அரவணைத்து ஆளாக்கிய ஐயா
ஆண்டுகள் பதினெட்டு ஆனதுவோ இன்று- நீங்கள்
கண்ட கனவெல்லாம் நனவாக வேண்டும்.
ஒன்றாக வேண்டும் பத்தும் நன்றாக வேண்டும்.
என்றென்றும் நீங்கள் எம்மோடு வேண்டும்.
குலதெய்வம் அம்மன் எமைக் காத்திட வேண்டும்.

முத்துமாரி அம்மன் கோயில், பெருங்குளம் பிள்ளையார் வீதி, கல்வயல்,சாவகச்சேரி. (27293)(5-6)

என்றும் உங்கள் நினைவேடு மனைவி,மக்கள், மருமக்கள்,பேரர்,பூட்டர்.

## மணமக்கள் தேவை

| ஆண்டு | செவ்வாய்க் குற்றம் | செவ்வாய் இல்லை | மொத்த கிரகபலம் | தொழில் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1984 | - | ✓ | 18 | இஞ்சினியர் | சிங்கப்பூர் |
| 1977 | ✓ | - | 56 | இஞ்சினியர் | லண்டன் |
| 1977 | ✓ | - | 44½ | MA | இலங்கை |
| 1980 | ✓ | - | 80 | இஞ்சினியர் | சிங்கப்பூர் |
| 1984 | ✓ சனி செவ் | - | 79½ | இஞ்சினியர் | ஆஸ்திரேலியா |
| 1972 | ✓ | - | 56 | சுயதொழில் | இலங்கை |
| 1979 | - | ✓ | 42 | இஞ்சினியர் | லண்டன் |
| 1977 | - | ✓ | 34¾ | கடை | இலங்கை |
| 1972 | ✓ | - | 29¾ | இஞ்சினியர் | லண்டன் |
| 1983 | - | சூரியன் செவ் | 18½ | - | கனடா |
| 1980 | ✓ | - | 94 | - | பிரான்ஸ் |
| 1978 | ✓ சனி செவ் | - | 62¼ | Doctor | இலங்கை |
| 1980 | - | ✓ | 20 | - | இத்தாலி |
| 1978 | ✓ சனி செவ் | - | 70 | I.S.A | இலங்கை |
| 1981 | - | சூரியன் செவ் | 30¾ | - | பிரான்ஸ் |
| 1979 | ✓ | - | 65¼ | - | பிரான்ஸ் |
| 1976 | ✓ சூரியன் செவ் | - | 60 | ஆசிரியர் | இலங்கை |
| 1977 | - | ✓ | 20 | கடை | இலங்கை |

மேற்குறிப்பிட்ட மணமகன்மார்க்கு தகுந்த மணமகள்மார் தேவை. அத்துடன் வெளிநாட்டு பிரஜா உரிமைபெற்ற மணமகள், மணமகன், டொக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன், வர்த்தகர், சுயதொழில் புரிபவர், தாரம் இழந்த மணமகன், மணமகள், குறிப்புக்கள் துல்லியமான கணிப்பீட்டுடன் கோவைப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச இணைப்புக் கொண்டது

திருமணசேவை, கைதடி கிழக்கு, கைதடி.

தொ.பே. 075 0856 430, 075 0422 307, 077 5193 493, 077 9590442.

Fax - 021 2230049

Email - Kovipartec@yahoo.com

Email- Kaithadycom@gmail.com

(27487)(45.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிந்தனையின் விளைவே சாதனை

(10)

ஒவ்வொரு நாளும் நம்மைச் சுற்றி நடைபெறுகின்ற எத்தனையோ விடயங்களை நாம் பார்க்கிறோம். பார்க்கின்ற விடயங்களில் எதையாவது பற்றி நாம் சிந்திக்கிறோமா? சோதனைக்காக ஒரு நாள் உங்களைச் சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பட்டியல் போட்டு, அவற்றைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். புதிய புதிய உண்மைகள் உங்களுக்குப் புலப்படுவதைக் கவனிப்பீர்கள்.

உலகத்தில் மிகப் பெரிய சாதனைகள், சிறிய விடயங்களை சிந்தித்ததன் விளைவாக ஏற்பட்டிருக்கின்ற விஞ்ஞான வரலாற்றில், புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தது மிகப் பெரிய திருப்பமாகக் கருதப்படுகின்றது. இந்தக் கண்டுபிடிப்பு எப்படி நிகழ்ந்தது?

சிறுவனாக இருந்த நியூட்டன், மரத்திலிருந்து அப்பிள் பழம் பழுத்துக் கீழே விழுவதைக் கவனித்தான். பழுத்த பழம் மரத்தில் இருந்து ஏன் கீழே விழுகிறது என்று யோசிக்கத் தொடங்கினான். நாம் இப்போது கொஞ்சம் யோசித்துப் பார்க்கலாம். உலகத்தில் மரங்கள் தோன்றிய காலத்திலிருந்து மரத்திலிருந்து பழங்கள் கீழே விழுந்து கொண்டு தான் இருந்தன. நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர். மரத்திலிருந்து பழம் பூமியை நோக்கி ஏன் விழ வேண்டும்? என்று எவரும் சிந்திக்கவில்லை. ஒருவேளை சிலர் சிந்தித்துவிட்டு, அதைப் பற்றி நமக்கென்ன என்று பேசாமலும் இருந்திருக்கலாம்.

ஏன் என்று நியூட்டன் சிந்தித்தார். சிந்திப்பதோடு அதற்கு விடை காணவும் முயன்றார். பழுத்த பழம் கீழே விழாமல் ஆகாயத்தை நோக்கியா செல்லும் என்று அவரைக் கேலி பேசியவர்களும் இருந்தார்கள். ஆனால் அந்தக் கேலியை நியூட்டன் பொருட்படுத்தவில்லை. அவர் தொடர்ந்து சிந்தித்ததன் விளைவாக, பொருள்களைத் தன்னை நோக்கி இழுக்கின்ற சக்தி பூமிக்கு இருக்கிறது என்று கண்டுபிடித்தார். பூமிக்கு மட்டுமல்ல, ஏனைய கிரகங்களுக்கும் இந்த சக்தி இருக்கிறது என்றும், அதனாலேயே வானவீதியில் கிரகங்கள் நிலை குலையாமல் இருக்கின்றன என்றும் நியூட்டன் கண்டுபிடித்தார்.

கேற்றில் கொதிப்பதை எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். ஜேம்ஸ் வாட் அதைப் பார்த்து சிந்தித்த போது நீராவியின் சக்தியை உணர்ந்தார். அதன் விளைவாக நீராவியால் இயந்திரங்கள் இயங்கத் தொடங்கின. விஞ்ஞான உலகத்தில் மட்டும்தான் இப்படியெல்லாம் நிகழ்ந்து இருக்கிறது என்று எண்ண வேண்டாம்.

மனிதன் சிந்தித்த போதெல்லாம் மாற்றங்கள் நிகழத் தொடங்கி இருக்கின்றன. ஏழ்மைக்கான காரணத்தைப் பற்றி காள்ஸ் மாக்ஸ் சிந்தித்தபோது கம்யூனிசம் என்கிற ஒரு புதிய சித்தாந்தம் உருப்பெற்றது. நகர் எங்கும் மக்கள் தொகை பெருகி வருவதையும், அதே சமயம் உணவுப் பற்றாக்குறையால் மக்கள் தடுமாறுவதையும் சிந்தித்த போது மால்தஸ் என்கிற அறிஞர் ஒரு பேருண்மையைக் கண்டறிந்தார்.

மக்கள் தொகை இரண்டு, நான்கு, எட்டு என்கிற விகிதத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, உணவு உற்பத்தி ஒன்று, இரண்டு, மூன்று என்கிற விகிதத்தில்தான் அதிகரிக்கிறது என்றும், மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சி, அதற்கு முடிவே கிடையாது. ஆனால் நிலத்தில் விழுகின்ற தானியம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் விளைய முடியாது என்பதால், சனத்தொகையைக் கட்டுப்படுத்தா விட்டால் மக்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது கஷ்டம் என்கிற ஓர் அரிய தத்துவத்தைச் சொன்னார்.

அடிமைகள் படுகின்ற தொல்லைகளைப் பற்றி ஆபிரகாம் லிங்கன் சிந்தித்ததன் விளைவாக அடிமை வியாபாரத்தை ஒழிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டு ஓர் உள்நாட்டுப் போரையே சந்தித்தார்.

நிகழ்ச்சிகளைப் பற்றி சிந்தனை இல்லாமல் எந்தச் சாதனையும் உருவானதில்லை.

பெரிய சாதனைகளே இப்படித்தான் நிகழ்ந்து இருக்கிறது என்கிறபோது நம்முடைய வாழ்க்கையில் நாம் நிகழ்த்த விரும்புகின்ற சாதனைகள் சிந்தனையின் துணையின்றி எப்படி நிகழும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். வாழ்க்கையிலேயே பெரிய கஷ்டம் பொருளாதாரக் கஷ்டம்தான். இதைப் பற்றி நாம் அடிக்கடி கவலைப்படுகிறோம். சிந்தித்துப் பார்க்கிறோமா என்று யோசித்தால், இல்லை என்றே சொல்லி விடலாம்.

கவலைப்படுவது சிந்தனை ஆகாது. நாம் கவலைப்படுகின்ற விடயங்களைப் பற்றி எல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி விட முடியாது. இருக்கின்ற நிலைமையின் விளைவு கவலை. இருக்கின்ற நிலைமையை சமாளிக்க வழிகாண்பது சிந்தனை. இரண்டும் ஒன்றல்ல.

என்னுடைய எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படுகிறேன் என்று சொல்லுகின்றவர்கள் தான் அதிகம். என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொல்லுகின்றவர்கள் குறைவு. இதற்குக் காரணம் பிரச்சினைகளை நாம் சுமக்கத் தயாராகி விடுகிறோமே தவிர, அதை இறக்கி வைக்கும் வழி காண்பதில் கவனம் செலுத்துவது இல்லை.

ஒரு நல்ல கதையைப் படிக்கிறீர்கள். அதைப் போலவே ஒரு கதை எழுத வேண்டும் என்கிற ஆசை உங்களுக்குத் தோன்றுகிறது. அந்த ஆசை சிறிது காலம் நீடிக்கிறது. பிறகு இப்படியெல்லாம் நம்மால் எழுத முடியாது என்கிற முடிவுக்கு நீங்களே வந்து விடுகின்றீர்கள். இங்கே உங்கள் சிந்தனை வேலை செய்யவில்லை. உங்கள் திறமையைப் பரிசோதித்துப் பார்க்க நீங்கள் தயாராக இல்லை. ஆசையின் கிளுகிளுப்பில் கொஞ்ச நேரம் உற்சாகமடைகிறீர்கள்.

பின்னர் நீங்களாகவே ஒரு முடிவுக்கு வந்து கதை எழுதும் யோசனையைக் கைவிட்டு விடுகிறீர்கள். அதாவது உங்கள் சிந்தனை வேலை செய்ய நீங்கள் அனுமதிக்கவில்லை.

பி.சி.கணேசன் (தொடரும்)

# வாழ்வை வளமுள்ளதாக்க நல்லசிந்தனைகள் வேண்டும்

## நல்லை ஆதீனமுதல்வர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன.1

வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றியமைக்க நல்ல சிந்தனைகளை மனதில் கொள்வதுடன் செய்யும் காரியங்களையும் நன்மை தரக் கூடியதாகச் செய்ய வேண்டும்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி அமைப்பின் ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டு இளைஞர் மாநாடு அண்மையில் யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

**இந்து மதம் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைப் பின்பற்றி அதன் வழி வாழ்ந்த பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.**

இந்து மதம் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைப் பின்பற்றி அதன் வழி வாழ்ந்த பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைக்குறிப்புகள் எமக்குப் பலவற்றைக் கற்றுத்தருவதாகவே உள்ளன.

இந்து மதம் கூறும் ஒரு தத்துவம் மது போதைப் பொருள்களை உட்கொள்ளாதே. அது உனது உடலுக்கும் உள்ளத்துக்கும் தீங்கை ஏற்படுத்தும் என்பதாகும். இதனை எமது சமுதாயம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க இளம் சமுதாயம் நல்ல பண்புகளுடன் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

எமது பண்பாடு, பாரம்பரியம், மொழி, கலாசாரம் என்பன இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டலாக அமைவதால் அதனை நாம் சரியான வழிகளில் பின்பற்ற வேண்டும். நாம் செய்யும் காரியங்களை நல்லதாகவும், சமூக சிந்தனை நோக்குடனும் செய்ய வேண்டும். இது எமது வாழ்வை வளமுள்ளதாக மாற்றியமைக்கும் - என்றார். (ம-14)



கன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரியாவிடை வைபவம் பாடசாலை சமூகத்தால் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான இ.ஐங்கரன், செ.திருவிளங்கம், திருமதி வா.சச்சிதானந்தம், திருமதி ப.சிரஞ்சன் ஆகியோர் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

# முன்பள்ளிப் பருவம் மிக முக்கியம் பெற்றோரின் அவதானம் அவசியம்

## கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உரை

கெருடாவில், ஜன.1

வாழ்க்கையில் முன்பள்ளிப் பருவம் மிகவும் முக்கியமாகும். அதில் பெற்றோர்களின் அவதானம் அவசியம் தேவை.

இவ்வாறு கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் தெரிவித்தார். நெல்லியடி பாலர் பாடசாலை கலை விழாவும் சனசமூக நிலையப் பரிசளிப்பும் அண்மையில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் இக்கால கட்டத்தில் முன்பள்ளி சிறார்களின் நடனக் கலை நிகழ்வுகள் மிகவும் வேண்டப்படுகின்ற ஒன்றாகும்.**
**இவற்றின் ஊடாக மனதுக்கு அமைதியான, மகிழ்ச்சியான பாடல்கள் அதற்குப் பொருத்தமான சிறார்களின் நடனங்கள் இவை மன அழுத்தத்தில் இருந்து மக்கள் விடுபடத் தேவையானவை.**

வாழ்க்கைப் பருவத்தில் முன்பள்ளிப் பருவம் முக்கியமான பருவமாகும். இந்தப் பருவத்தில் நற்பழக்கவழக்கங்கள் பிள்ளைகள் மத்தியில் விதைக்கப்பட வேண்டும். முன்பள்ளிப் பிள்ளைகளின் நல்லொழுக்கமானது பெற்றோரின் நடத்தைக் கோலங்களிலும் தங்கியுள்ளது.

பெற்றோரின் நடத்தைகள் பிள்ளைகளில் பிரதிபலிக்கின்றது. எனவேதான் முதலில் பெற்றோர் தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். பெற்றோர் பெற்றோராக வாழ்ந்து காட்ட வேண்டும். தமது கஷ்டங்களை மறைத்து தம் [illegible] எல்லாம் பிள்ளைக்கு வாங்கிக் கொடுத்து வாழ்க்கை பற்றிய மாறான பொருத்தப்பாடற்ற, நேர்த்தியற்ற முன் உதாரணமாக பெற்றோர் விளங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் இக்கால கட்டத்தில் முன்பள்ளி சிறார்களின் நடனக் கலை நிகழ்வுகள் மிகவும் வேண்டப்படுகின்ற ஒன்றாகும்.

இவற்றின் ஊடாக மனதுக்கு அமைதியான, மகிழ்ச்சியான பாடல்கள் அதற்குப் பொருத்தமான சிறார்களின் நடனங்கள் இவை மன அழுத்தத்தில் இருந்து மக்கள் விடுபடத் தேவையானவை.

இவ்வாறான நிகழ்வுகளை பெற்றோர் மட்டுமன்றி கிராமத்தவர்கள் யாவரும் கண்டு களிக்க வேண்டும்.

வாழ்க்கையின் இறுதிநோக்கம் மகிழ்ச்சியே ஆகும். அந்த வகையில் எல்லோரும் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த நிகழ்வுகள் யாவும் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், இனிமையாகவும், ஆறுதலாகவும் இருந்தன.

இந்த நிகழ்வின் மூலம் சிறு வயது முதல் மாணவர்களது பொது அறிவு வளரவும் கலை உணர்வு ஏற்படவும், மேடைக் கூச்சம் நீங்கவும், மனத்தைரியம் வளரவும், தன்னம்பிக்கை மனதில் ஏற்படவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே மாணவர்களது திறன்கள் வெளிக்காட்டப்பட சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது முக்கியமானதாகும்.

அத்துடன் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மேலும் சிறப்புற்று பல்திறனுள்ள ஒழுக்கமுள்ள சமுதாயம் உருவாக வழிகோல வேண்டும் - என்றார். (ம-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம் - விரக்தி - போராட்டம்

## நீதியே நீதி தேடிய ஆண்டு

அப்துல்கலாமின் யாழ். வருகை



### ஜனவரி

ஜன.1 தெல்லிப்பழை வைத்தியசாலை சொந்த இடத்தில் மீள ஆரம்பம்.

ஜன.2 ஏவுகணை, அணு மின் எரிபொருள் என்பவற்றை ஈரான் வெற்றிகரமாக சோதனை.

ஜன.3 நியூசிலாந்து அரசால் வழங்கப்படும் மகாராணி விருது இலங்கைத் தமிழ் தம்பதிகளான ஜோர்ஜ் அருளானந்துக்கு வழங்கப்பட்டது.

ஜன.14 இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வருகை.
★இத்தாலிய படகு விபத்தில் 30 பேர் சாவு.

ஜன.18 இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா யாழ். வருகை.

ஜன.19 யாகூ. இணையத்தள இணை நிறுவுநர் யங் யாகூவிலிருந்து விலகல்.

ஜன.23 இந்திய அணு விஞ்ஞானியும், முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் யாழ். வருகை.

ஜன.24 கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளுக்கும், சிறைக்காவலர்களுக்குமிடையில் மோதல்.

ஜன.26 ஆஸ்திரேலிய பிரதமர் ஜீலியா கில்லாட், எதிர்க்கட்சி தலைவர் ரொனி, கான்பராவில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியிலிருந்து பத்திரமாக மீட்டெடுப்பு.
★30.2011 ஆம் ஆண்டு க.பொ.த(உ.த) பரீட்சை இசற் புள்ளியால் பாதிக்கப்பட்ட 16 மாணவர்கள் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத்தாக்கல்.



மத்திய கல்லூரி நீச்சல் தடாக திறப்பு

### பெப்ரவரி

பெப்.3 தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் முதல் நபர் பலி!

பெப்.6 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். வருகை தந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கட்டடம், மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் திறந்து வைப்பு.

பெப்.19 பழம் பெரும் நடிகை எஸ்.என்.லட்சுமி மரணம்.

பெப்.22 நியூசிலாந்தில் ஏற்பட்ட பூமி அதிர்வு காரணமாக 185 பேர் சாவு, ஆயிரம் பேர் காயம்.
★ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூட் பதவியிலிருந்து இராஜினாமா.

பெப்.27 ஐ.நாவின் 19 ஆவது அமர்வு ஆரம்பம்.

### மார்ச்

மார்ச்.1 இரமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல், 10 தமிழக படகுகள் சேதம்.

மார்ச் 4 நெடுந்தீவில் 13 வயதுச்சிறுமி வன்புணர்வின் பின் குத்திப் படுகொலை.
★ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஆயுதக்கிடங்கு வெடித்து 150 பேர் சாவு.

மார்ச் 7 ஐ.நா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை அமெரிக்காவால் சமர்ப்பிப்பு.

மார்ச் 11 அமெரிக்கப் படையினர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில் ஆப்கானில் 17 பொது மக்கள் பலி!

மார்ச் 15 சனல்-4 கொலைக்களம், ஆவணப்படம் இணையத்தில் வெளியீடு.

மார்ச் 16 கொழும்பு தேசிய நூதனசாலையில் திருட்டு.

மார்ச் 22 இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஐ.நா தீர்மானம் வெற்றி.

மார்ச் 24 குயின்லாந்து தேர்தலில் தேசிய விடுதலைக் கட்சி வரலாற்று வெற்றி.

மார்ச் 31 சோவியத் யூனியனின் முன்னாள் தலைவர் லியோனிட் மரணம்.

இந்தியூ எதிர்க்கட்சித் தலைவி யாழில்



### ஏப்ரல்

ஏப்.6 நெதர்லாந்தில் தமிழீழ தேசிய சின்னத்தைக் கொண்ட தபால் முத்திரை வெளியீடு.
மட்டக்களப்பில் காந்திசிலை, பேர்டன் பவல் சிலை உடைப்பு.

ஏப்.7 திமுது ஆட்டிகல, குணரட்ணம் இனந்தெரியாதோரால் கடத்தல்.

ஏப்.16 இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழு யாழ்.வருகை.

ஏப்.20 தம்புள்ளவில் பள்ளிவாசலை அகற்றக் கோரி பிக்குகள் போராட்டம்.

### மே

மே 1 இந்தியாவின் அசாம் மாநிலத்தில் படகு கவிழ்ந்ததில் 103 பேர் சாவு.

மே 2 மியன்மார் நாடாளுமன்ற உறுப்பினராக ஆங் சாங் சுகி பதவியேற்பு.

மே 16 யாழ்.மாவட்ட அரச அதிபராக சுந்தரம் அருமைநாயகம் பதவியேற்பு.

மே 18 யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்சானந்த் மீது தாக்குதல்.

மே 22 முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 2 வருட சிறைவாசத்தின் பின் விடுதலை

மே 24 ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக நவநீதம்பிள்ளை மீண்டும் நியமிப்பு.





படுகொலையான நிமலரூபனின் இறுதி யாத்திரை

### ஜூன்


ஜூன் 4 கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பு.

ஜூன் 7 சர்வதேச கிரிக்கெட்டில் நடுவராக 14 ஆண்டுகள் பணியாற்றிய பில்லி டிரோல் ஓய்வு.

ஜூன் 21 கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கான [illegible] சேவை ஆரம்பம்.

ஜூன் 30 எகிப்தில் புதிய ஜனாதிபதியாக முகமத் முர்சி பதவியேற்பு.

ஒலிம்பிக்கின் கோலாகல ஆரம்பம்





கூட்டமைப்பின் இந்தியப் பயணம்

ஐ.நா. வரை டெசோத் தீர்மானம்



### ஜூலை

ஜூலை 2 வவுனியா சிறைச்சாலையிலிருந்து 27 தமிழ் அரசியல் கைதிகள் மகர சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.
★யாழ்.மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக 2 ஆயிரத்து 39 பேர் நியமனம்.

ஜூலை4 வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதி நிமலரூபன் அடித்துக் கொலை.

ஜூலை18 மீள் குடியமர்வு கோரி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம்.
★மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல்.

ஜூலை24 யாழ்.போதனா வைத்தியசாலை முறைகேடுகள் தொடர்பில் வடக்கு மருத்துவர்கள் பணி நிறுத்தம்.

ஜூலை27 ஒலிம்பிக் கொண்டாட்டம் லண்டனில் ஆரம்பம்.

### ஒகஸ்ட்

ஒக. 6 கியூரியோ சிட்டி விண்கலம் செவ்வாயில் தரையிறக்கம்.
வவுனியா சிறைக்கலவரத்தில் தாக்கப்பட்ட

ஒக. 8 தமிழ் அரசியல் கைதி டெல் றொக்ஸன் உயிரிழப்பு.

ஒக. 9 இந்தியாவிலிருந்து புத்தரின் கபில வஸ்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

ஒக. 11 எஸ்.எல்.பி.எல் கிரிக்கெட் தொடர் ஆரம்பம்.

ஒக. 12 ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு டெசோ சென்னையில் நடைபெற்றது.

ஒக. 16 விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேக்கு ஈக்குவடோரில் தஞ்சம்.

ஒக. 20 இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஓய்வு.

ஒக. 25 விண்வெளியில் முதன் முதலில் காலடி வைத்த நீல் ஆம் ஸ்ரோங் மரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம் - விரக்தி - போராட்டம்
## நீதியே நீதி தேடிய ஆண்டு

உதயன்
01/01/2013

### செப்ரெம்பர்

செப்.3 இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாழ்ப்பாணம் வருகை.

செப்.5 கனேடிய தமிழர் மோகனதாஸ் சிவநாயகம் தலையில் 2,100 ஊசி ஏற்றி கின்னஸ் சாதனை.

செப்.5 கிழக்கு, மத்திய, சப்பிரகமுவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி.
அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனால், இராணுவ மேஜர் தாக்கப்பட்டார்.

செப்.9 இந்திய கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக சென்னையில் தொடர் போராட்டம்.

செப்.11 லிபியாவுக்கான அமெரிக்க தூதரகத்தின் மீது ரொக்கெட் தாக்குதல். தூதுவர் ஸ்ரீபன் உட்பட 3 பேர் பலி.

செப்.13 அப்பிள் நிறுவனத்தால் I Phone - 5 அறிமுகம்.

செப்.15 இலங்கை கிரிக்கெட் வீரர் சங்காவுக்கு 3 சர்வதேச விருதுகள்

செப்.18 மஹிந்தவின் இந்தியப் பயணத்தை எதிர்த்து தீக்குளித்த சேலம் இளைஞர் மரணம்

செப்.19 இலங்கைக்கான அமெரிக்க தூதர் மிக்சல் ஜே.சிசன் முதல் தடவையாக யாழ். வருகை.

செப்.25 மக்களை நிர்ப்பந்தித்து வவுனியா மெனிக் பாம் மூடப்பட்டது. கேப்பாபிலவு மக்கள் சூரியபுரம் காட்டில் விடப்பட்டனர்.

செப்.26 உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றம் அனுமதி.

செப்.27 இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்து கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம். - ★ஐ.நா.வுக்கும் மனு கையளிப்பு.
புதிய கடற்படைத் தளபதியாக ரியல் அட்மிரல் ஜெயந்த் பதவியேற்பு.


நிலவில் முதல் மனிதன் விடைபெற்றான்


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில்

அணுவின் அழிவை தடுக்கும் முயற்சியில்...



### ஒக்ரோபர்

ஒக்.5 இருபாலையில் பஸ்-வான் கோர விபத்து; 3 பேர் பலி.

ஒக்.6 ஐ.நா. சபைச் செயலாளர் சஜய்சிரியர் யாழ். வருகை.

ஒக்.7 நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுளா மீது தாக்குதல்.
★'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி.

ஒக்.8 குடாநாட்டில் படைகளுக்குக் காணிகள் வழங்க முடியாது என்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்.
★ உலகில் வயது கூடிய ஜோர்ஜிய நாட்டைச் சேர்ந்த 132 வயதான சன்டிசா மரணம்.

ஒக்.10 'திவிநெகும' சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு.
★பாகிஸ்தான் பெண் கல்விக்காகப் போராடிய 13 வயதுச் சிறுமி மலாலா மீது துப்பாக்கிச் சூடு.

ஒக்.11 இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் - தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சந்திப்பு.

ஒக்.14 நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் மீது தாக்குதல்.
★13 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும்.

ஒக்.16 இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் சந்திப்பு.

ஒக்.19 ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆஸ்திரேலியா உள்வாங்கப்பட்டது.

ஒக்.27 மியன்மாரில் மதக் கலவரத்தில் 112 பேர் பலி.

ஒக்.28 இந்திய வெளியுறவுத்துறை பதவியிலிருந்து எஸ்.எம்.கிருஷ்ணா பதவி விலகல்.

ஒக்.29 அமெரிக்காவில் 'சாண்டி' புயலால் 65 பேர் சாவு.

### நவம்பர்

நவ.1 பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு.

நவ.4 திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே சேவையில் ஈடுபட்ட ஜெர்லைனர் கப்பல் இந்தோனேஷியாவிடம் ஒப்படைப்பு.

நவ.5 ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பூகோள காலக்கிரம மீளாய்வுத் தொடரில் இலங்கையை இந்தியா ஆதரிப்பு.

நவ.6 அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் ஒபாமா தெரிவு.

நவ.9 வெலிக்கடைச் சிறைச்சாலையில் மோதல். 27 கைதிகள் உயிரிழப்பு.

நவ.11 உலகப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியின் உயரம் பாய்தலில் யாழ்.இந்து மாணவன் இ.செந்தூரன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நவ.13 2009 வன்னி இறுதிப் போரில் தமிழரைக் காக்கத் தவறியது ஐ.நா. - ஐ.நா. வின் உள்ளக விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு.

நவ.17 சிவசேனா கட்சியின் தலைவர் பால்தார்க்கரே மரணம்.

நவ.21 மும்பை தாக்குதல் சூத்திரதாரி கசாப் தூக்கிலிடப்பட்டார்.

நவ.23 நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைக்காக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா நாடாளுமன்றம் சென்றார்.

நவ.27 தமிழீழ தாயகம் எங்கும் மாவீரர் தினம் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு.
★யாழ். பல்கலைக்கழக ஆண், பெண் விடுதிக்குள் இராணுவம் அத்துமீறிப் பிரவேசிப்பு.
★ 'உதயன்' ஆசிரியர் மீது தாக்குதல்.

நவ.28 பல்கலைக்கழகத்தினுள் இராணுவம் அத்துமீறி நுழைந்தமைக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம். இராணுவம் அடாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவ.30 பலஸ்தீனம் ஐ.நா.வில் தனிநாடாக அங்கீகாரம்.
★யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்சானச் கைது.
★சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பொண்டிங் ஓய்வு.



கரீபியன்கள் வசமான உலகக்கோப்பை

வெலிக்கடை கலவரத்தின் போது...




வெலிக்கடை படுகொலையின் போது..


பல்கலையில் பொலிஸாரின் அஜாரகம்

### டிசெம்பர்

டிசெ.1 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ். பல்கலை மாணவர் 4 பேர் கைது.

டிசெ.7 நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த தியாக தீபம் திலீபனின் நினைவுக்கல் உடைப்பு.

டிசெ.8 ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிகள் குழு யாழ். வருகை.

டிசெ.16 இந்திய தலைநகர் டில்லியில் ஓடும் பஸ்ஸில் 22 வயது மாணவி 6 பேரால் வன்புணர்வு.

டிசெ.19 உலக அழகியாக தலிலியா கல்போ தெரிவு.
★ தமிழகத்தில் வெடிகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த 4 புலிகள் கைது.

டிசெ.20 குஜராத் முதல்வராக மீண்டும் மோடி.

டிசெ.23 இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் ஓய்வு.

டிசெ.28 இங்கிலாந்தின் முன்னாள் அணித் தலைவரும் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளருமான ரொனிக்கிரேக் சாவு.

# பாவங்களில் இருந்து விடுதலை

நீசெய்யும் தீய செயல்களே பாவங்களாகின்றன.

அதை நீ அறிந்தும் செய்திருக்கலாம்.

அறியாமலும் செய்திருக்கலாம். அறியாமல் செய்யும் ஒரு சில தவறுகள் மன்னிக்கப்படலாம்.

ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ, எப்படி ஆயினும் பாவங்கள் அதற்குரிய தண்டனையைத் தந்தே தீரும்.

பாவத்திற்கான தண்டனையே நரக வேதனையும், மறுபிறப்பும்.

பாவங்கள் பன்மடங்காகப் பெருகி, அசலும் வட்டியுமாகத் திரும்பி வருகின்றன.

ஆனால், இந்தப் பாவங்களிலிருந்து விடுபடவும் வழி இருக்கின்றது.

நீ செய்த பாவங்கள், பிறவிகள் தோறும் தொடரும். எனினும், இப்பிறவியிலேயே அதிலிருந்து முற்றிலுமாக விடுபட வேண்டும் என்று உறுதிகொள்.

பாவங்களிலிருந்து நீ விடுதலை பெற ஒரே வழி சரணாகதி.

எல்லாப் பற்றுகளையும் விடுத்து, இறைவனே கதியென்றிருப்பது சரணாகதி.

உன்னையே இறைவனுக்குக் காணிக்கையாக்கு.

உள்ளம் முழுவதையும் அவனுக்குக் கொடு.

அவனையே நினை; அவனையே வணங்கு;

இறைவனை அடைய முயற்சி செய்.

உன்னை மறந்து இறைவனைக் கலந்தால் நீ அவன் தாள்களை அடைவாய்.

இத்தகைய தன்மையுடன் வாழ்பவனே யோகி எனப்படுகிறான்.

யோகி என்பவனைப் பற்றி பகவத்கீதையில் கண்ணன் கூறுவதைக் கேள்.

"எவனொருவன் உடம்பு நன்றாக இருக்கும் போது, இந்தப் பிறப்பிலேயே, காமக் குரோதங்களால் உண்டாகும் வேகத்தைத் தடுக்கும் சக்தி உள்ளவனோ அவனுக்குப் பெயர்தான் யோகி."

இவ்வாறு யோகியானவன், சகல பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். பிரம்மானந்தம் எனப்படும் பேரானந்தப் பெருங்கடலில் திளைக்கிறான்.

பிரம்மானந்தம் என்பது என்னவெனில்,

எவன் ஆத்மாவிலேயே சுகத்தைக் கண்டு, ஆத்மாவையே விரும்பி, தனக்குத் தேவையான வெளிச்சத்தை, ஆத்மாவிலிருந்தே பெற்றுக் கொள்கிறானோ அந்த யோகி தனக்குத் தானே பிரம்மம் ஆகி விடுகிறான். அவன் அடையும் ஆனந்தத்துக்குப் பெயர்தான் பிரம்மானந்தம்.

இந்தப் பிரம்மானந்தத்தை யார் யார் அடையலாம் என்றால்,

களங்கங்களை நீக்கியவர்கள்.

சந்தேகத்தை அறவே ஒழித்தவர்கள்.

மனத்தை முழுக்க முழுக்கக் கட்டுப்படுத்தியவர்கள்.

முடிந்த அளவு எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வதிலேயே நாட்டம் கொண்டவர்கள்.

அவர்கள் மட்டும் இந்தப் பிரம்மானந்தத்தை அடைகிறார்கள்.

பிரம்மானந்தத்தை அடைபவர்கள் பாவங்களின் கொடிய பிடியிலிருந்து முழுதுமாக விலகிவிடுகிறார்கள்.

நீ பாவங்களிலிருந்து விடுபட வேண்டுமெனில் இறைவனைச் சரணடைந்துவிடு.

சரணடைவதென்றால், உலகப் பொருள்கள் எதன் மீதும் பற்றின்றி, இறைவன் ஒருவனே கதி என்று, அவன் திருவடிகளையே பற்றி நிற்பது.

உலகத்திலுள்ள பொருள்களால் சுகமும் ஏற்படுகிறது.

துக்கமும் ஏற்படுகிறது.

உலகப் பொருள்களுக்குத் தொடக்கம், முடிவு இரண்டும் உண்டு.

இவ்வாறு அழியக்கூடிய விஷயங்களில் பற்று வைக்காதே!

உலகம் அனைத்தும் அவன் அளித்தது.

உலகப் பொருள்கள் அனைத்தும் இறைவனின் உடைமை.

அவனே கொடுக்கிறான். அவனே எடுத்துக் கொள்கிறான். ஆதலால் எப்பொருளையும் 'என்னுடையது' என்று எண்ணாதே!

எதை இழந்தாலும் அதற்காக வருந்தாதே!

இந்த மனப்பக்குவம் நீ அடைந்து விட்டால், நீயும் ஞானியே.

ஆத்ம ஞானம் அடைவதற்குப் பல விபயங்கள் தடையாய் உள்ளன.


காமமும், குரோதமும், லோபமும் உடலில் உள்ள திருடர்கள். அவர்கள் ஆத்ம ஞானமாகிய இரத்தினத்தைப் பறித்துக் கொண்டு போய்விடுவார்கள்.



ஆகவே, காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்யம் இவற்றிலிருந்து நீ விலகியிரு.

பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# நல்லூரின் நடுநாயகமாக விளங்கும் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்



வளவன்

தொன்மைக்காலம் முதல் சைவத்தின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும், உறுதுணையாக இருந்து வருவது ஆலயங்களாகும். அவை சிறப்புடனும் அருள்மிக்கதாகவும் அமைய இறைவன் நூல் எனச் சைவர்களால் போற்றப்படும் சிவாகமங்களே பிரமாணமாக அமைந்தன. கோயில்களின் கட்டமைப்பு, வழிபாட்டுக்குரிய இறைவனது திருவுருவ அமைப்பு, நித்திய, நைமித்தியக் கிரியைகள் போன்றவற்றை ஒழுங்குமுறைப்படி வகுத்துத் தந்த ஆகமங்களே அடிப்படையாக விளங்குகின்றன.

இவ்வாறு ஆகம மரபை அடியொற்றி வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூரிலே எழுச்சி பெற்று விளங்கும் ஆலயங்களில் நல்லூர் சிவன் கோயிலும் ஒன்றாகும். இவ்வாலயம் பருத்தித்துறை பழைய வீதியிலே நல்லைக் கந்தன் ஆலயத்துக்குப் பின்புறமாக வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இதன் அமைவிடம் 'மின்னெ றிஞ்சான் வளவு' என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் இவ்விடம் அரசர்களின் போர்க்களமாகவும் இருந்ததாக அறியப்படுகிறது. இந்த ஆலயம் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சிவஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் (1848- 1929) உருவாக்கிய 1600 விருத்தப்பாக்களில் 17 சருக்கங்களை உள்ளடக்கியதாக ஸ்ரீ கைலாசநாதர் புராணம் எனும் இந்தக் கோயில் தலபுராணம் விளங்குகிறது. இவ்வாலய ஸ்தாபகர் சிவஸ்ரீ ந.வெ.கார்த்திகேயக் குருக்களின் தரும சாதனமும் மேற்படி தலபுராணமும் வரலாற்று ஆதாரங்களாக அமைந்துள்ளதாக வரலாற்று பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் எழுதிய வரலாற்றில் தெரிவித்துள்ளார்.

> **தென்னிந்தியாவில் இருந்து வந்து இந்தப் பகுதியில் குடியேறி வாழ்ந்து வந்த வேதசிவாகம அறிவில் சிறந்து விளங்கிய அந்தணர் பரம்பரையின் வழிவந்தவர் ந.வெ.கார்த்திகேயக் குருக்கள் 1876 - 1942 காலப்பகுதியில் வாழ்ந்தார்.**

தென்னிந்தியாவிலிருந்து வந்து இந்தப் பகுதியில் குடியேறி வாழ்ந்து வந்த வேத சிவாகம அறிவில் சிறந்து விளங்கிய அந்தணர் பரம்பரையின் வழிவந்தவர் ந.வெ.கார்த்திகேயக் குருக்கள் 1876 - 1942 காலப்பகுதியில் வாழ்ந்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை ஸ்தாபித்து பூஜித்து வந்த கிருஷ்ணையர் பரம்பரையில் மகன் கப்பையா, இவரது மகன் கிருஷ்ணையர். இவர் மகன் கணபதி ஐயர், மகன் வெங்கடேச ஐயர் சுந்தராம்மா தம்பதிகளின் புதல்வரே நல்லூர் சிவன் கோயிலின் ஸ்தாபகர் கார்த்திகேயக் குருக்கள்.

அவர் சேர் பொன்.இராமநாதனுக்குக் குருவாக மட்டுமன்றி சோதிடராகவும் திகழ்ந்து தம்பையாக் குருக்கள் என்ற சிறப்புப் பெயருடன் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பல வாணேசர் கோயிலின் முப்பது வருடங்களுக்கு மேலாக பிரதம குருவாக இருந்துள்ளார். பொன்னம்பலவாணேசர் கருங்கற் புனருத்தாரணம், திருநெல்வேலி பரமேஸ்வரன் ஆலய நிர்மாணம் ஆகிய சிவப்பணிகளுக்கு சேர்.பொன். இராமநாதனுக்கு உறுதுணையாக விளங்கியவர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் உட்பட இலங்கையில் பல்வேறு ஆலயங்களில் பிரதிஷ்டா குருமணியாகத் திகழ்ந்து கிரியைகள் இயற்றுவதில் வல்லவராக விளங்கினார். அவரது உழைப்பின் சின்னமாக 'பூலோககைலை' எனும் நல்லூர் சிவன் கோயில் உதயமானது.

இந்தக் கோயிலின் அமைப்புக்கான கல்வளவை வாங்கியது முதற்கொண்டு பதவிந்நியாசம், வாஸ்து சாந்தி, கர்ப்பந்நியாசம் எனும் கிரியைகள் ஒழுங்காக நடைபெறுவதிலும் சிவப்பணிகளை முன்னெடுப்பதிலும் குருக்களுக்கு சேர் பொன். இராமநாதன் பல வழிகளிலும் உதவி புரிந்தார். கார்த்திகேயக் குருக்கள் தாம் தேடிய செல்வத்தை இந்தக் கோயில் அமைப்பதற்கு பெரிதும் பயன்படுத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

சைவத்துறை சிறந்தோங்கவும் சந்ததியற்று விளங்கும் தாமும் தொடர்ந்து தமது சந்ததியினரும் கடைத்தேற வேண்டுமென்ற ஆவலும் மனதை உறுத்தி நின்றது. இதன்போது இறைவன் கனவில் தோன்றி அருளிய கட்டளையின் பேரில் ஆலயம் அமைக்கும் பணியைத் தொடங்கியதாக ஸ்ரீ கைலாசநாதர் புராணத்தில் கார்த்திகேயச் சருக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வட்ட வடிவான விமானத்துடன் சிவனின் கருவறையும் சதுரவடிவான விமானத்துடன் அம்பாளின் கருவறையுமாக வெண்பொளி கற்களாலும், கருங்கல் அடித்தளங்களுடன் சுண்ணாம்புச் சாந்து கொண்டு விமான முறையுதாக சுதை விக்கிரகங்கள் ஏதுமின்றிய நிலையில் வடக்கு நோக்கியதாகவே கருவறையும், அர்த்த மண்டபமும் மட்டும் பூரணப்படுத்திய நிலையில் அமைக்கப்பட்டது. அத்துடன் யாகசாலை, களஞ்சிய அறை, அந்தணர்சாலை என்பனவும் காணப்பட்டதோடு கோபுரவாயிலுடன் உட்பிரகாரம் மதில் அமைப்புடன் உருவாக்கப்பட்டிருந்தது.

1920 களில் குருக்களின் விடாமுயற்சியால் மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தர்சன மண்டபம் ஆகியன அழகுற அமைக்கப்பட்டன. இந்தக் கோயிலின் முதலாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் 1928 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெற்றது. 1945 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணன் ஸ்தபதியால் வார்க்கப்பட்ட இராஜேஸ்வரி அம்பாளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமுற்ற வீடுகளுக்கு 20 ஆயிரம் ரூபா நட்டஈடு

## கிழக்கு மாகாண அமைச்சரவையில் தீர்மானம் என்கிறார் உதுமாலெவ்வை

திருகோணமலை,ஜன.1

கிழக்கு மாகாணத்தில் மழை,வெள்ளத்தால் சிறிய அளவில் சேதமடைந்த வீடுகளுக்கு தலா 20,000 ரூபா வீதம் நட்ட ஈடு வழங்கப்படும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாகாண அமைச் சரவை பேச்சாளர் எம்.எஸ். உதுமாலெவ்வை தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகள் தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம் ஆகியவற்றுக்கு சொந்தமான வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள், மாகாண நீர்ப்பாசனத் திட்டங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் விவசாயத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படும்.

அதன்பின்னர் மாகாண சபையின் நிதி ஒதுக்கீடு மூலம் வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்படும்.

அதற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை வழங்கியுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)



## சிவப்பு நிறமாக மாறியது கிணற்றுத் தண்ணீர்



அம்பாறை,ஜன.1

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாலமுனை, இரண்டாம் பிரிவு குடியிருப்பு வளவிலுள்ள கிணற்றுத் தண்ணீர் சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கிணற்றிலிருந்து தண்ணீரை அள்ளியபோது, நீரின் நிறம் சிவப்பாக மாறியிருந்தது என்று வீட்டு உரிமையாளர் எஸ்.எல்.அல்லாஉம்மா தெரிவித்தார்.

அந்தக் கிணறு சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் வெட்டப்பட்டது. ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறு நீரின் நிறம் மாறவில்லை என்றும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட கிணறு கடற்கரையிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் பகுதிக்குள் அமைந்துள்ளது.

அதேவேளை, குறித்த கிணற்று நீரைப் பார்வையிடுவதற்காக தினமும் வருகைதரும் மக்கள், போத்தல்களில் தண்ணீரைக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகிறது.

## மாங்காய் பறித்தவர் கீழே விழுந்து சாவு


மட்டக்களப்பு,ஜன.1

மாமரத்தில் ஏறி மாங்காய் பறித்துக் கொண்டிருந்த ஒருவர் மரக்கிளை முறிந்ததால் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு, சந்திவெளியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சந்திவெளியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மனோகரன் (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது நண்பரின் வளவிலிருந்த மாமரத்தில் ஏறி மாங்காய்களைப் பறிக்க முற்பட்டபோது, மரத்திலுள்ள கிளையொன்று முறிந்ததில் அவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். (ச)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வருடாந்த மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூருக்கு பிராந்திய சேவைகள் பணிப்பாளர் எம்.எஸ்.இப்றாலெவ்வை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

(ம-30)

## முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் உலருணவு நிவாரணப் பொதி

### பாதிக்கப்பட்ட மட்டு.மக்களுக்கு

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் எய்ட் நிறுவனம் உலருணவு நிவாரணத்தை வழங்கியுள்ளது.

முஸ்லிம் எய்ட் நிறுவனம் மட்டக்களப்பு, கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 300 குடும்பங்களுக்கும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் 150 குடும்பங்களுக்கும் உலருணவு நிவாரணத்தை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் நிவாரணம் விநியோகிக்கப்பட்டது என்று முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.எம். அஸ்மி தெரிவித்தார். (ச)

## முதியோர் சங்கத்துக்கு கதிரைகள் அன்பளிப்பு



மட்டக்களப்பு,ஜன.1

மட்டக்களப்பு, நாவற்காடு கிராமத்தில் இயங்கிவரும் ஔவையார் முதியோர் சங்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கதிரைகளை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தனது நாடாளுமன்ற நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளை குறித்த முதியோர் சங்கத்துக்கு வழங்கினார்.

(ச)

## திருமலை ஊடக இல்லத்தை இயங்க வைப்பதற்கு ஏற்பாடு



திருகோணமலை,ஜன.1

திருகோணமலை ஊடக இல்லத்தை தொடர்ந்து மீண்டும் இயங்க வைப்பதற்கு சேர்ச் போ கொமன் கிரவுண்ட் நிறுவனம் ஐரோப்பிய வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து உதவுவதற்கு முன் வந்துள்ளது.

அதுதொடர்பான பேச்சு திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கம், கொமன் கிரவுண்ட் நிறுவனம், ஐரோப்பிய வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றில் பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உவர் மலை, தேன்தமிழ் வீதியிலுள்ள ஊடக இல்லத்தில் நடைபெற்றது. இந்தப் பேச்சில் அந்த ஊடக இல்லம் மூலம் ஊடகவியலாளர்களுக்கு உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல், பயிற்சி வழங்குவதற்கு [illegible] ஊடகவியலாளர்கள் விரும்பிய நேரத்தில் இல்லத்துக்குச் [illegible] றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டன. (ச)

## அரசியல் அதிகாரம் உள்ளவர்களே ஊடகவியலாளருக்கு உதவ முடியும்

### தண்டாயுதபாணி சொல்கிறார்



திருகோணமலை,ஜன.1

அரசியலில் நாங்கள் இருக்கின்றோமே தவிர, அரசியல் அதிகாரங்கள் எம்மிடமில்லை. அரசியல் அதிகாரம் உடையவர்களே ஊடகவியலாளர்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் 10 ஆவது வருட பொதுக் கூட்டம் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் ஓர் ஊடக இல்லத்தை அமைப்பதற்கு அரசியல் அதிகாரத்தில் உள்ள முதலமைச்சர், அமைச்சர்கள் போன்றவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[illegible] அரசியல்வாதிகளாக [illegible]இருக்கிறோமே தவிர, அரசியல் வல்லமை கொண்டவர்களாக இல்லை.

உலகம் வளர்ந்துவரும் வேகத்துக்கு ஏற்ப பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளும் பயிற்சிகளை ஊடகவியலாளர்களுக்கு வழங்க வேண்டும். ஊடகப் பணிகள் பற்றி அறிந்தாலும், இந்த நாட்டில் ஊடகத்துறைக்கு உள்ள சவால்களையும் அறிய வேண்டும்.

நாட்டில் சுதந்திரமாக செய்திகளை வெளியிடக் கூடிய ஊடக கலாசாரம் இல்லை. எத்தனையோ ஊடக வியலாளர்கள் உண்மையைச்சொன்ன தற்காக நாட்டில் கொலை செய்யப்பட்டனர்.

ஊடகவியலாளர்களுக்கான சுதந்திர ஆரோக்கிய நிலை இந்த நாட்டில் இல்லை என்பதே உண்மை. அந்தநிலையில், காத்திரமான ஊடகத்துறையை வளர்க்க முடியுமா என்பதை நோக்க வேண்டியுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மற்றும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதைக் கூடும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

**இடபம்:** பிள்ளைகளை நல்வழிப்படுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மிதுனம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்கநிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிட்டும். அயல் வீட்டாரின் ஆதரவு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அடுத்தவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப்பாருங்கள். நயமாகப் பேசுபவர்களை நம்பவேண்டாம். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**சிங்கம்:** குடும்ப விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாளுங்கள். புதியவர்களை நம்பி ஏமாறவேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் அசதி, சோர்வு வந்து விலகும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

### நாளை

மார்கழி -18 புதன்கிழமை 02.01.2013
திதி: பஞ்சமி மு.இ. 08.17 வரை
நட்சத்திரம்: மகம் மு.ப. 11.26 வரை
சுபநேரம்: 05.00- 06.30 வரை
ராகுகாலம்: 12.30- 02.00 வரை

**துலாம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**தனுசு:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். மற்றவர்கள் பற்றிய வீண் விமர்சனங்களைத் தவிர்க்கப்பாருங்கள். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஆலோசனை செய்வீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மன நிறைவு கிடைக்கும்.

**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 3 | 6 | | 8 | 5 | | |
| | 9 | 5 | | | 7 | 3 | 1 | |
| 4 | | | 3 | 5 | | | | 9 |
| 2 | 1 | 6 | | | | | | |
| | 5 | | | | | | 3 | |
| | | | | | | 7 | 9 | 1 |
| | | | | 7 | 5 | | | 6 |
| | 4 | 7 | 8 | | | 9 | 2 | |
| | | 1 | 2 | | 3 | 8 | | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 9 | 2 | 5 | 4 | 1 | 3 | 7 |
| 1 | 7 | 5 | 6 | 3 | 9 | 2 | 8 | 4 |
| 3 | 4 | 2 | 7 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 2 | 8 | 7 | 5 | 1 | 3 | 4 | 6 | 9 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 7 | 8 | 1 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 2 | 6 | 3 | 7 | 5 |
| 5 | 2 | 6 | 3 | 7 | 8 | 9 | 4 | 1 |
| 7 | 1 | 8 | 4 | 9 | 2 | 6 | 5 | 3 |
| 9 | 3 | 4 | 1 | 6 | 5 | 7 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் S.K.தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)



தோற்றம் 01.01.1943 — மறைவு 01.01.2009

திதி: சதுர்த்தி

நிஜமாக நீங்கள் மறைந்து - நான்காண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை - பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்

நிரந்தர முகவரி:
தன்னை, களபூமி, காரைநகர்

தற்காலிக முகவரி:
இல. 58, மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்.
077 1836 625

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,

(27483)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி கொடுப்பனவை அதிகரிக்குக

### ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு,ஜன.1

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது கிடைக்கப் பெறும் கொடுப்பனவு போதுமானதாக இல்லை என்று அகில இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாட்டின் விலை ஏற்றத்துக்கு ஏற்ப வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அதனால் அந்தக் கொடுப்பனவு ஆசிரியர்களுக்கு போதுமானதாக இல்லை என்று அவர் கூறினார். (ச)



மாத்தளை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டார்.

## ஹெரோயின் விற்ற சிப்பாய்க்கு பிணை மறுப்பு

கொழும்பு,ஜன.1

சீருடையுடன் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த இராணுவச் சிப்பாய்க்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் ரணசேவா இராணுவ முகாமுக்கு அண்மையில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்துள்ளார் என்று பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த இராணுவச் சிப்பாய் நீண்டகாலமாக சீருடையில் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்து விற்பனை செய்து வந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச)

## பிரதம நீதியரசர் குறித்த தெரிவுக்குழு அறிக்கையை நிராகரித்தது ஐ.தே.கட்சி

### ஜனாதிபதிக்குக் கூட நம்பிக்கையில்லை என்கிறார் திஸ்ஸ



கொழும்பு,ஜன.1

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முற்று முழுதாக நிராகரித்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றப் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை ஒரு தலைப்பட்சமானது. அந்த அறிக்கை முழுமை பெறவில்லை. அதனால் குறித்த அறிக்கையை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது முதல் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை வரை சகல நடவடிக்கைகளும் வெளிப்படைத் தன்மையற்ற வகையில் அமைந்துள்ளது.

தமது பக்க நியாயங்களை விளக்குவதற்கு அரசு, பிரதம நீதியரசருக்கு போதியளவு கால அவகாசத்தை வழங்கத் தவறியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே நம்பிக்கை இல்லை. அதன் காரணமாகவே சுயாதீன ஆணைக்குழு ஒன்றை நிறுவி அதன் மூலம் ஆராய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

எனவே, அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளது.- என்றார். (ச)

# கொழும்பு கச்சேரியில் தீ; நிர்வாகத்தில் குறைபாடா?

### உண்மையைக் கண்டறிய குழு நியமனம்

கொழும்பு,ஜன.1

கொழும்பு கச்சேரியில் தீ பிடித்த சம்பவத்துக்கு நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைபாடு காரணமா? என்பதைக் கண்டறிவதற்கு விசேட குழு நியமிக்கப்படவுள்ளது.

இவ்வாறு பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்தார்.

அமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சின் மேலதிகச் செயலாளர் தலைமையில் நியமிக்கப்படும் அந்தக் குழுவில் விசேட கணக்காளர்கள் உள்ளடக்கப்படுவர்.

**இந்தச் சம்பவத்தால் பொது மக்களின் இடைப் பட்ட சில வசதிகள் மாத்திரமே இல்லாமல் போயுள்ளனவே தவிர அவர்க ளுக்கு வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை.**

அந்தக்குழு நிர்வாகத்தின் குறை, நிறைகளை கண்டறிவதுடன், தீ விபத்தால் ஏற்பட்ட மொத்த சேத விவரங்களைக் கணக்கெடுக்கவுள்ளது.

பொலிஸார் முன்னெடுத்துவரும் விசாரணைகளுக்கு நிர்வாக மட்டத்தில் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கவுள்ளோம்.- என்றார்.

செய்தியாளர் மாநாட்டில் மாவட்டச் செயலர் கமல் பத்மசிறி தெரிவித்ததாவது:-

இந்தச் சம்பவத்தால் பொது மக்களின் இடைப்பட்ட சில வசதிகள் மாத்திரமே இல்லாமற் போயுள்ளனவே தவிர அவர்களுக்கு வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை.

காணி விவரங்கள் மற்றும் திருமணப் பதிவுகள் ஆகியவற்றை பிரதேச செயலர் பிரிவுகளினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.-என்றார். (ச)



## பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு கல்விமுறையில் மாற்றம் தேவை

### நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜன.1

நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்புவதற்கு கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படுவது மிக அவசியம்.

இவ்வாறு இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கல்விக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் பல்கலைக்கழகப் படிப்புக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது.

அ. ந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்கத்தைய கல்வி முறையையே நாம் இன்னும் பின்பற்றுகிறோம். ஆசியாவின் ஆச்சரியமாக நாட்டைக் கட்டியெழுப்ப கல்வித்துறையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கான காலம் உருவாகியுள்ளது.

பொருளாதாரத்திலும் உட்கட்டமைப்பு வசதிகளிலும் நாடு பலப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் நாட்டின் மனித வளம் அபிவிருத்தியைப் பொறுப்



பேற்கும் வகையில் பலப்படுத்தப்படவில்லை.

அபிவிருத்திக்குப் பொருத்தமான கல்வி முறையை ஏற்படுத்தக் கூடிய காலம் உருவாகியுள்ளது. நவீன கல்வி முறையை ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை அறிமுகப்படுத்த வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

நாடு பல வழிகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது. எனினும் அன்று ஏகாதிபத்தியவாதிகள் தமது அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிவதற்கு வழங்கப்பட்ட கல்வி முறைமையில்தான் நாம் இன்றும் தங்கியிருக்கின்றோம்.

2012ஆம் ஆண்டு பல சவால்களை எதிர் கொள்ள நேர்ந்த ஆண்டாகும். நாம் பல சவால்கள், இயற்கை இடர்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. வருட இறுதியில் வெள்ளப் பெருக்கு ஒன்றை எதிர்கொள்ள நேர்ந்தது.

நாட்டின் மாணவர் சமூகத்துக்கு அநீதி இடம்பெற நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதனால்தான் சிறந்த கல்வி மேம்பாடு தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். 21 ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான கல்விமுறை நாட்டுக்குத் தேவையாகும். இந்த நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள மாணவர் சமூகத்தைப் பாதுகாப்பது எமது பொறுப்பு.

பல்கலைக்கழக மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்பதில்லை. எனினும் அவர்களின் செயற்பாடுகள் முழு பல்கலைக் கழகத்துறையையும் சீர் குலைத்து விடக்கூடாது.- என்றார். (ச)

## வாய்ப்புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க ஒருவருக்கு 16 மில்லியன் ரூபா செலவு

### சுகாதார அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு,ஜன.1

வாய்ப்புற்று நோய்க்கு ஆளாகியுள்ள ஒருவருக்கு சிகிச்சை அளிக்க அரசு வருடத்துக்கு 16 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடுவெல, போமிரிய மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மகரகம புற்று நோய் வைத்திய சாலையில் வாய்ப்புற்று நோய்க்கு சிகிச்சை பெறுபவர்களில் 80 வீதமானோர் புகைப்பிடித்தல் பழக்கத்தாலேயே அந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

வாய்ப்புற்று நோயின் பாதிப்புக்களைச் சித்திரிக்கக்கூடிய புகைப் படங்கள் ஒவ்வொரு சிகரெட் பெட்டியினதும் வெளிப்பகுதியில் 80 வீதம் காட்சிப்படுத்த வேண்டும். அதனை வலியுறுத்தும் வகையில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அந்தக் கட்டளை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

அந்த வர்த்தமானிக்கு எதிர்ப்புத் தெரிவித்து புகையிலைக் கைத்தொழிலாளர்கள் சிலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

எனினும் அந்த வர்த்தமானியில் ஓர் எழுத்தைக்கூட மாற்றுவதற்கு நான் தயாரில்லை. வாய்ப்புற்று நோய் காரணமாக நாட்டில் தினமும் குறைந்தது இருவர் உயிரிழக்கின்றனர்.

அந்த நோய்க்கு உள்ளாகி இருப்பவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வருடா வருடம் அதிகளவு பணத்தை அரசு செலவிட்டு வருகின்றது. ஒரு வருடத்துக்குக் குறைந்தது 16 மில்லியன் ரூபா ஒருவருக்காகச் செலவிடப்படுகிறது.

எனவே புகைப்பிடித்தல் பழக்கத்திலிருந்து நாட்டு மக்களை விடுவிப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

வவுனியா நகரில் உள்ள பிரபல சிகை அலங்கரிப்பு (சலூன்) ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0772222533

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 31 ஆவது பிறந்த தினமும்



பிறப்பு 14.01.1982 இறப்பு 01.01.2006

### சிவலிங்கம் சிவரூபன்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி மேற்கு,
மாசிவன். (27479)(3.6) குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 ★ 04 ★ 1934
மறைவு 01 ★ 01 ★ 2010



### காசிப்பிள்ளை கணேசரத்தினம்

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

பாடசாலை வீதி, திருநெல்வேலி. மனைவி.

## மரண அறிவித்தல்

### சின்னராசாபத்தர் ஜெயக்குமார்

(சமாதான நீதிவான்)
(லக்ஷ்மி ஜுவல்லர்ஸ், அபிராமி ஜுவல்லர்ஸ், மன்னார்)



திருகோணமலை, கூனித்தீவை பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசாபத்தர் ஜெயக் குமார் நேற்று (31.12.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னராசாபத்தர்- சௌந்தரிப் பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான காளிக்குட்டி- தவமணி தம்பதியரின் மருமகனும், இராசநாயகியின்அன்புக் கணவரும், அம்பிகை தாசனின் அன்புத் தந்தையும், சுபாசினியின் மாமனாரும், சகீர்த்தனாவின் தாத்தாவும், கிருஷ்ண குமார் (ஓய்வுபெற்ற உப அதிபர் யாழ்.இந்துக்கல்லூரி), சாந்தகுமார் (அபிராமி ஜுவல்லர்ஸ், பெரியகடை, மன்னார்), இரெட்ண குமார்(லக்ஷ்மி ஜுவல்லர்ஸ், பெரிய கடை, மன்னார்), உதயகுமார், தனலக்ஷ்மி, மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயவர்த்தனராஜா (ஜெயாஸ் ஜுவல்லர்ஸ், பருத்தித்துறை), பேரின்பம், ஜெகநாதன், வரதன், சரோஜா, சுசீலா, கிருஷ்வேணி, விஜயா ஆகியோரின்அன்பு மைத்துனரும், தர்ஷினி, நிஷாந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சுகன்யா, ஜயந்தன், சிவசங்கர், கிருஷாந்தன், தனுப்பிரியா, யவிப்பிரியா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜெயகீதா, ஜெயராதிகா, லக்சிதன், கிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2013) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சாந்தகுமார் (சகோதரர், அபிராமி ஜுவல்லர்ஸ்,மன்னார்)

116/36, சென்.செபஸ்ரியன்வீதி,
சென்.ஜோசப் ஒழுங்கை,
மன்னார்.

## மலர்ந்த நினைவுகள்

அமரர்
### ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியூன் செல்வன்)



மலர்ந்த காலம் 01.01.1943
உதிர்ந்த காலம் 20.05.2005

சர்ப்பவியுகத்திற்குள் பூமி
மையம் கொண்டால்
விண்ணும் மண்ணும்
நிர்மூலமாகப் போய்விடும்
நெருப்பு மல்லிகை புதிய யுகம்
கண்டு சிலிர்த்து நிற்கும்
நாணலின் கீதை கேட்டு தென்றல்
இசை எழுப்பும்
விடியலை தேடும் வெண்புறா சிறகை விரித்துப் பறக்கும்
கானலகத்தின் கால் நடைகள் மகிழ்ந்து உறவாடும்.
உன் நினைவு கண்களை குளமாக்கும்
சின்ன மீன்கள் அதில் நீந்தி விளையாடும்
பசுமை எங்கும் பசுமை

நினைவில் வாழும்
புவனா (மனைவி), இராகுலன் (மகன்).

No-10, அத்தியடி, யாழ்ப்பாணம். (C-5107)(6.11)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் நல்லைநாதன்

(ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி)

கோப்பாய் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நல்லைநாதன் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி) 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும், கஜாவல்லியின் அன்புத் தந்தையும்,சசித் தேவனின் அன்பு மாமனும், சுமங்கலா,நித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், வீரலட்சுமி மற்றும்தெய்வநாயகி காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இராமநாதன் (தென்னாபிரிக்கா), காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் Dr.வீரவாகு (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.12.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.கனகமணி(மனைவி)

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (27418) (6.4)

## தவறிவிட்டது

மானிப்பாய் வீதி,மருதனார்மடம் சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த இளையதம்பி ஆனந்தநடராசா என்பவரது தேசிய அ. அட்டை (541683402V) சாரதி அனுமதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம்,வாகன காப்புறுதிப் பத்திரம் என்பன26.12.2012 அன்று மருதனார் மடபெற்றோல் நிலையத்திற்கு அருகில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் 0777699991.என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஏரம்பு முருகேசு
தோற்றம்- 14.01.1938
மறைவு - 29.11.2009



திருமதி
முருகேசு மனோன்மணி
தோற்றம்- 14.01.1940
மறைவு - 13.01.2001



அமரர்
முருகேசு சுதர்சன்
தோற்றம் - 11.09.1975
மறைவு - 21.08.2000

எங்கள் குடும்ப விளக்காய் வாழ்ந்திட்ட எங்கள் தெய்வமே
எந்த உறவுகள் இருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமா
எம்மை விட்டுப் பிரிந்து பதினோராண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடனே நிலைத்திருக்கும்.
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நுணாவில் மேற்கு,
மடத்தடி, சாவகச்சேரி. குடும்பத்தினர். (27389)(5.6)

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள சாப்பாட்டுக் கடைக்குரிய மேசை, கதிரை,கண்ணாடி அலுமாரி,பட்டடை மேசை என்பன உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 9057937, 0776102448. (27423) (6.7.4)

## வாடகைக்குண்டு

றூம் , பற் பொடி தயாரிக்கும் உபகரணங்கள், ரொபிக் கம்பனி உபகரணங்கள், மிக்சர் தயாரிக்கும் உபகரணங்கள் வாடகைக்குண்டு.

T.P 077 9620394, 021 222 6660.

தேவை

மிக்சர் கம்பனிக்கு வேலையாள்கள் தேவை இருபாலாரும்

T.P 077 3200727, 077 9620394. (27374)(6.4)

## வான் விற்பனைக்கு

57- XXXX தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:சி 0770258803. (27421) (6.7.4)

## Maths Personal Class

6-11 வரையிலான வகுப்புகளுக்கு கணித பாடம் அடிப்படையில் இருந்து வீட்டில் வந்து கற்பிக்கப்படும். (விடுதி மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும்)

தொடர்புகளுக்கு: 0750474001 (27396)(6.4)

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன

தொடர்பு:0770440570 (அப்பனம்)
சோவி ரேடிற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம். (27264) (6.7.4)

## Lukshmee Transport



★ 9 தொன் சுமை ஏற்றக் கூடிய TATA லொறி வாடகைக்கு விடப்படும்.

★ 38 ஆசனங்கள் உடைய அரைச் சொகுசு TATA BUS வாடகைக்கு விடப்படும்.



பாடசாலைகள், நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்களுக்கு விசேட விலை கழிவு வழங்கப்படும்.

T.P:- 0215670256

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (சி/6160)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

# தமிழர்கள் தன்னெழுச்சியாக உலகளாவிய அறவழிப் போர்முனைகளை திறந்துள்ளனர்

## இவை உலகளவில் புதிய அடையாளத்தைத் தரும் என்கிறார் ஜெகத் கஸ்பார்

**ஈழத்தில் இன்று வாழ்வை மீள் கட்டமைக்கத் தடுமாறும் விதவைகள், உடல் உறுப்புகளை இழந்தோர், அநாதைக் குழந்தைகள் ஆகியோருக்கு தமிழக மக்கள் உதவ வேண்டும்.**

இந்தியப் பெருங்கடலில் வேகமாக விரிந்து வரும் சீனாவின் ஆதிக்கம் இந்தியா வுக்கு அச்சுறுத்தலாகவும், அமெரிக்க - ஐரோப்பிய - ஜப் பான் நாடுகளுக்கு கவலை தருவதாகவும் உள்ளது.

சீனாவின் மேலாதிக்கம் எல்லை மீறுமானால் தமிழர்களே வேண்டாம் என்று சொன்னாலும் அந்த வல் லரசு நாடுகளில் செல்வாக்கு மிக்கோர் இலங்கையைத் துண்டாடி தமிழ் ஈழம் உரு வாக்குவார்கள்.

வெரித்தாஸ் வானொலி 'தமிழ்ப்பணி'யின் முன்னாள் பொறுப்பாளரான ஜெகத் கஸ்பார் 'நாம்' அமைப்பின் முக்கியஸ்தரும் ஆவார்.

நாம் அமைப்பும் தமிழ் மையம் அமைப்பும் இணைந்து சங்கம் 4 என்ற பெயரில் 21 நாள் மார்கழித் தமிழ் விழா நிகழ்வை இராயப் பேட்டையில் நடத்தி வருகிறது. இதில்/ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

"முள்ளி வாய்க்கால் முடிவா, தொடக்கமா?'' என்ற தலைப்பில் அவர் தொடர்ந்து உரையாற்று கையில் மேலும் கூறியதாவது:-

''முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின் உல கெங்கும் தன்னெழுச்சியாக தமிழர்கள் நூற்றுக் கணக்கான அறவழிப் போர் முனை களைத் திறந்துள்ளனர். இந்தப் புதிய போர் ஒட்டு மொத்த தமிழினத்திற்கும் உலக அளவில் புதிய அடையாளத்தையும், அங்கீகாரத் தையும் பெற்றுத் தரும். உலகின் பல்வேறு நாடுகள், குறிப்பாக மேலைத் தேய நாடுகள் இந்தப் புதிய அறவழிப் போரை ஏற்று ஊக்கு விக்கின்றன.

ஈழத்தில் இன்று வாழ்வை மீள் கட்டமைக்கத் தடுமாறும் விதவைகள், உடல் உறுப்புகளை இழந்தோர், அநாதைக் குழந்தைகள் ஆகியோருக்கு தமிழக மக்கள் உதவ வேண்டும். மத்திய மாநில அரசுகளும் ரோட்டரி, அரிமா உள்ளிட்ட சமூக அமைப்புகளும் இணைந்து செயற்படும் முறைப்படியான புனரமைப்பு நிறுவனம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் தமிழகத்தின் கட்சிகளுக்கு இடையேயான போட்டி அரசியலில் சிக்கிச் சின்னாபின்னமாகி உள்ளது- என்றார். (3)

## நலிவுற்ற குடும்ப மேம்பாட்டுக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜன.1

சமூக சேவைகள் அமைச்சால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 25 பேருக்கு நலிவுற்ற குடும்ப மேம்பாட்டுக்கான சுயதொழில் முயற்சி உதவு தொகை 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு வாரியாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்த 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குடும்பங்கள் தமது குடும்பத்தின் வாழ்வாதாரம் மற்றும் மேம்பாடு தொடர்பான முயற்சிகளுக்கு நிதியை பயன் படுத்த வேண்டும்.

மேற்படி நிதியை சமூக சேவைகள், அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் பயனாளிகளிடம் நேரில் கையளித்துள்ளார்.

(ம-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்ப்பாணம், கடையிற் சுவாமிகள் குருவார அன்ன சத்திர சிவன் ஆலயத்தில் ஆண்டுப் பிறப்பு பூசை இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சங்கட ஹர சதுர்த்தி பூசையும், ஆண்டுப் பிறப்பு பூசையும் இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (3)

## வைரவர் ஆலய புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,ஜன.1

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்வளவு வைரவர் ஆலய அபிவிருத்தி செயற்திட்டத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் ஆலய நிர்வாகம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மக்களின் இடப்பெயர்வுகள் காரணமாக இந்த ஆலயம் அழிவடைந்தும் சேதமடைந்தும் காணப்பட்டது.

இந்தநிலையில் பொது மக்கள் வைரவர் ஆலயத்தை திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில் 50 ஆயிரம் ரூபா நிதி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ளமை வைரவர் ஆலயத் திருப்பணிகளை விரைவாக மேற்கொள்ள உதவியாக உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(3-86)

## மதகு உடைந்தமையால் போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்புத்துறை,ஜன.1

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் மதகின் நடுப்பகுதி உடைந்து காணப்படுகின்றது.

வீதியின் நடுவே மதகு சேதமடைந்திருப்பதால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் இந்த வீதியூடாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்து பெரிதும் பாதிப்படைந்துள்ளதுடன் பலத்த சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டி இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-135)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.07.1976

உதிர்வு 01.01.2009

## நடராசா கமலராஜ்

(கணக்காளர் - கரைச்சி வடக்கு - ப.நோ.கூ. சங்கம், பரந்தன்)

திதி: பஞ்சமி - 16.01.2013

கள்ளங்கபடமற்ற எங்கள் கண்மணியே கமலராஜ்
காலம் நான்கு ஆண்டுகள் கணப் பொழுதில் ஓடியதேன்
எம் உள்ளக் கோயிலிலே உன் நினைவுகள் தானிருக்க
உன் உடலை விட்டு உயிரோ மாயமாய் மறைந்ததுவோ
உன் உடலை சாம்பராக்கி மண்ணோடும்
நீரோடும் கலந்துவிட்டோம்
உன் நினைவை எம் சுவாசக் காற்றோடு கலந்து விட்டோம்
உன் நினைவை மறப்பதாயின் எம் சுவாசம் நின்று விடும்
உன் அழகு முகம் தெரியாது மகள்
**பவிஷாவோ** உன் நிழற் படத்தைப் பார்த்து
அப்பா எப்போ வருவார்? என தினமும் வினவுகிறாள் அதற்கு
பதில் கூற முடியாமல் பரிதவிக்கும்
உன் தாரம் நான், நீயோ மாயமாய் இங்கு வந்து உன் மகளின்
ஏக்கத்தைத் தீர்த்து உள்ளம் குளிர வைப்பாயோ?
நாமும் உன் திருமுகத்தை பார்த்து
அக மகிழ்வோமே

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.

மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

(27327)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய இலச்சினை அறிமுகம்



இலங்கை மத்திய வங்கி நாணய சபையினால் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின் கீழ் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனிக்கு நிதியம் வர்த்தகத்தை முன்னெடுப்பதற்கான அனுமதி உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிதி அனுமதிப்பத்திரமானது, சில்லறை வர்த்த நிதியளித்தல் துறையில் தமது இருப்பை பதிவுசெய்தவாறு, தம் வாடிக்கையாளர்களுக்கு முழுமையான நிதிச் சேவைகளை அளிப்பதற்கு வழிவகுக்கின்றது.

இந்த புதிய அடையாளம் குறித்து கருத்துத் தெரிவித்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான டி.பி. குமாரகே 'மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு' நாம் தயாராகும் இவ்வேளையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிகுந்த நிகழ்வில் மிகக் குறுகிய காலப் பகுதியில் நிறுவனம் ஈட்டியுள்ள சாதனைகள் குறித்து குறிப்பிடாமல் இருக்க முடியாது.

எமது செயற்பாடுகளை ஆரம்பித்த முதல் நாளிலிருந்து 6 வருடங்களில் இலங்கையின் முதன்மை லீசிங் நிறுவனம் என்ற சாதனையை நாம் கையகப்படுத்திக் கொண்டோம். தொடர்ச்சியாக கடந்த 10 வருடங்களாக நாம் இந்த தராதரத்தைப் பேணி வந்துள்ளோம். - என்றார்.

நாட்டின் நிதித்துறை வரலாற்றுக்கும் எமக்கும் பெருமை தரும் இத்தருணத்தில் வினைத்திறன்மிகு இலக்குகளை நோக்கித் தீர்க்கமான இலக்குகளுடன், சர்வதேச இருப்புடன் கூடிய வலுவான கூட்டிணை நிறுவனமாக, சவால்களை எதிர்கொள்ள நாம் தயாராகியுள்ளோம்." என்றார்.

PLC

பீப்பிள்ஸ் லீசிங் பிஎல்சி (PLC), என்று முன்னர் அறியப்பட்ட பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் 'மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுதல்' என்ற தொனிப் பொருளுடன் கூடிய தமது புதிய வர்த்தகச் சின்னத்தை அறிமுகப்படுத்தியது.

# கொமர்ஷல் வங்கிக்கு விருது



கொமர்ஷல் வங்கிக்கு வங்கித் துறையில் சிறந்த வருடாந்த அறிக்கைக்காக தங்க விருது கிடைத்துள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த 48 ஆவது வருடாந்த அறிக்கைகளுக்கான விருது வழங்கும் விழாவில் கொமர்ஷல் வங்கிக்கு 2011ஆம் ஆண்டின் வங்கியின் வருடாந்த அறிக்கைக்கு ஒரு தங்க விருது உட்பட மூன்று விருதுகள் கிடைத்துள்ளன.

வங்கிகளின் வருடாந்த அறிக்கைகள் அனைத்தும் மீளாய்வு செய்யப்பட்டே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. வருடாந்த நிதி அறிக்கையிடலில் மொத்த சிறந்த செயற்பாட்டுக்கான வெண்கல விருதும் வங்கிக்கு கிடைத்துள்ளது.

சகல துறையினதும் அறிக்கைகள் இதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் கூட்டாண்மை ஆளுமைக்கான வெள்ளி விருதும் வங்கிக்கு கிடைத்துள்ளது. வங்கித்துறைப் பிரிவில் கொமர்ஷல் வங்கி ஒன்பதாவது தடவையாக தங்க விருதை வென்றுள்ளது.

"உயர்வானதொரு சூழலில் எமது செயற்பாடுகள் விரிவாக்கமும், வளர்ச்சியும் கண்டு வருகின்ற நிலையில் நிதியிடல் அறிக்கையின் தரத்தை நிதானமாகவும் அதே நேரம் சர்வதேச தரம் மிக்கதாகவும் பேண வேண்டிய தேவையும் உள்ளது என்று கூறினார் வங்கியின் பிரதம நிதித்துறை அதிகாரி நந்திக புத்திபால.

ஒவ்வொரு வருடமும் கொமர்ஷல் வங்கி அதிகம் கவனம் செலுத்துகின்ற ஒரு பிரிவாகவும் இது உள்ளது. வங்கித் துறையில் மட்டுமன்றி ஏனைய எல்லா நிதித்துறை பிரிவுகளிலும் அறிக்கையிடலில் நாம் தொடர்ந்தும் ஒரு முன்மாதிரியாக இருப்பதையிட்டு நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம் என்று அவர் மேலும் கூறினார்.

# வருகிறது Apple iTV




அப்பிள் நிறுவனம் அடுத்ததாக தொலைக்காட்சி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. தற்போது Apple iTV தயாரிப்பதற்கான முதற்கட்ட சோதனைகள் Hon Hai என்ற நிறுவனத்தில் நடைபெறுவதாகவும், இந்த தொலைக்காட்சிகள் 46 மற்றும் 55 அங்குலம் என்ற அளவில் இருக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த தொலைக்காட்சி சிறப்பான தொழில்நுட்பங்களை கொண்டதாக இருக்கும் என்றும், IOS இயங்குதளத்தை அடிப்படையாக கொண்டு இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்கிறது கார்களின் விலை



உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் அந்நிய செலாவணிப் பரிமாற்றத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வு ஆகிய காரணங்களால் மாருதி சுசூகி நிறுவனம் உட்பட பல்வேறு இந்திய கார் நிறுவனங்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் கார்களின் விலையை உயர்த்த உள்ளன.

இதனால் ஜனவரிக்குப் பின் இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் இந்திய கார்களின் விலைகள் இங்கும் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

# ஜனசக்தி நிறுவனத்துக்கு விருது

இவ்வாண்டு நடைபெற்ற ஆசிய தொழில்நுட்ப காப்புறுதி விருது வழங்கும் நிகழ்வில் உள்நாட்டு காலநிலை மாற்றங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட பூகோள தகவல் செயல்முறையை அடையாளப்படுத்தும் நோக்கில் ஜனசக்தி நிறுவனத்திற்கு சிறந்த தொழில்நுட்ப காப்புறுதி வழங்குநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்ற இரண்டாவது ஆசிய தொழில்நுட்ப காப்புறுதியின் மூலம், பிராந்திய ரீதியில் காப்புறுதி நட்ட அச்சத்தை தவிர்க்க புதுமையான தீர்வுகளை வழங்கிய காப்புறுதி நிறுவனங்களை அடையாளப்படுத்தும் நோக்கில் இவ்விருதானது வழங்கப்பட்டிருந்தது.

2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் செயற்பாடுகளை ஆரம்பித்தது முதல், ஜனசக்தி நிறுவனத்தின் தீர்வுகள் காப்புறுதி உள்ளக தரவுகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு Google maps மூலம் GIS சேவைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ் ஒழுங்குமுறையானது வெள்ளப்பெருக்கு இடம்பெறக் கூடிய அதிகூடிய மற்றும் குறைவான ஆபத்து கொண்ட இடங்களின் சரியான விபரங்களைக் காப்புறுதி செயல்முறை ஊடாக வழங்கி பொருத்தமான நட்ட அச்ச பகுப்பாய்வுகளைத் தெரிவு செய்யக்கூடிய வகையிலான தீர்வுகளை வழங்குகிறது.

மேலும், இதனூடாக Monitor motor claim Processing பணியாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யக்கூடிய வகையிலான விரிவான அம்சங்களும், ஜனசக்தி காப்புறுதியின் call center பணியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தக் கூடிய வகையிலான வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# SLT இன் நத்தார் இணைப்பு

Sri Lanka Telecom

ஒரே தேசம். ஒரே குரல்.

சிறிலங்கா டெலிகொம், இந்த பண்டிகைக்காலத்தின் மகிழ்ச்சியை மேலும் பரவச் செய்யும் வகையில், 'SLT நத்தார் இணைப்பு' வழங்கல்கள் என்ற பல்வகை வெகுமதிகள் கட்டணக்கழிவுகள் கொண்ட சலுகையை அமுல்படுத்தியுள்ளது.

வருடாந்தோறும் டிசம்பர் 9ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை இடம்பெறும் சிறிலங்கா ரெலிகொம் நத்தார் வழங்கல்கள், நாடளாவிய ரீதியிலும் ரெலி ஷொப்கள், சிறிலங்கா ரெலிகொம் பிராந்திய தொலைத்தொடர்பாடல் நிலையங்கள் ஊடாகக் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மெகாலைன், புரோட்பாண்ட் Peo TV மற்றும் சிற்றி லிங்க் இணைப்புகளுக்கு வழங்கப்படுகின்றது.

'SLT நத்தார் இணைப்பு' வழங்கல் சலுகையானது, குறித்த சலுகைக் காலப்பகுதியில் மெகாலைன் இணைப்பை கொள்வனவு செய்வோருக்கு இலவச சுவர்க் கடிகாரம் ஒன்று கிடைக்கும் அதேநேரத்தில் சிற்றி லிங்க் இணைப்புகள் ரூ.1,900 ரூபா என்ற குறைக்கப்பட்ட விலை மற்றும் முதல் மாதத்திற்கான இலவச ரிங்-இன் டோன்கள் சலுகையுடன் கிடைக்கின்றது.

புரோட்பாண்ட் இணைப்புகளின் முதன்மைக் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்பட்டமைக்கு மேலதிகமாக வாடிக்கையாளர்களின் இல்லங்களை Wi-Fi வலயமாக மாற்றுவதற்கு உத்தேசித்திருக்கும் சிறிலங்கா ரெலிகொம், புதிய புரோட்பாண்ட் இணைப்புகளுடன் 2,990 ரூபா என்ற அனைவரும் வாங்கக்கூடிய விலையிலும் ஏற்கனவே உள்ள இணைப்புகளுக்கு 3,160 ரூபா என்ற விலையிலும் 4 போர்ட் Wi-Fi ரௌட்டரை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 மாதங்களுக்கு ஒரு தடவை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

## கிழக்கு மாகாண சபை தீர்மானம்

திருகோணமலை,ஜன.1

கிழக்கு மாகாண சபை இந்த ஆண்டில் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை மாவட்ட ரீதியில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங் களை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் தலை நகரங்க ளில் மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் நடத்தப்படும்.

இந்தக் கூட்டங்களில் குறித்த மாட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண சபையின் செயலாளர், மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக் களங்களின் தலை வர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

கிழக்கு மாகாணசபை மாவட்ட ரீதியில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களை அமைத்து 4 மாதங்க ளுக்கு ஒரு தடவை கூட்டங்களை நடத்தத் தீர்மானித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உது மாலெப்பை சமர்ப் பித்த அமைச்சரவை பத்திரத்திலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தும் யோசனையை சிபாரிசு செய்திருந்தார். அதற்கு கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணுலக சேவைக்காக 25.07.1946



விண்ணுலக வாழ்வுக்காக 02.12.2012

### தர்மலிங்கம் சிவராஜா

கடந்த (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த பாசமிகு குடும்ப விளக்கு தர்மலிங்கம் சிவராஜா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (03.01.2013) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும், அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

உல்லாசப் பயணிகளை வரவேற்க

## கிழக்கு நகரங்களில் வரவேற்புத் தூண்கள்

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள முக்கிய நகரங்களில் வரவேற்புத் தூண்களை நிறுவ கிழக்கு மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளது. உல்லாசப்பயணிகளை வரவேற்கும் விதத்தில் பொருத்தமான வசனங்களுடன் இந்த வரவேற்புத் தூண்கள் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்யவே இவ்வாறான தூண்கள் அமைக்கப் படவுள்ளன. இதுதொடர்பாக மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை சமர்ப் பித்த அமைச்சரவைப் பத்திரத்தை கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




## மரண அறிவித்தல்



### வல்லி பசுபதி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், அச்செழு வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி பசுபதி நேற்று முன்தினம் (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், விஜயபாஸ்கர் (பாபு - ஆஸ்திரேலியா), வாசுகி (லண்டன்), விமல்ராஜ், வாகீசன் (துசி - லண்டன்), அம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், ரொனி (லண்டன்), வினோதினி ஆகியோரின் அன்பு மாமனும், தாசிக் (லண்டன்), கிசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வடக்கு,
அச்செழு.

தகவல்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி பாலாம்பிகை பொன்னுத்துரை



இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் திரு. பொன் . பாலகுமார் அவர்களுடைய அருமைத் தாயார் திருமதி பாலாம்பிகை பொன்னுத்துரை அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவர்தம் குடும்பத்தாரின் துயரில் உரும்பிராய்க் கிளை, இலங்கைவங்கி சமூகம் இணைந்து கொள்கின்றது.

முகாமையாளர், பணியாளர்
இலங்கை வங்கி, உரும்பிராய்க் கிளை.

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி பாலாம்பிகை பொன்னுத்துரை



இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக்கிளையின் சிரேஸ்ட முகாமையாளர் திரு. பொன் . பாலகுமார் அவர்களுடைய அருமைத் தாயார் திருமதி பாலாம்பிகை பொன்னுத்துரை அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவர்தம் குடும்பத்தாரின் துயரில் சுன்னாகம் இலங்கைவங்கி சமூகம் இணைந்து கொள்கின்றது.

முகாமையாளர், பணியாளர்
இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக் கிளை.
(உ5190)

## மரண அறிவித்தல்



### நடராசா முருகதாசன்

(விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கைதடிச்சந்தி)

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முருகதாசன் நேற்று(31.12.2012) திங்கட்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா -செல்லம் தம்பதியரின் அன்பு மூத்தமகனும், சரஸ்வதியின் பாசமிகுகணவரும், தம்பையா - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜா, காலஞ்சென்ற ஜெயரூபன் மற்றும் மாலினி, பவளதர்சினி, திபரூபன், பத்ம ரூபன்,தவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,லோகநாதனின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிர மணியம், பாலகுகன், முகுந்தன்,சஞ்சிகா ஆகியோரின்பாசமிகு மாமனாரும், விதுர்ஷன், பிருத்திகா,ஜான்ஷிகா, அபிகிருஷ்ணா ஆகியோரின் அருமைத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2013) புதன்கிழமை மு.ப 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(சி/5183) (6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பாலகுமாரன் அவர்களின் அன்புத் தாய்

**பொன்னுத்துரை பாலாம்பிகை**

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிர்வோர்.

மு.சிவசுந்தரலிங்கம், ந. கணேசலிங்கம், ப.முருகையா

உரும்பிராய். (27399)(3)

## ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

பின்வரும் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

1. பகல், இரவு காவலாளர்
2. தோட்டப் பணியாளர்கள்
3. பெண் விடுதிச்சாலை உதவி மேற்பார்வையாளர்.

மேற்குறித்த பணிகளுக்குப் பொருத்த மானவர்கள் தங்கள் அனுபவ விவரங்களுடன் 10.01.2013 ஆம் திகதிக்கு முன் விண்ணப் பிக்கலாம்.

ஆறு. திருமுருகன்
(தலைவர்)
நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(சி/5186)(3)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை பாலாம்பிகை



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், நல்லூர் ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலாம்பிகை நேற்று (31.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரையின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குரும்பசிட்டி தம்பிப்பிள்ளை - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், பாலகுமார் (முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்), வைத்திய கலாநிதி சகிதேவி ஆகியோரின் தாயும், நவசக்தி (இந்தியா), தயாபரன் (எந்திரவியலாளர்) ஆகியோரின் மாமியும், சஞ்ஜைகுமார் (எந்திரவியலாளர் - இந்தியா), ஜனகன் (பட்டதாரிமாணவன் - இந்தியா), தீனதாயாள் (எந்திரவியலாளர் - கனடா), திவாகர் (மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2013) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூரில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/5188)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### யுவக்கீம்பிள்ளை செபமாலை



போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யுவக்கீம்பிள்ளை செபமாலை ராசா கடந்த (28.12.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற அனனியாஸ் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செபமாலை முத்துவின் அன்புக் கணவரும், செல்வராஜா (நோர்வே), செல்வராஜினி (இலங்கை), செல்வரஞ்சிதம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, யோகராஜா, தவராஜா (ஆஸ்திரேலியா), செல்வறோகினி (ஜேர்மனி), விஜயராஜா (ஆஸ்திரேலியா), ரட்ணராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசாத்தி, ரத்தினம், காலஞ்சென்றவர்களான புஸ்பம், நாயகம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், எலிசபேத்ராணி (நோர்வே), பயஸ் (பகறின்), சூசைராஜா (ஆஸ்திரேலியா), யூலியானா (இலங்கை), ஜடாபவானி (ஆஸ்திரேலியா), எட்வின் (ஜேர்மனி), ரனுகாந்தினி (ஆஸ்திரேலியா), உதயராணி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற றொபேட், றொட்டினி, கங்கா, வதனா, றொபின், வளர்ப்பு மகள் றீற்றா, ராஜினி, றஜனி, கௌரி, கௌசி, றமணன், றஜீத், யோகா, ஜெயா, பிறேம், றஜீம், மார்க்கோ, நோயல், ஜலீன், கொட்பிறி, கொட்வின், றனுசியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (05.01.2013) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் போயிட்டி புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் துக்கத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித லூர்த்து அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி,
இளவாலை.

தகவல்:
பிள்ளைகள்.
0214915364, 07566342..
0779863406, 0213201305

# வாகன விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு,ஜன.1

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைக் கல்லாறு கிராமத்தில் நேற்று திங்கட் கிழமை இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் பிக்கப் வாகனமும் நேருக்குநேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். கல்முனையிலிருந்து மோட்டார் சைக்களில் வந்தவரே அந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## நூல்கள் விற்பனையாகின்றன

ஆசிரியர் திரு. சுரேஸ்குமாரின் அனைத்து அலகுகளுக்குமான A/L இரசாயனவியல், படிப்பது எப்படி எனும் நூல்கள் எல்லா மாவட்ட பிரபல நூல் நிலையங்களிலும் விற்பனையாகிறது.

0775559028

## A/L CHEMISTRY HALL

2015 2வது பிரிவு ஆரம்பம்
(50 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்)
2013 3000M.C.Q, 2014 Physical

ஆசிரியர்:- சு.சுரேஸ்குமார் B.Sc. (Hons)

0775559028
G.P.S வீதி, Kalviankadu
K.K.S வீதி, Kokuvil.


## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் செல்லம்மா

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகநாதனின் (சண்கொமினிகேசன்) அன்பு மனைவியும், சத்தியதேவி (பிரான்ஸ்), சரோஜினிதேவி, தவபாலன் (பிரான்ஸ்), திலாகாதேவி (லண்டன்), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
(திருப்புகழூர் சிங்கம் மருமகன்,கிராம அலுவலர்)
திக்கரை, களபூமி, காரைநகர்.

## துயர் பகிர்கின்றோம்



திருமதி
*பாலாம்பிகை பொன்னுத்துரை*
இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையின் சிரேஸ்ட முகாமையாளர் பொன்.பாலகுமார் அவர்களுடைய அருமைத் தாய்
திருமதி **பாலாம்பிகை பொன்னுத்துரை** அவர்களின்
பிரிவால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஐ. அமரகுலசிங்கம் (இணுவில்)
ச.பேரம்பலம் (சுஜமுகன் களஞ்சியம்...)
...
...சுன்னாகம்)

## மரண அறிவித்தல்

திருமதி
**தங்கமுத்து தவமணி**



மறவன்புலோ கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தவமணி நேற்று முன் தினம் (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அ. தம்பிமுத்துவின் பாசமிகு மனைவியும், தங்கரத்தினம், காலஞ்சென்ற வேல்முருகு மற்றும் செல்வநாயகம் (சுவிஸ்), இராசபூபதி (இத்தாலி), சிவானந்தராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2013) புதன் கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மறவன்புலோ இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலோ கிழக்கு,
மறவன் புலோ.

(சி/2958) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாவது ஆண்டு அஞ்சலித்தீபம்

ஜனனம்
15 * 04 * 1927

சிவபதம்
13 * 01 * 2012



### அமரர் கந்தையா பொன்னையா

(வர்த்தகர்)

*திதி:அபரபக்க சதுர்த்தி (01.01.2013)*

எங்களது குலதெய்வமாகிய அப்பாவே! புத்திரச் செல்வங்களை எல்லாம்
சுவை தோய்ந்த கனியாக வளர்த்தீர்களே!
இன்று தங்களது பிரிவுத்துயரோ என்றென்றும் எம்மை விட்டு அகலாது.
காலத்தின் ஒளி விளக்காக எம்மோடு இருந்து.
உயர்வு கொடுத்து இன்றும் உயிருக்கு உயிராக விளங்குகின்றீர்களே!
தங்களது நினைவால் நாம் நேசமும் பாசமும் கொண்டு
ஆத்மா சாந்தியடைய வணங்குகின்றோம் அப்பாவே!

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

(27425)(5.6)

குடும்பத்தினர்.

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08.05.1952

மறைவு
02.01.2002



### அமரர் பொன்னையா கணேசலிங்கம்

(முன்னாள் முகாமையாளர், மக்கள் வங்கி - பருத்தித்துறை)

B.SC.(Estate management)

(திதி: அபரபக்க சதுர்த்தி (01.01.2013))

பாசமுடன் எமை வளர்த்தீர் பண்புகள் பல புகட்டினீர்
பாதியிலில் காலன் கைப்பட்டீர் பாரினில் உம் நினைவு மறவோம்
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

திகரி, புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

(25586)(6.11)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொற்றுநோய்கள் பரவும் சாத்தியம்

### எச்சரிக்கின்றனர் சுகாதாரப் பிரிவினர்

அக்கராயன், ஜன.1

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய ஏது நிலை காணப்படுகின்றது. ஆகையால் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இங்கு பெருமளவு மக்கள் நிரந்தர வீடுகளின்றி தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். தொடர்ச்சியான மழையால் சுரலிப்புகள் ஏற்பட்டு இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இயன்றவரை கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் மிக இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

கிளிநொச்சி, தருமபுரம், கண்டாவளை, வட்டக்கச்சி, அக்கராயன், பூநகரி, முழங்காவில் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக சிறுவர்களே அதிகளவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-18)

## இடம்பெயர்ந்து செல்லாத மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க அனுமதியில்லை

### தெரிவிக்கிறார் மாந்தை மேற்கு பிரதேச செயலர்

மன்னார், ஜன.1

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து செல்லாத நிலையில் தமது கிராமங்களில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் ஸ்ரீஸ்கந்தகுமார்.

வெள்ளப் பெருக்கின் காரணமாக சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களைச் சேர்ந்த 684 பேரும், ஈச்சலவக்கை கிராமத்தைச் சேர்ந்த 155 குடும்பங்களைச் சேர்ந்த 668 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களுக்குச் செல்லாது தமது கிராமங்களில் உள்ள உயர்ந்த பகுதியிலும், பொதுக் கட்டடங்களிலும் தங்கியுள்ளனர்.

தமக்கு அரசால் எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பாக பிரதேச செயலர் தம்மை வந்து பார்க்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். உணவைப் பெறுவதில் தாம் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்த இவர்கள் இராணுவத்தினரே தமக்கு உதவியதாகவும் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; சன்னார், ஈச்சலவக்கைக் கிராமங்களைச் சேர்ந்த மக்களில் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இடம்பெயர்ந்து செல்லாத நிலையில் தமது கிராமங்களிலேயே தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை.

மேலும் கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 26 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சகல உதவிகளும் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்தார். (க-12)

## போக்குவரத்து சிரமங்கள்

முல்லைத்தீவு, ஜன.1

கற்சிலைமடு மூன்றாம் கண்டத்திலுள்ள வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வீதி இரண்டாவது கண்டத்திலுள்ள வீதியூடாக பேராற்றுப் பாலம் வரை செல்கின்றது.

இதன் மோசமான நிலை காரணமாக மக்கள் ஏற்கனவே போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது வெள்ளமும் இந்த வீதியில் தேங்கியுள்ளதால் நிலைமை மோசமாக மாறியுள்ளது.

இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்து வழங்குமாறு இங்குள்ள யுக சக்தி மகளிர் சம்மேளனத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# அதிகரித்த கல்வி நிலையங்களால் மாணவர் மத்தியில் குழப்பநிலை

### வவுனியாவில் பெற்றோருக்கும் நெருக்கடி

வவுனியா, ஜன.1

***வவுனியா நகரப் பகுதியில் அதிகரித்துக் காணப்படும் தனியார் கல்வி நிலையங்களால் மாணவர் மத்தியில் குழப்ப நிலை உருவாகியுள்ளது.***


வவுனியா நகரை அண்மித்த வயிரவபுளியங்குளம், பூந்தோட்டம், குட்செட்வீதி, குருமன்காடு, இறம்பைக்குளம், பண்டாரிக்குளம் ஆகிய பகுதிகளில் இருபதுக்கும் மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுவதால் எந்தக் கல்வி நிலையத்துக்குச் செல்வது என்பதில் மாணவர்கள் குழப்பமான நிலையில் உள்ளனர்.

மேலும் ஆசிரியர்களில் பலரும் பல கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பிப்பதனால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் பல்வேறு வகையிலும் மாணவர்களிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

போட்டி அடிப்படையில் விசேட கருத்தரங்குகள், விசேட வகுப்புக்கள் என பனவும் இடம்பெற்று வருகின்றன. இவற்றுக்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவதால் பொருளாதார ரீதியான தாக்கங்கள் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதனால் பெற்றோரும் பிள்ளைகள் தொடர்பாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். பொருளாதார சிக்கல் மத்தியில் கல்விக்காக அதிகம் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. (க-402)



தரம் ஒன்று தொடக்கம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்ட வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம் போரால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் தற்போது ஒரே கொட்டகையின் கீழ் இயங்கி வருகின்றது. (க-400)

## மஞ்சள் குறியீடுகள் அழிந்துள்ளதால் வீதியைக் கடக்க பாதசாரிகள் சிரமம்

வவுனியா, ஜன.1

வவுனியாவிலுள்ள வீதிகள் பலவற்றில் மஞ்சள் நிறக் குறியீடுகள் அழிந்துள்ளதால் வீதிகளைக் கடந்து செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியா தபால் நிலையம், வவுனியா நீதிமன்றம், வவுனியா பொது வைத்தியசாலை, முஸ்லிம் மகாவித்தியாலயம், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றுக்கு முன்பாகவும், பூந்தோட்டம் பகுதியிலுள்ள வீதிகளிலும் இருந்த மஞ்சள் கோடுகளே அழிந்துள்ளன.

இதேவேளை, கண்டி வீதி, மன்னார் வீதி மற்றும் ஏ-9 வீதிகளில் உள்ள மஞ்சள் கோடுகளில் கனரக வாகனங்கள் நிறுத்தப்படாது வேகமாகச் செல்வதனால் பயணிகள் வீதியைக் கடக்க முற்படும் போது விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் பாடசாலைகளுக்கு முன்பாகவுள்ள மஞ்சள் நிற குறியீடுகளுக்கு முன்பாக சிலவேளைகளில் பொலிஸார் சமுகமளித்த தவறுவதனால் கனரக வாகனங்கள் வேகமாகச் செல்வதைக் காண முடிகின்றது. இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலை முன்பாகவுள்ள மஞ்சள் நிறக் குறியீடுகளைக் கடப்பதற்கு நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு இரண்டு வாரங்களுக்கான உணவுகள்

அக்கராயன், ஜன.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு வாரத்துக்கான உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

அண்மைய நாள்களில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக இங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரச அதிபரின் இந்தப் பணிப்புரை வெளியாகியுள்ளது.

இதேவேளை பறங்கியாறு பெருக்கெடுத்து ஓடியதால் வெள்ளப் பெருக்கு காரணமாக கடந்த ஐந்து நாள்களாக வெளியூர்த் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்த மாந்தை கிழக்கு மக்களுக்கான உதவிப் பொருள்களை அனுப்பும் பணிகள் இராணுவத்தினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் சி.பிருந்தாகரன் தெரிவித்துள்ளார். தற்போது பறங்கியாற்றிலிருந்து வெளியேறும் நீரின் அளவு குறைந்துள்ளதால் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அண்மைய நாள்களில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக இங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

சிராட்டிகுளப் பகுதியில் சுமார் 49 குடும்பங்கள் கடந்த சில தினங்களாகவே வெளியூர்த் தொடர்புகள் துண்டிக்கப்பட்டமையால் பெரும் அவலநிலையில் இருந்தன.

தற்போது பிரதேச செயலரின் ஏற்பாட்டில் உணவுப் பொருள்களும், உணவல்லாத பொருள்களும் இவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. (க-18)

## சிறார்களுக்கு பால் மா

முல்லைத்தீவு, ஜன.1

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பால்மா வகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஹிஜ்ஜிராபுரம், சின்னச் சாளம்பன், பேராறு, கற்சிலைமடு, பண்டாரவன்னி, கூழாமுறிப்பு ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பால்மா வகைகளை வழங்கினர்.

கடந்த 29 ஆம் திகதி சங்கத்தின் பொது முகாமையாளரால் இவை வழங்கப்பட்டன. (க-500)

## முகாம்களில் தங்கியுள்ளோருக்கு கூட்டமைப்பினரால் உதவிகள்

மன்னார், ஜன.1

மன்னாரில் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்டு மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள 6 இடைத்தங்கல் முகாம்களில் இந்தப் பொருள்கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணித் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உப தலைவர் சீ.செனந்தர நாயகம் ஆகியோர் குறித்த பொருள்களை வழங்கினர்.

மன்னாரில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக மாந்தை மேற்கிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவரிசைப் பட்டியலில் கே.ஸி.ஸி.ஸி. முதலிடம்



யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம், மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2012ஆம் ஆண்டுக்கன தரவரிசைப் பட்டியலில் கே.ஸி.ஸி.ஸி. அணி முதலிடத்தைப் பிடித்து, ஜோர்ஜ் வெப்ஸ்ரார் கிண்ணத்தை தனதாக்கியுள்ளது.

ஆண்டு தோறும் சென்றல் விளையாட்டுக்கழகம் அணிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தத் தரவரிசைப் பட்டியலைத் தயாரித்து வருகிறது. இதில் முதலிடத்தைப் பெறும் அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரார் கிண்ணம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

2012ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் இருபது இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

1. கே.ஸி.ஸி.ஸி. -(பங்குபற்றிய போட்டிகள்- 30, வெற்றி- 22, புள்ளிகள்- 152.3)
2. ஜொனியன்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 23, வெற்றி- 14, புள்ளிகள்- 111.4)
3. சென்றலைட்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 18, வெற்றி- 14, புள்ளிகள்- 93.3)
4. யாழ். பல்கலை அணி- (பங்குபற்றிய போட்டிகள்- 16, வெற்றி- 10 புள்ளிகள்- 92.0)
5. ஜொலிஸ்ரார்- (பங்குபற்றிய போட்டிகள்- 22, வெற்றி- 11, புள்ளிகள்- 91.4)
6. யாழ். சென்றல்- (பங்குபற்றிய போட்டிகள்-18, வெற்றி- 9 புள்ளிகள்- 70.9)
7. பற்றீசியன்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 15, வெற்றி- 9,புள்ளிகள்- 70.4)
8. மானிப்பாய் பரிஷ்- (பங்குபற்றிய போட்டிகள்- 14, வெற்றி- 05, புள்ளிகள்- 44.3)
9. ஸ்ரான்லி- (பங்குபற்றிய போட்டிகள்- 10, வெற்றி- 4, புள்ளிகள்- 41.1)
10. யூனியன்- (பங்குபற்றிய போட்டிகள்- 8, வெற்றி- 3, புள்ளிகள்- 33.7)
11. திருநெல்வேலி ஸி.ஸி- (பங்குபற்றிய போட்டிகள்- 9, வெற்றி- 3, புள்ளிகள்- 29.8)
12. திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.- (பங்குபற்றிய போட்டிகள்- 7, வெற்றி- 2, புள்ளிகள்- 29.2)
13. கிறாஸ் கொப்பர்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 11, வெற்றி- 3, புள்ளிகள்- 28.4)
14. ஓல்ட்கோல்ட்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 9, வெற்றி- 4,புள்ளிகள்- 26.8)
15. கே.ஸி.ஸி.ஸி. 'பி' அணி- (பங்குபற்றிய போட்டிகள்- 4, வெற்றி-1, புள்ளிகள்- 26.7)
16. அரியாலை மத்திய வி.க.- (பங்குபற்றிய போட்டிகள்- 10, வெற்றி-0, புள்ளிகள்- 15.1)
17. ஸ்கந்தா ஸ்ரார்- (பங்குபற்றிய போட்டிகள்- 3, வெற்றி- 1, புள்ளிகள்- 12.5)
18. நியூ ஸ்ரார்- (பங்குபற்றிய போட்டிகள்- 6, வெற்றி- 0, புள்ளிகள்- 11.5)
19. ஸ்ரீ காமாட்சி- (பங்குபற்றிய போட்டிகள்- 5, வெற்றி- 1, புள்ளிகள்- 10.7)
20. ஈகிள்ஸ்- (பங்குபற்றிய போட்டிகள்- 4, வெற்றி- 1,புள்ளிகள்- 10.7)

(ங-23)

## நியூவோரியர்ஸ் கரப்பந்து அச்சுவேலி ஸ்ரார் வெற்றி

நியூவோரியர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி, அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஒன்று நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணி வெற்றியீட்டியுள்ளது.

இந்தப் போட்டியில் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணிகளமிறங்க இருந்தது. ஆயினும் போட்டிக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் போது பன்னாலை கணேசா அணி மைதானத்துக்குச் சமூகம் அளிக்கவில்லை. இதனால் இந்தப் போட்டியில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்ட அணியாக அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் அறிவிக்கப்பட்டது. (ங-23)

## கிரிக்கெட் தொடருக்கு விண்ணப்பம் கோரல்



கே.ஸி.ஸி.ஸி. அணி வருடந்தோறும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது. அந்த வகையில் இந்தமுறை 22ஆவது ஆண்டாகவும் குறித்த சுற்றுப்போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தில் பெற்று, அவற்றை பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு கழகத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ங-86)

## சிநேகபூர்வ கிரிக்கெட்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணிக்கும், கழுகு விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. (ங-23)

# சிவன் - கலைவாணி- கண்ணகை அணிகளுக்கு கிடைத்தது வெற்றி

**சரசாலை தெற்கு இலந்தைத்திடல் இளைஞர் கழகத்தினால் நடத்தப்படும் கிரிக்கெட் தொடரின் பதிவுகள்**

யாழ்ப்பாணம், ஜன.01

சரசாலை தெற்கு இலந்தைத்திடல் இளைஞர் கழகத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகம் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு இடையே கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டு வருகின்றது.

7 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட லீக் முறையிலான இந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம், மட்டுவில் கலைவாணி விளையாட்டுக் கழகம், மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

இந்தத் தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அச்சுவேலி முரசொலி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி முரசொலி விளையாட்டுக் கழகம் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழக அணி 4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் எந்தவித இலக்குகளையும் இழக்காமல் வெற்றி இலக்கை அடைந்தது.

இன்னொரு ஆட்டத்தில் மட்டுவில் அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டன.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

101 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கலைவாணி விளையாட்டுக்கழகம் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் மட்டுவில் கலைவாணி விளையாட்டுக்கழக அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் சாவகச்சேரி நியூபவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி நியூபவர் விளையாட்டுக் கழக அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி 4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று நான்கு இலக்குகளால் வெற்றி பெற்றது. (ங-23)

# கிரிக்கெட் நடுவர்களுக்கு இனிமேல் புதிய சீருடை



வலி. வடக்கு ,ஜன.01

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கு புதிய சீருடை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இது வரை காலமும் கிரிக்கெட் போட்டிகளின்போது நடுவர்களாகப் பணியாற்றுபவர்கள் கறுப்பு முழுக்காற்சட்டையும், வெள்ளைச் சேர்ட்டும், கழுத்துப் பட்டியும் அணிவதே மரபாக இருந்து வந்தது. தற்போது இந்தச் சீருடையை யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் மாற்றியமைத்துள்ளது.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் கிரிக்கெட் போட்டிகளின்போது பணியாற்றும் நடுவர்கள், கழுத்துப்பட்டி, வெள்ளைச்சேர்ட் என்பவற்றை அணியமாட்டார்கள். பதிலாக முழுக்கை ரீ சேட் அணிந்தே அவர்கள் போட்டிகளுக்கு நடுவர்களாகப் பணியாற்றவுள்ளார்கள்.

அண்மையில் நடுவர்களுக்கான சீருடை அறிமுக நிகழ்வு நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான புதிய சீருடையை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் ரி.விமலதாசன் அறிமுகப்படுத்தினார். அதனை கிரிக்கெட் வீரரும், கிரிக்கெட் மத்தியஸ்தரும், இலங்கை வர்த்தக வங்கியின் பிராந்திய முகாமையாளருமான ஆர்.ரஜீவன் பெற்றுக் கொண்டார்.(ங-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பதற்கு எதுவுமில்லை



"ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி முதலிரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ள போதிலும், மூன்றாவது போட்டியில் நிச்சயம் வெற்றிபெறும்"- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் இலங்கை அணியின் வீரர் திலான் சமரவீர.

இலங்கை அணி இந்தத்தொடரின் முதலாவது போட்டியில் போராடித் தோல்வியடைந்திருந்த போதிலும், இரண்டாவது போட்டியில் மிக மோசமான துடுப்பாட்டப் பெறுபேற்றை வெளிப்படுத்தி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 201 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது. இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த சமரவீர மேலும் தெரிவித்ததாவது-இரண்டாவது போட்டியில் ஏற்பட்ட தோல்வியை ஒருபோதுமே ஜீரணிக்க முடியாது. ஆனால் தற்போது அந்தத் தோல்வி இறந்த காலமாகி விட்டது . தோல்வியை மறந்து இலங்கை வீரர்கள் மூன்றாவது போட்டியை வெல்லும் எதிர்பார்ப்புடன் காணப்படுகின்றனர்.

இலங்கை அணி , ஆஸ்திரேலியாவில் வைத்து டெஸ்ட் போட்டியொன்றில் இதுவரை வெற்றி பெற்றிருக்கவில்லை.இருந்த போதிலும், மூன்றாவது போட்டியை வெற்றிகொண்டு சரித்திரம் படைக்க முடியுமென்று நாங்கள் அனைவரும் நம்புகிறோம். தொடரை ஏற்கனவே 2:0 என்ற ரீதியில் இழந்து விட்டோம் அத்தோடு முக்கியமான வீரர்களையும் காயத்தால் அணியிலிருந்து இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. ஆஸித் தொடரில் இலங்கை அணி இனிமேலும் இழப்பதற்கு எதுவுமில்லை." என்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் குமார் சங்ககார,சானக வெலகெதர ஆகியோர் பங்குபெற மாட்டார்கள். அத்துடன் பிரசன்ன ஜெயவர்தன, நுவான் குலசேகர ஆகியோர் இன்னமும் உபாதைகளிலிருந்து குணமடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ங)

# கெய்லுக்கும் ஹடினுக்கும் மோதல்



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்லுக்கும், ஆஸ்திரேலிய அணியின் இலக்கு காப்பாளர் பிரட் ஹடினிற்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய பிக்பாஷ் லீக் தொடரிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் தொடரில் சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாக கிறிஸ் கெய்ல் போட்டிகளில் பங்குபற்றி வருகிறார். சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் தலைவராக பிரட் ஹடின் செயற்பட்டு வருகிறார்.இரு அணிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி வெற்றிபெற்றிருந்தது. இதில் சிட்னி தண்டர்ஸ் அணி நிர்ணயித்த 133 ஓட்டங்கள் என்ற இலக்கை சிட்னி சிக்ஸர்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து அடைந்திருந்தது.

இதில் கிறிஸ் கெய்லின் பந்துவீச்சில் பிரட் ஹடின் ஆட்டமிழந்தார். அப்போது கிறிஸ் கெய்ல் தனது நெஞ்சுப் பகுதியைத் தனது கையால் அடித்ததோடு, கங்கணம் வகை நடனத்தையும் ஆடியிருந்தார். இதன் காரணமாக எரிச்சலடைந்த பிரட் ஹடின், மைதான ஓரத்தில் வைத்துத் தொலைக்காட்சி நேர்முக வர்ணனையில் "கிறிஸ் கெய்ல் பெற்றுக் கொள்ளும் ஊதியத்திற்கேற்றவாறு துடுப்பெடுத்தாட வேண்டும். அதைவிடுத்து அவர் வெறுமனே கதைப்பதிலும், களியாட்ட நடனங்களிலுமே கவனத்தைச் செலுத்துகிறார்" என்று சூடாக பேட்டி கொடுத்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள கிறிஸ் கெய்ல், "இந்த உலகம் என்னுடையது. நான் உலகச் சம்பியன். இடதுகைத் துடுப்பாட்ட வீரரான நான் வலது கைத் துடுப்பாட்ட வீரராக ஆடினாலும் கூட பிரட் ஹடினை விடச் சிறப்பாகத்துடுப்பெடுத்தாடுவேன்" எனத் தெரிவித்துள்ளார். எனினும், இந்தத்தொடரில் கிறிஸ் கெய்ல் 6 போட்டிகளில் பங்குபற்றிமொத்தமாக 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# டோனியும் 7 ஆம் இலக்கமும்



நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணித்தலைவர் டோனிக்கும் 7 ஆம் இலக்கத்துக்கும் இடையே ஒரு அபூர்வமான தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணித்தலைவர் டோனிக்கு 7 ஆம் எண் ராசியானது. 7.7.1981 இல் பிறந்த இவர், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 7 ஆவது வீரராக களமிறங்கினார். 7 ஆம் இலக்கச் சீருடை அணிந்து விளையாடினார். மொத்தம் 7 பவுண்டரிகள் அடித்த இவர், ஒருநாள் அரங்கில் 7000 ஓட்டங்களையும் இந்தப் போட்டியில் கடந்தார். இதன் மூலம் இந்த இலக்கை எட்டிய 7 ஆவது இந்திய வீரர் என்ற பெருமை டோனிக்குக் கிடைத்தது. 7 ஆவது இலக்குக்காக இணைந்த டோனியும், அஸ்வினும் 125 ஓட்டங்களைப் பிரிக்க முடியாத இணைப்பாட்டமாகப் பகிர்ந்துகொண்டனர்.

இதுவரை 212 போட்டிகளில் பங்கேற்ற டோனி 8 சதங்கள், 46 அரைச்சதங்கள் உட்பட 7021 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிக ஓட்டங்கள் எடுத்துள்ள இந்திய வீரர்கள் வரிசையில் 7 ஆவது இடத்தில் டோனி உள்ளார். இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் சச்சின் (18,426 [illegible]) டிராவிட் (10,768 ஓட்டங்கள்) உள்ளனர். (ங)

## பாகிஸ்தான்–இந்தியா போட்டித்துளிகள்...

*நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்திய அணியின் முதல் 5 வீரர்களும் மொத்தமாக 18 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். (கம்பீர் 8 ஓட்டங்கள், சேவாக் 4 ஓட்டங்கள், ஹோக்லி 0 ஓட்டங்கள், யுவராஜ் 2 ஓட்டங்கள், ரோகித் 4 ஓட்டங்கள்)

இந்த ஓட்ட எண்ணிக்கை ஒருநாள் போட்டிகளில் ஒரு அணியின் முதல் 5 வீரர்களும் மொத்தமாகப் பெற்றுக்கொண்ட ஓட்ட எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு முன் 1983 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சிம்பாவே அணிக்கு எதிராக இந்தியாவின் முதல் 5 வீரர்களும் மொத்தமாக 15 ஓட்டங்கள் மட்டும் எடுத்தனர். அப்போது விஸ்வரூபம் கொண்ட அணித்தலைவர் கபில்தேவ் 175 ஓட்டங்களை விளாசி வெற்றிக்கு வித்திட்டார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியிலும் இந்திய அணித்தலைவர் டோனி சதம் அடித்து அணியைச் சரிவில் இருந்து மீட்டார்.

### முதல் பந்திலேயே இலக்கு



நேற்றுமுன்தினம் ஒருநாள் போட்டிகளில் அறிமுக வீரராகக் களமிறங்கிய இந்தியாவின் புவனேஷ்வர் குமார் முதல் பந்தில் இலக்கைக் கைப்பற்றிய இரண்டாவது இந்தியர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன் 2000 ஆம் ஆண்டு தமிழக வீரர் சடகோபன் ரமேஷ், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக முதல் பந்தில் இலக்கைக் கைப்பற்றினார். அத்துடன் முதல் பந்தில் இலக்கைக் கைப்பற்றிய வீரர்கள் வரிசையில் புவனேஸ்வர் குமார் சர்வதேச ரீதியில் 17 ஆவது வீரராக இணைந்து கொண்டார்.

### 'போல்ட்' அவமானம்



நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஒருநாள் அரங்கில் முதல் முறையாக இந்திய அணியின் முதல் 4 வீரர்களும் 'போல்டாகி' அவமானத்தைச் சந்தித்தனர். சர்வதேச ரீதியில் இவ்வாறு ஒரு அணியின் முதல் 4 வீரர்களும் 'போல்ட்' முறையில் ஆட்டமிழப்பது இது ஏழாவது முறை.

### மிஸ்பா '3000'



பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக், ஒருநாள் வரலாற்றில் 3000 ஓட்டங்கள் என்ற புதிய மைல்கல்லை எட்டினார். இந்தியாவுக்கெதிரான இந்தப் போட்டியில் 16 ஓட்டங்கள் எடுத்த மிஸ்பா, இதுவரை 107 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 20 அரைச் சதங்கள் உட்பட 3011 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்னும் முன்னேற வேண்டும்"



''இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித்தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றபோதிலும், எனது அணிவீரர்களிடமிருந்து இன்னும் முன்னேற்றகரமான பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றேன்'' - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்.

நேற்றுமுன்தினம் சென்னையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 227 ஓட்டங்களைப் பெற்றது. முதல் 5 இலக்குகளை 29 ஓட்டங்களுக்குள் இந்திய அணி இழந்தபோதிலும், அதன் பின்னர் களமிறங்கிய டோனி, சுரேஷ் ரெய்னா, ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் சிறப்பாக ஆடினர்.

அதன் பின்னர் பாகிஸ்தான் அணி 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றி குறித்து பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா- உல் ஹக் தெரிவித்தாவது:

இந்திய அணியை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்துவதென்பது மிகக் கடினமான ஒன்று. ஆயினும் வீரர்களின் ஒருங்கிணைந்த ஆட்டத்தின் மூலம் இந்தியாவை வீழ்த்தியுள்ளோம். இந்தப் போட்டி பாகிஸ்தான் அணிக்கு அதிர்ஷ்டகரமானதாக அமைந்தது. இந்திய அணி தனது முதல் 5 இலக்குகளையும் விரைவாக இழந்தபோதிலும், அதன் பின்னர் 227 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. உண்மையில் இந்திய அணி நெருக்குதலுக்குள்ளான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதன் எஞ்சிய இலக்குகளையும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் கைப்பற்றியிருக்க வேண்டும். ஆனால் அது முடியாமல் போய்விட்டது.

பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு மிகவும் முன்னேற வேண்டும். டோனி 16 ஓட்டங்களை எடுத்தபோது தவறவிடப்பட்ட பிடியே, அவரைச் சதமடிக்குமளவுக்குக் களத்தில் நிலைத்திருக்கச் செய்தது. இன்னிங்ஸின் இறுதிப் பந்துப்பரிமாற்றங்கள் மற்றும் 'பவர் பிளே' என்னும் சந்தர்ப்பங்களில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் இன்னும் முன்னேற்றகரமாகச் செயற்பட வேண்டும்.

இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெறவேண்டுமாயின், கடினமாக உழைக்க வேண்டும். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் தற்போது விதிகள் மாற்றப்பட்டுள்ளதால் பந்துவீச்சு இன்னமும் முன்னேற வேண்டும்.

துடுப்பாட்டத்திலும் அடுத்த போட்டியில் எங்கள் வீரர்கள் இன்னும் அதிக திறனை வெளிப்படுத்துவார்கள் என நம்புகிறேன். மிக இலகுவான வெற்றியிலக்கை 49 ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே எட்ட முடிந்தது. வேகமான துடுப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தால், இவ்வளவு சிரமம், பதற்றம் இல்லாமலேயே வெற்றியைப் பெற்றிருக்க முடியும். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஹபீஸை எடுத்த எடுப்பிலேயே பறிகொடுத்த அதிர்ச்சியில் இருந்து மீளததாலேயே பாகிஸ்தான் அணி மந்தமான துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது - என்றார். (ந)

A/L 2015
New Economics College
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுபவமிக்க யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களுடன்.

போட்டிப்பரீட்சை
விசேட
வழிகாட்டல்கள்
விற்பனை
யாகின்றன
தொகுப்பு :
த.தவசேகர்
முகாமைத்துவ உதவியாளர்
விலை 250/=
கிராமசேவகர்
விலை350/=
திறந்தபல்கலைக்கழக டிப்ளோமர்த்தெரிவு-200/= பொதுஅறிவு,
பொது உளச்சார்பு 400/=
அனைத்தும்
பிரபல புத்தகசாலையில்
இன்றுமுதல் பெறலாம்.

DCM
A/L - 2015
கலை வர்த்தகம்
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 9.00
யாழ்.நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்

BEACON
யாழ். நகர்
(27475)(14)
A/L 2015 வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்: 5 ஜனவரி
காலை 8மணி
கணக்கீடு : R. சுகிர்தன்(B.Com)
பொருளியல் : K. பிரதீபன்(B.B.A)
வணிகக்கல்வி: K.செந்தூரன்(B.Com)

அனுபவமிக்க British Council Tr.
கொழும்பு ஆசிரியர் குழுவால்.
SPOKEN ENGLISH
IELTS 6.5 Guaranteed
தனித்தனியாகவோ,
குழுக்களாகவோ பங்குபற்ற
முடியும் 0777444225
IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்
AXSHAYA CONSTRUCTION - Jaffna
Experts in Housing
கட்டடங்கள் கட்டுதல். வீடு கட்டுதல். பழைய வீடுகளைத் திருத்துதல். சுற்றுமதில் கட்டுதல். குளியலறை கட்டுதல். மாபிள் பதித்தல். தச்சுவேலைகள்.
Plumbing, Painting, Eletrical works
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும்.
குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0776679564
Jaffna.

புத்தாண்டில் புதிய சேவை ஒழுங்குடன் புதிய விசா ஆலோசனைகளுடன் திசைகாட்டி
இன்று முதல் எல்லாநாடுகளுக்கும்
- Visit visa 10 நாள்களில்
- skill migration குடும்பவிசா, sponsor, student visa
திங்கள் - ஞாயிறு (எல்லா நாள்களும்)
காலை 8.30 - இரவு 7.30 வரை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறைவீதி, ஆவரம்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016
(24717)(7)

NEC மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2015
Tamil & English Medium
கணித உயிரியல் பிரிவு
ஆரம்பம் : 02-01-2013 புதன் 3.00மணி
CHEMISTRY - வாசு வாகீசன்
PHYSICS - கருணாநிதி எடிசன்
Com.MATHS - விமலநாதன்
BIOLOGY - சுதா

விக்னா கல்வி நிறுவனம்
52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
A/L2015
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம் : 06 01 2013, 9.மணி

| | | |
|---|---|---|
| Eco : சுதாகர் | Com : யாழ். பிரபல ஆசிரியர் | Acc : M.R.லோஜிதன் |

| | | | |
|---|---|---|---|
| Tam | : குழந்தை | H/C | : பத்மராஜா |
| Log | : வாகீஷன் | Geo | : டினேஸ் |
| His | : தாஸ் | P/sc | : ஸ்ரீரங்கநாதத் |
| Chrl | : சுஜந்தன் | Drama | : சுஜீதரன் |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் முதல் அனுமதி பெறும் 100மாணவர்களுக்கு அனுமதி கட்டணம் இலவசம்.

வியாபார அபிவிருத்தி அலுவலர்கள் தேவை
நிறுவனமொன்றுக்கு மேற்படி பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
தொடர்புகளுக்கு : 0776679564
(27551)(7) AXSHAYA CONSTRUCTION, JAFFNA

கபிலா காலணியகத்தில் அதிரடி கழிவு
Bata DSI
புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளின் காலணி வகைகள் விசேட விலைக்கழிவில் பொறிக்கப்பட்ட விலையிலிருந்து எங்கும் எதிர்பாராத மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பொறிக்கப்பட்ட விலையிலிருந்து குறைவான விலையில்
KABILA SHOE PALACE
24, Kasthuriyar Road, Jaffna.
Branch: No: 13, Power House Road, New Market, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.